உ

சிவமயம்.

பெரியபுராணம்

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

திருநாளைப் போவாரென்னும்

நந்தனார் சரித்திரக்கீர்த்தனை,

சிதம்பரக்கும்மி.

இஃது

கோகுலாபுரம்

அருணாசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

திருப்பதி.

இரத்தினமுதலியாரவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1891-ல

உ

கடவுள்துணை



விளம்பரம்

5915

சலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் சென்னப்பட்டணம் பெத்தநாய்க்கன்பேட்டை முத்துகிருஷ்ணன் தெருவில் கிழண்டைவாடை கூசு நெம்பர் வீட்டில் இருக்கும் ம-ா-ா-ஸ்ரீ திருப்பதி இரத்தினமுதலியாரிடத்திலும், பண்ணுருட்டியில் புஸ்தகவியாபாரஞ்செய்யும் சின்னசாமிநாயரிடத்திலும், திண்டிவனம் புஸ்தகவியாபாரஞ்செய்யும் தணிகாசலமுதலியாரிடத்திலும், புதுவை ராஜவீதி கூசு-வது நெம்பர் வாயில் புஸ்தகவியாபாரஞ்செய்யும் அரியபுத்திரசெட்டியாரிடத்திலும், கணேசர்ஜாவளி, சாஸ்கதிஜாவளி, பழனியாண்டவர்ஜாவளி, டை இரண்டாவதுபாகம், கெல்லாயம்மநாடகம், சயிந்தவநாடகம், இரணியநாடகம், பதினெட்டாம்போர் நாடகம், இந்திரசபா, பத்மினிசபா, பவழேந்திரசபா; பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய சில்லரைக்கோர்வைகளும், இன்னும் பலவித தமிழ்-தெலுங்கு வயித்திய ஜோதிடங்களும், பெரியோர்களால் செய்யப்பட்ட சாஸ்திரங்களும், புஷ்பரதச்செட்டியார்புஸ்தகங்களும், நாவலர்புஸ்தகங்களும், டிபோபுஸ்தகங்களும், இன்னும் வேண்டியபுஸ்தகங்களும் விலை சகாயமாக விற்கிறபடியால், வேண்டியவர்கள் மேற்படி யாரிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

ம-ா-ா-ஸ்ரீ. தி-இரத்தினமுதலியார்.

உ

திருச்சிற்றம்பலம்

கதையின் வரலாறு

திருவெண்ணீறுதரித்த பரமசிவனார் திருக்கொலுவீற்றிருக்கும் வெள்ளிமலையானது இமயமலையின் பக்கத்திலிருக்கின்றது. அது பெரியோர்கள் பரிசுத்தமனம்போலவும் படிகம்போலவும் பலவுலகிற் புண்ணியங்களெல்லாம் திரண்டிருந் தொருவடிவாகப் பிரகாசிக்கின்றதுபோலுமிருக்கின்றது அதில் இருக்குயசுசாமம் அதர்வணம் என்னுநான்குவேதங்களின்ஓசையும் வித்தியாதரர்கள் வீணையோசையும் யானைகளுடைய முழக்கமும் வானதுந்துபிமுழக்கமும் இடைவிடாதிருக்கின்றன அன்றியும் தேவர்கள்சிரமாலைகளும் கற்பகமாலைகளும் மற்பலமுனிவர்கள் அர்ச்சனைசெய்து சார்த்துமலர்மாலைகளும் அம்மலைப்பாங்கங்கெங்கும் நெருங்கியிருக்கின்றன அது அமரர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடாகருடர் - கின்னரர்-மிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர் விஞ்ஞையர் - பூதர்-பைசாசர்-அந்தரர்-முனிவர்-உரகர்-ஆகாயவாசிகள்-போகபூமியர் என்னும் இப்படியெனக்கணங்களும் அடக்கப்படத்தக்கது அக்கயிலாயமலையின்மேல் கோடானுகோடி சூரியப்பிரகாசம்போலும்விளங்குகின்ற நவரத்னங்கள்பதிக்கப்பட்ட திருக்கோயிலுக்கு முதற்கோபுரவாயிற் காவற்றலைவர் நந்திதேவர் அவர் பரமசிவன் திருப்பணிவிடைகளுக்கும் திருக்கொலுவிற்கும் அதிகாரத்தலைவர் அவர் உடைவாளும் திருப்பிரம்பும்பெற்றுக் கைலையைக் காக்கப்பட்டவர் தேவர்முதலான யாவருக்குமேலானவர் பரமசிவனிடத்து அதிகபத்தியும் அன்புமுடையவர் இவரால் இரவும்பகலும் இடைவிடாமற்காக்கப்பட்ட வெள்ளிமலையென்னும் கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களிலும் நிச்சயசமயம் சைவசமயமென்றும் எக்கடவுளிலும் பரமசிவனே மெய்க்கடவுளென்றும் அறிந்தவர் உபமன்னியமகாமுனிவர் இவர் [illegible]யுடைய தலையின்மேல் தம்முடைய கிருபையால் திருப்பாற்கடலைக் கொடுத்தவர் சிவனிடத்தில் இடைவிடாதவன்புள்ளவர்

இந்த உபமன்னியமகாமுனிவர் தம்மிடத்தில் அடியார்களும் பெரியோர்களும் முனிவர்களும் புடைசூழ்ந்திருக்கின்ற சமயத்தில் அவ்விடத்தில் ஆயிரஞ்சூரியகிரணங்கள் ஒன்றாகத்திரண்டாற்போலும் ஒருபிரகாசந்தோன்ற அங்கிருந்தவர்களெல்லாரும் உபமன்னியமகாமுனிவரைநோக்கி இதென்னஆச்சரியம் இப்படிப்பட்டபிரகாசந்தோன்றவேண்டியகாரணமென்னவென்றுகேட்க;

கதையின் வரலாறு.

உபமன்னியர் சிவனைத்தியானித்துச்சொல்லுகிறார்.

தென்றிசையில் ஆதனூரில்அவதரித்த திருநாளைப்போவார்என்னுந் திருநாமமுடையவர் சிவனதுதிருவருளால் வருகின்றபொன்று இருகரமுஞ் சிரமேற்குவித்து அத்திசைநோக்கி வந்தனஞ்செய்து ஆனந்தக்கண் ணீர் அம்பகங்களைந்திருந்த உபமன்னியயோகிமபோது மற்றவர்கள் தங்க ளுக்குண்டாகிய சந்தேகந்தீரும்படி கேட்கத்தொடங்கினார்கள்.

எங்களாண்டவருகிய முனிவரே சிவனுடைய திருவடிகளையல்லாமல் மற்றொருதெய்வத்தினடிகளையும் வணங்கமாட்டீரே இப்போது வணங்க வேண்டியகாரணமென்னவென்று முனிவர்கள்கேட்க உபமன்னியர்சொ ல்லுகிறார் கேளுங்கள்பெரியோர்களே முனிவர்களே மற்றுமுள்ளவர்களே பரமசிவனை தரிக்கப்பட்ட திருமாலையும் திருவெண்ணீற்றனையும் அணிகி ன்றவர் மனவிடமில்லாதுமிறையும் கொள்ளிடநதிசூழ்ந்த சோழவளநாட் டிலிருக்கும் மேற்காட்டில் ஆதனூரில் தீண்டப்படாதவர்குலத்தில் சேழ் ந்த செந்தாமரையுமபத்தியாருமபோலும் நந்தனென்றொருவர் பிறந்தார் அவர் விவேகசூட்சியும் வெட்டிமைத்தனமாகிய காணியாட்சியும்உடையவர் இ வர் தம்மவசாரத்தின்மையும் நன்மையுஞ்செய்து மலம்பெய்துதாம்சிவபூசை செய்து சிவாலயங்களுக்கு அளவுயும் பேரிகை மத்தளங்களுக்குத் தோலும் வாருமயாழுக்கு நரம்பும் சுவாமிக்குக் கோரோசனையும் முறையாகவும் இறை யாயும்கொடுத்துவருவார் சிவாலயத்தில் அந்நிசந்நிதிக்குப்போய்த்தூரத்தி லிருந்து மனமுருகி ஆடுகிச் சிவனைப்பாடியாடி வருகிறநாளில் திருப்புன் கூரில் பரமசிவத்தைத்தரிசிக்க ஆதனூரிலிருந்து திருக்கோயிலின்திருவா யிலினின்று சுவாமிதெரிசனைகாண ஆவலாகவும் காவலாகவும் வணங்கிப் பாடும்பொழுது பரமசிவனுர் சந்நிதிக்கு முன்னிருக்கும் நந்திகேசுவரரை விலகும்படி செய்து காட்சிகொடுத்தருளினார்,

நந்தனார் சுவாமிதெரிசனைசெய்து வழியில் ஒருபள்ளத்தைக் கண்டு அதைப்பெருங்குளமாகவெட்டித் தம்முடையஆதனூர்போனாரஞ்சேரிக்குப் போனார் இவ்வாறு பலஸ்தலங்களை வலஞ்செய்து ஆத்திமலரணிந்த சிவ னைப்பத்திசிதம்பரத்திற்குக் செல்லமனம்வந்து தாமுடைய சாதி கோயி லுக்கு உட்புகும்படியாக யோக்கியமில்லையென்று விசனமடைந்து நாளைக்குப்போ வோமென்று சொல்லியிருந்தார் சிலபகலிருந்தமையாலும் போகக்கூடாமை யால் அன்றேல்லாம்சென்றும நாளைப்போவோமென்றபடியால்அவருக்குத் திருநாளைப்போவாரென்று பெயர்வந்தது அதன்பிறகு திருநாளைப்போவார் சி தம்பரமடைந்தபின்ன சுவாமி அவருக்குக் காட்சிதந்தும் இதனடியில் வரும் கொண்டாட்டசரித்திரத்தால் தெரிந்துகொள்ளலாம்.

உ

சிவமயம்

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

கற்பகவிநாயகர்துதி

காப்பு வெண்பா

சுந்தன்றனையளித்த காதலனார்பேருபெற்ற
நந்தன்சரித்திரத்தை நானியம்பச்-சுந்தரஞ்சேர்
தில்லைமணிகோபுரத்திற் றேடிவளர் கற்பகத்தாள்
அல்லும்பகற்றுணையேயாம்.

மூக்குறுணிவிநாயகர்துதி

விருத்தம்.

நந்தணிகரத்தான்றில்லை நாயகனருளால்வந்த
கந்தன்மூக்குறுணியான்றன் கனிகழ பொற்றாள்வணங்கி
நந்தன்பேரருட்பாலுண்ட நற்புகழ்ச்சொலிப்பின்பேரா
நண்புடனுதினாளும் நலமுடன்வாழ்குவேனே.

சபாபதி தோத்திரம்

கலிவிருத்தம்.

தக்ககீர்த்திகொள் நந்தன்சரித்திரம்
மிக்கதையை யெடுத்தேவிளம்பிட
செக்கர்கோனியன் தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனுந் தாள்கள்சிரங்கொள்வாம்.

சிவகாமி தோத்திரம்

விருத்தம்.

பாம்பணைத்தந்தையாகப் படைத்துப்பின்பெருங்காணப்
பாம்பினைப்பணியாக்கொண்ட பரையருட்பாதமேத்திப்,
பாம்பினிற்புலியும்பாம்பும் பார்த்திடநந்தனுங்கண்
பாம்படிமுத்திதந்த வருங்கதைப்பகருவேனே.

சுப்பிரமணியர்-செய்வானை-சரஸ்வதி
இலக்குமி-விஷ்ணு இவர்கள் துதி

விருத்தம்.

சச்சிதாநந்தசதாசிவனைச்சார்ந்த நித்தியாநந்தநந்தன்
உச்சிதக்கதையைக்கீர்த்தனையாக வுலகெலாந்துதித்திடச்சொல்ல
அச்சிலைவேற்கையறுமுகன்தெய்வ யானைசெங்கலைமகள்கமலை
பச்சைமால்மற்றும்பரவியதேவர் பாதபங்கயம்பணிகுவனே.

௬௩-நாயன்மார் தில்லைமூவாயிரவரிவர்கள் துதி.

விருத்தம்.

வாதவூரடியாரோடு மற்றறுபத்துமூவர்
பாதமேவணங்கித்தில்லைப் பதிதனின்மூவாயிரவும்
போதமூவாயிரத்தோர் பொன்னடிகயமுன்னி
ஓதுநந்தன்சரித்திர முரைத்திடத்துணிந்தனமே.

அவையடக்கம்

விருத்தம்.

சிற்பிகள்காண்போர்சிலைதயுருவக்கச் செப்புநல்லின்புரத்திட்டும்
விப்பனங்கண்ட வழிவிலாவெனமூதும் விதமெனமுத்தமிழென்னுஞ்
சொற்புகழ்க்கல்வித்துறையெலாந்தெரிந்த சாபநற்புலவர்முன்கருதிப்
பொற்புற விசைக்குங்கீர்த்தனையிதனை புவியிசைமகிழ்ப்பர்களம்மா.

விநாயகர் துதி.

தரு-இராகம்-மோகனம் ஆதிதாளம

பல்லவி.

கணநாதா சரணம் காதநருள்
கணநாதா சரணம்

அநுபல்லவி.

பணமார்செடன்றூங்கிய பார்மீதினிலே — சேரும்
குணமாரநந்தன்சரித்திரக்கிருபைகண் — பாரும் (கண்)

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலா தூயவேதாந்த — நாதா
துலங்குமுனிவர்மனத் துளைருத்தருட் — போதா
நல்லமோதகமுதல் நாடிமூகர் — விநோதா
நாயேன்சொல்லுந்தமிழை நாடிரட்சிக்குந் — தாதா (கண்)
அம்பரமான்மன்று ளாடும்பர — னளிக்க
அணைதொடிபிஞ்ஞகவல்மாதியனங் — களிக்க
உம்பர்பிரானுகந்து உயர்மாங்கனி — யளிக்க
உள்ர்தளராமலுண்ட முதல்வதுய — ரொழிக்க (கண்)
தேசோங்கரவதநச் சிகரமேலைக் — கோபுரத்
தேவிற்றிருக்குமெங்கள் தேவாருண்ட — வாதர
பூசித்தவர்க்குவரம் புகுந்தருளு — மாதர
பூமிசைநாடகஞ்செய்யுந்தவோ — மாகர (கண்)

புராணிகர்சொல்-விருத்தம்.

வளப்பெறுதருமமோங்கியவாத
வானூரிதினில்வாழ்ந்திடும்புலையர்
உளமகிழ்ந்தெங்கள் குடிப்பெயர்விளங்க
வுதித்தநற்றீபமேமணியே
களங்கிலாக்கதிரோயெனப்புகழ்ந்தோதக்
கழித்தசீர்நந்தனார்சரித்திரம்
விளம்பிடமுதலிற்றோடையம்பாடித்து
மேன்மைபுமிகப்படித்தனனே

தோடயம்.

இராகம்-நாட்டை-ஆதிதாளம்

திருவளர்தருமாத — னூரார்சேரிநிலைக்குடிலவதார
தருமநெறிநந்தனார்ப் — பேரார்சரித்திரமதனைச்சொல்லவே-ஆ-ஆ
அருள்வளர்கஜமுக — சாமிஅம்பிகைதந்தாளுஞ்சாமி
அங்குசங்கரதலசாமி — அப்புயத்தாணிதந்துணையே செய
வண்டணைரிமாமலர்த் — தாரணமண்டலவாழ்த்தியதிரன்
பண்புமெளியற்கு — தாரன்மன்னுங்கதைசொல்லவே-ஆ-ஆ

புண்டரீகபுரத் தண்டலர்மாமன் — ஈசன்புராரியுளமகிழ்நேசன் வாசன்தாமரைத்தாள்கடுனையே செய்

விருத்தம்.

சங்கரன் றனக்கும்சண்முகன்றனக்கும் சதுர்முகப்பிரமனூர்தனக்கும்
பங்கயமார்க்கும்காமனையட்கும் பார்கட்பாவலர்தமக்கும்
தங்கிட வட்டவசுக்களானவற்கும் சதுர்மறையோதுமந்தணர்க்கும்
பொங்கியமூவாயிரர்நந்தனருக்கும் பொதுப்படமங்களம்புகல்வாம்.

மங்களம்.

தரு-இ-ம்-அசாவேரி-அடதாளம்

பல்லவி.

ஆதிமத்தியாந்தனுக்குமங்களம் — எங்கள்
ஆனந்தநந்தனர்க்கும்மங்களம்

அநுபல்லவி,

பாதிமதிநதியும் பாம்பும்புலி — யரியும்
சோதிக்குழையணியுந் துலங்கவருட் — புரியும் (ஆதி)

சரணங்கள்.

சில்லைவடிவழகிற் சிறந்தஒருபெண் — ணுக்கு
சில்லவினைத்தயரசி ராமசிக்காவத்தைப் — போக்கி
தல்லைபச்சமந்துபெரு மடியிலொருகாற் — றாக்கி
மாநடனங்கள்செய்த மாயமானினை — யெய்த (ஆதி)

குருபரனைசருக்குங் குறைகட்பாக — ருக்கும்
அருணகிரிநாதனுக்கும் அருள்செய்விசாக — ருக்கும்
ஒருமுருகாவென உளங்களித்தவ — ருக்கும்
உம்பர்கோவுக்கந்த யராசனைத் — தந்த (ஆதி)

சக்கரைமுக்கனியவல் தனைநுகர் — நாதர்க்கும்
சகலதேவர்நாகருஞ்சகலவசுக்க — ளுக்கும்
பக்குவமாகவிகத பாடுஞ்சங்கீத — ருக்கும்
பார்மகட்கும்பங்கயப் பாவையற்கும் — மையை (ஆதி)

பெரியபுராணச்செய்யுள் விருத்தம்.

திருமறையோர்புராண மனைவபதின்மறன்றுசிவ
வேதியாரனைவழிப்பட்ட புராணம்பீரிரண்டு.
குழன்மாமாத்திரசொன் றுமொழிமன்னர்
குறுநிலமன்னவனா வாணிகர்குலத்தையவர்

திருமைசெறிவேளாளர் பதின்மூவரிடையர்
இருவர்சாலியர்குயவர் தயிலவினையாளர்
பரதவர்சான்றார்வண்ணார் சிலைமறவர்நீசர்
பாணரிவரோரொருவராம் பகருங்காலே

உபமன்னியபகவான் ரிஷிகளுக்குச்சொல்லியவசனம்.

இவ்வுலகில்பெரிதாகிய வேதசாஸ்திரங்களுக்குள்ளே மிகவுஞ்சாரமாகியபரமசிவபக்தியையுண்டுபண்ணுகிறபக்திவிலாசத்தை உபமன்னியபகவானானவர் அனேகரிஷிகள்கேட்கச்சொல்லுகிறார் பெரியபுராணமென்றுசொல்லப்பட்டநூல்சேக்கிழார்சுவாமிகளாலே செய்யப்பட்டது ஸ்காந்தபுராணத்திலும் இன்னமனேகபுராணங்களிலுஞ்சொல்லப்பட்டபக்திமார்க்கங்களாகிய கடலிலே நீரைக்கையாலள்ளிக்குடித்ததுபோலச்சிலதுகீர்த்தனங்களினாலும் விருத்தங்களினாலும்சிவபக்தர்கள்சரித்திரங்களைக்கொண்டாடுவதுபோல்உளறினேனென்றுசிதம்பரகோபாலகிருஷ்ணையனெபெரியோர் அடிவணங்கி ஆனந்தம்பெருகிச்சொல்லியதிருநாளைப்போவார்சரித்திரத்தையாவரும் வினவிகேட்கும்படிசிரம்வணங்கிவினவினேன் சிவரகசியம் ஸ்காந்தம் பாரதம் பாகவதம் பகவற்கீதை முதலாகிய பக்திஞானவைராக்கியசாஸ்திரங்களிலேமிகவுஞ்சாரமாகியபரமசிவத்தை பக்திபண்ணாமல் இதரவேதபாரங்கதனாயிருக்கின்றபிராமணனைப்பார்க்கிலும்பரமசிவம்பாதாரவிந்தபக்திபண்ணுகிறவன்பறையனாயிருந்தாலும்பதினான்குலோகத்தையும் பரிசுத்தம்பண்ணுவானென்று உபமன்னியபகவான்சொல்லஅதற்குரிஷிகள்சொல்லுகிறார்கள் பக்திஞானவயிராக்கியங்களைத்தெரியப்படுத்தாநின்றவேதபுராணங்களைப்பார்க்க அரியராம் அன்றியில்அவிவேகிகளாயிருக்கிறசண்டாளர்களுக்கு எப்படிபக்தி வருமென்று ரிஷிகள்கேட்க உபமன்னியபகவான் சொல்லுகிறார்,

உபமன்னியபகவான் ரிஷிகளுக்குச் சொல்லுகிறார்

நொண்டிச்சிந்து-இ-ம்-புன்னாகவராளி.

பழனமருங்கணைபுப்புலைபாடியதுகூரைவீடுதனில் சிறையோபடர்ந்திருக்கும்அதைச்சுற்றிலும்மாய்கள்குலைத்திருக்கும் பறந்தோடிவட்டமிடும்இளம்பச்சைப்பிசினைதமேலிச்சைகொண்டு கோழிகூவுங்கூக்குரலும்பாழுங்சொல்லையருகினில்வெள்ளெலும்பும் நரம்புங்குவித்திருக்கும்சிறுகத்தைகடைம்வலுத்திருக்கும் தோலுருங்கேணிதனில்வெதும்தொல்லைப்படும்வாடைசொல்லரியப்பரம்போஅடித்திருக்குவயற்பக்கங்களில்மெத்தநொக்கெலும்பும் கிழித்தோல்நரம்புகளும்

அவர்க்கிணையில்லைசிறுமீனுலரும்தெருவில்விளையாடிக்கொண்டு அவர்
தெந்தினம்பாடுவோர்சுந்தரமாயிலுப்பைமணியையாயில்கட்டி இண்டந்
தலைகளில்பூண்டிருக்கும்சங்குதோடுகாதணியும்அருந்தாலடமேயவர்
தாலிடமாய்மணிபோதரித்திருப்பார்தெருவாசற்புரங்களிலே சிக்கிக்
கொண்டுகொண்டாட்டமாயிருப்பார்கையைகொட்டிக்கொண்டுதனக்
கிஷ்டமுடன் மதுவுண்டு கெக்கலிப்பார் பறைவாத்தியமும் வெகு
நேத்திபுடன்இருககுமபுலைபாடி அந்தீசன்திருவடி நேசமுடன்தரி
க்கும்புருபுலையர் அவர்சாதிமுறைமைதவராமல்நந்தனாரவாபெயராம்
வெகுநல்லவராயிருந்தத்தொல்லுலகில் அவரோசிவனடியார் அவர்க்காரு
மெதிரில்லைதாரணியில்கோடிகோடிஜென்மங்களோமுன்னங்குற்றம
றச்செய்தநற்றவமே அவதாரமானதுவோ ஈசன் அன்புபுரியும்பேரின்
பசுகம்கொள்ளைகொள்ளவோபிறந்தார் திருக்கோயில்வலஞ்சுழன்றுவ
துடன்கொய்யும்பணிவிடைகள்ஈசன்சிந்தைமகிழ்ந்துகனிந்திடவெ
மத்தளபேரிகைக்கும்இசைவார்கொடுத்தும்புறந்தோல்கொடுத்துமர
வாமலேதினமும்நல்லவாசம்பெருகுங்கோரோஜனையும்தேவாலயங்க
ள்தோறும்தந்துபித்தமுறுகிய பத்திவெள்ளம் பொங்கோடிககங்குக
றைஎன்றுபேதமறியவொண்ணாதுகண்டோர்சாதியில்நீச்சரவர்பேணிச்
சாருந்தொழின்முறையாரும்புகல்திருப்புன்கூர்ச்சென்றரனைக்கண்டு
சேவித்திசைபாடிப்பாவித்தபின்தில்லைச்சிதம்பரத்தைக்கண்டுசேவி
க்கவேண்டுமென்றுவலுடன்நாளைப்போவேனென்றாராம் தன்னைநா
டும்பறையர்களோடிவந்து அன்னை போகாதே நமக்காண்டைபொ
ல்லாதவன்வேண்டிக்கொள்ளான்பப்பரசாதியுண்டே இன்னபாடுப
டுமுழுக்காடுமங்கேநமக்குந்திருநாளோ அந்தஞாயமுண்டோஎன்ன
மாயமிதுவென்றேதடைசெய்தார்சிவன்வேடிக்கைத்தானென்று நா
டிக்கொண்டே அறியாதுபோலிருந்தசெம்பொன்னம்பலத்தாடியைக்
கும்பிடவேஆதனூர்தனிலிருந்துகிடும்அம்புபோலப்பறந்தையரின்
றித்தில்லையருகில்வந்தார்மனந்தேறிக்கொண்டார்குறையாரிக்கொண்
டார்கெண்டாமணியோசைகாதில்கேட்குதென்று ரதைப்பார்க்கவெ
ண்றேகொண்டாட்டமாகவந்தார்கைகளைக்குவித்துக்கொண்டேதனக்
கம்பிட்டதோவென்றேமனமகிழ்ந்தார்தெருவீதியிலேவந்து காவலு
டன்கண்டார்களையாதிஇருக்கண்களிலானந்தம்பொங்கிடவேநின்றார்
மகிழ்புறத்தேவெதநேத்திவென்றுநிதைப்பார்த்த தில்லைபணிந்தார்
பாலவர்ாய்நல்லபாக்கியசாலிகளாகுமென்றார்இதுதானோதில்லைப்பதி
யென்றுஎக்கலித்தாராடிககெக்கலித்தார்ஐயாவுன்சந்நிதியோநான் ஆ
சைகொண்டுவந்தேனேசமுடன தெருவில்பொடித்தூளை அள்ளித்
தேகமுழுதிலுந்தாகமுடன்தரித்தார்திருநீறாய் நாலுசாஸ்திரவேதங்
கள்பார்த்துணரும்பெரியோரிருக்குமிடம் இந்தப்பேயனிருப்பதுஞா
யமல்லவோபறைச்சாதிதில்லைநாதன்தரிசனமாதரவாயப்பண்ணப்
படுபாவி அந்தப்பாரிலிருப்பதுசீரல்லவேஎன்றேகுளத்தோரம்புக்கு
ஏங்கிநின்றார்ஐயாப்பெருங்கவலைகொண்டு உள்ளங்குழைந்திடவெள்
ளமெனக்கண்ணீர்கணைபுரள இருகைதொழுதாரவர் மெய்தொழுதார்

கிழேபுரண்டழுதார்ஒன்றுங்கேள்விமுறையில்லையோகாதாவென்றே தலைகுனிந்தார்எந்தன்வேதனையைக்கண்டு ஆதரிக்குந்தெய்வமிடை யாதோபாவி சித்தந்தெளியவிரத்தந்து வாவென்றழைப்பாரோவி ண்ணில்வானவர்கள்போற்றுஞானபிலாக்ஷணசபைநடனம் தண்ணீர் காட்டகளித்திடநாயடியேன்வருந்தித்துதிப்பேனோஎந்தன்கலஞாரு ருகுதுவினைனையேஅடடாயிதென்னவென்றுஉயிர் அந்தகர்விதியை ச்சுற்றிவந்தார் இரவும்பகலோ யாரதைநாசக்கண்டு விசுவாசமுடன் பாலகிருஷ்ணன்பணியுந்திருப்பாதமுள்ளதில்லைநாயகனே கனவிலு ருவாகிவந்துகாட்சிகொடுத்துக் கடாட்சித்தபின் எரியினிடைமூள்கி வெகுஇன்பம்பெரியஅன்ப நடன்வேதமுனிவடிவாய்த்தில்லைவேதி யர்கைதொழுதார்அங்கம்புளகிதயாய்ச்செம்பானம்பலத்தாடியசம்பிர மத்தைக் கண்டாரதிக்திலரால்.

கீர்த்தனம்-இ-ம-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

பல்லவி,

நீசனாய்ப்பிறந்தாலும் போதும்
ஆசையுடனம்பலவனடயிருந் தாலும் (நீச)

சரணங்கள்.

கோடிலாத்தவங்கள் புரிந்தாலும்-தங்கள்
குலவண்மைதவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்-மாயை
விலகாதுஒருநாளுந்துலையாது துன்பம்நீசனாய்
களவுகொலைசெய்து வந்தாலும்-பழிக்
காரருடன்எந்நேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும்-நல்ல
மனிதனவனிடமாகமறவியனாய் காது-நீசனா
எத்தகருமங்கள்செய் தாலும் எங்கு
மிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரக்கீர்த்திமிகுந் தாலும்-எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும்பாதம் நினையாதோன்-நீசனா

வசனம்.

இப்படியேபத்திசெய்தால்போதும்மற்றசாதிவருணாச்சிரமங்களினாலேஒன்றும் பிரயோசனமில்லையென்றும் ஒருஇதிகாசத்தைச்சொல்லுகிறார்பூர்வத்திலேதில்லைவெட்டியானென்றஜாம்பவனென்றும்ஆதநூர்நந்தசாம்பவனென்கிறதிருநாளைப்போவானென்றும்பெயர்பெற்றஇம்மூன்றுபேர்களுந்திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்கள்இம்மூன்றுபேர்களில்நந்தசாம்பனென்பவர்மாத்திரம்தில்லைமூவாயிரம்பேர்களும்பார்க்கச் சாபப்பிரவேசமானதொன்றுசொல்ல ரிஷிகளெல்லாரும்ஆநந்தமடைந்துஉபமன்னியமகாரிஷியைப்பிரதட்சணஞ்செய்துபாடிவணங்கிஅஞ்சலிசெய்துஓய்சுவாமி எல்லோரும்பார்த்திருக்கையில்முத்தியடைந்த திருநாளைப்போவாரென்னும் பெயர்படைத்துப்பேறுபெற்றசிவபத்தருடையசரித்திரத்தைச்சொல்லுங்களென்றுரிஷிகள்பிரார்த்திக்குங் கேட்கும்போது உபமன்னிய மகாரிஷியானவர்மிகவுஞ்சந்தோஷமடைந்துஈஸ்வரனுடைய குணங்களைவர்ணிப்பதைபார்க்கிலும்ஈஸ்வரபத்தர்களுடையகுணங்களைசொல்லுகிறதுமெத்தவும்புருஷார்த்தமென்றுசொல்லத்தொடங்கினார்சிதம்பரத்துக்குநாளைக்குப்போவேனென்றுசிலதுநாள்நந்தன்சொல்லிவந்தபடியாலநந்தனுக்குநாளைப்போவாரென்றுநாமதேயமுண்டாச்சு ஆகிலும்ஈஸ்வரனுடையகுணங்களைச்சொல்லினாலும்சொல்லலாம் பத்தர்களுடையகுணஙகளைச்சொல்லயாவர்க்குந்தெரிந்தமட்டுஞ் சொல்லுவோமென்றுமயிர்சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர்வடித்து மனங்களித்துப்பரமசிவனைநினைத்துவாயால்துதித்து ஆத்துமா ஆத்துமிகளாயிருக்கின்றதாபத்திரியங்களினாலேவருத்தத்தைபடைந்திருக்கின்ற செந்துகளுர்க்கு அமிர்தவருஷிதம்போலே நந்தனாருடைய புண்ணியத்தால் அமிர்தத்தை வருஷிக்கத்தொடங்கினார்,

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

நந்தன்சரித்திரமானந்தம் ஆனாலுமத்தி
யந்தம்பக்திரச கெந்தஞ்சொல்லச்சொல்ல — நந்தன்

நந்தன்சரித்திரம் வெகுஅர்த்தஞ்சிவனாருக்குச்
சொந்தந் துலையும்பவபந்தம் கேட்டபேர்க்கு — நந்தன்

ஏதுஇவனைப்போலேசாது பூமியிலிருக்
காதுஅரிதுஇரு காதுபடைத்தபேர்க்கு — நந்தன்

வாடிமனதிளகிப்பாடி அரகராவென்
றாடிகனகசபை நாடிச்சேருவேனென்ற நந்தன்
அண்டர்கொண்டாடுஞ்சோழமண்டலந்தன்னைசூழக்
கொண்டதேற்காநாட்டில் விண்டஆதரிநூல்வாழ் நந்தன்

கீர்த்தனம்-இ-ம்-மாஞ-ஆதிதாளம்,

பல்லவி.

திருநாளைப்போவார்சரித்திரம்
தேனிலும்பாலிலு மினியதுகண்டீர் திருநா
சித்தமுருகிய சிவயோகிகளுங்
கர்த்தனிதுவென் றனுதினம்பணியும் திருநா
மேதினிபுகழுமாதநூர் விளங்கவந்தமாதவஞ்சாதனைபெருகிய
பேதமில்லாதவன் வேதகுருபராதனைப்பணியும் திருநா
மனதில்குற்றமில்லாதவன் நிந்தைவஞ்சனை மாயகைசொல்லாதவன்
கனவிலும்நினைவிலும் சிவபதம்குருபதம் திருநா
கருத்துணைகளித்திடப்பெருத்திடவாசனும்
சாதிமுறைதவறாதவன் பவசாகரத்திடைமுழுகாதவன் திருநா
பூதமாயாதிக ளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிது வல்லவென்றறிந்திடும் திருநா

பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்.

பகர்ந்துலகுசீர்போற்றும் பழையவளம்பதியாகும்
திகழ்ந்துபுனற்கொள்ளிடம்பொன் செழுமணிகடுரைக்கரத்தான்
முகந்துதரவிருமருங்கு முளரிமலர்க்கையேற்கும்
அகன்பணைநீர்நன்னாட்டு மேற்காநாட்டதநூர்

வசனம்.

கொள்ளிடத்துக்குச்சமீபமாகியஉலகமெல்லாம்புகழும்படிக்கீர்த்திபெற்றிருங்கின்ற அமராபதிஅளகாபுரிபட்டணத்தைத் தோற்கச்செய்யும்மாடமாளிகைகூடகோபுரத்தோடும்அணிமாதிகள் வெள்ளாட்டிகள்வேலைசெய்யும்செல்வத்தோடும்வேதவேதாந்தத்துவஞானமறிந்துசாட்சாத்காரம்பெற்றவேதியரோடும்மற்றமூன்றுவருணச்சி

ரமங்களாலேசூழப்பட்டு பூலோகத்திலதிகமென்று சொல்லப்பட்ட
ஆதனூரென்னும் கிராமத்துக்குவெளியில் நடுநஞ்சை நிலங்களாலே
சூழப்பட்டிருக்கின்ற கடைசாதியார்குடியிருக்குஞ் சேரியைக்கொண்
டாடிச்சொல்லுவானேனென்றால் ஸ்காந்தபுராணத்தில் அஞ்சுபோக
கண்டத்திலே சிவபத்தன் குடியிருக்குஞ் சேரியைக் கைலாசமென்
று வருணித்துச் சொன்னபடியால் உபமன்னியபகவான் மிகவுங்
கொண்டாடிச் சொல்லுகிறார்.

சி ந் து.

பழனமருங்கணையும்புலைப்பாடியது கூரைவீடுதனில் சுரையோப
டர்ந்திருக்கும்அதைச்சுற்றிலும்நாய்கள்குலைத்திருக்கும டரந்தோடி
வட்டமிடும்இளம்பச்சைப்பிள்ளைதயேப்பிச்சைகொண்டுகோழிகூவுங்கூ
க்குரலும்யாழுங்கொல்லையருகினில்வெள்ளெலும்பும்நரம்புங் குவித்
திருக்கும்பலகெட்டிமிதித்திநிங்குட்டைகளில் நண்டோடாகுடியிருக்கு
ம்சிறுநத்தை நமடம்வலுத்திருக்கும் தோலூறுங் கேணிகளில்வெகு
தொல்லைப்படும்வாடைசொல்லமுடியாப்பரம்பே அடித்திருக்கும்வயற்
பக்கங்களில்மெத்தநொக்கெலும்பும் கிழித்தோல்நரம்புகளும் அவர்க்
ஈனமில்லைசிறுமீனுலருந்தெருவில் விளையாடிக்கொண்டுஅவர்தெந்தி
னம்பாடுவோர்சுந்தரமாம்இலுப்பைமணியரையில்கட்டிஇண்ட ந்தலை
களில்பூண்டிருக்கும்சங்குதோடுகாதணியும் அருந்தாவடமே யவர்தா
விடமாய்மணியோதரித்திருப்பார்தெருவாசற்புறந்தனிலேபசிக்கொண்
டுகொண்டாட்டமாயிருப்பார்கையைக்கொட்டிக்கொண்டு தனக்கிஷ்
டமுடன்மதுவுண்டுகெக்கலிப்பார்பறைவாத்தியமும் வெகுநேத்தியு
டனிருக்கும்புலைப்பாடிஅதில்நாதன்றிருவடிநேசமுடன்தரிக்கும் ஒ
ருபுலையர்அவர்சாதிமுறைமை தவராதவராம் நந்தனாரவர்பெயராம்.

வ ச ன ம்.

இவ்விதமாய்க்கடையரிருப்பின்வரப்பினில்வாழ்வார்இப்பரிவுட
ஞ்சிவன்கழற்கேவிளைத்தவுணர்வோடுமெந்தராபதிசூழ்புலமையாண்
டதொழிலனுமயத்திலொப்பியநந்தனாரொருவருண்டாயிருக்கும்புலை
ப்பாடியில்பரமசிவபாதாரவிந்தத்திலமிருந்த அந்தரங்கபொருந்தி
னவராகியநந்தனார்மிசபத்திபுரிந்திருந்தார்வீச்சுடன் சேற்றில்விழுந்
தாலும் பின்னைப்பூச்சிமேல் சேரொட்டாது அத்தன்மைபோல எத்
தனைகாரியமிருக்கினும் முத்தியளிக்கும் கர்த்தனாகிய அத்தனை தன
து சுத்தமாகிய சித்தத்தில் நித்தமும்வைத்து உத்தமபுத்தி பெற்றி
ருந்தார் மற்றதுமறந்தார்கற்றதுமறந்தார்உற்றதுமுணர்ந்தார்இப்ப
டியெல்லாருமிருந்தும் நல்லகுணமில்லாமற்போனால் உலகம் பொல்
லாங்கு சொல்லுமல்லவா.

சிந்து.

இவர்பெருநல்லவராமிந்தத்தொல்லுலகில் அவரோசிவனடியார்

வசனம்.

என்று ஆச்சரியங்கொண்டுசொன்னபடியினாலேஇவரைப்போல பக்திமார்க்கத்திலிருந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆரிருப்பார் என்றுஇனைச்சொல்லப்போகாதனைகடந்தபரமசிவபக்துமானென்று சொல்லப்படும்,

சிந்து.

அவர்க்கொருமெத்திரில்லை,தாரணியில்கோடி-கோடிசென்மங்களோ முன்னங்கும்,நமபர்செப்தநற்றவமே அவதாரமானதுவேசன் அன் புபுரியும்பேரின்பசுகம்கொள்ளக்கொள்ளவேபிறந்தார்திருக்கோயில் வலஞ்சுழன்றுவருமுடன்செய்யும்பணிவிடைகள்.

பெரியபுராணச்செய்யுள்

விருத்தம்.

ஊரில்விடும்பறைத்துடைவையுணவுரிமையாங்கொண்டு
 சார்பில்வருந்தொழில்செய்வார் தலைநின்றார்தொண்டினால்
காரிலையமுக்குநிப்படையவண்ணல்கோயிறொறும்
 பேரிகையேமுதலாயமுகங்கநவிறவிறுவகும்
போர்வைத்தோல்விசிவார்தென்றினையானம்புகலுரிசை
 நேர்வைத்தவீணைந்தும்யாழுக்குநிலவமையாநம்
சோர்வறநற்றிபுக்கேவராபிரானர்ச்சனைகட
 கார்வத்தினுடன்கோரோசனையுமிவையளித்துள்ளார்

வசனம்,

இந்தப்பிரகாரம்நந்தனார் சிவஸ்தலங்கள்தோறும்போய சுவாமி யைத்தோத்திரஞ்செய்கிறதெப்படியென்றால்,

தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

செந்தாமரைமலர்கு
 செறிந்தமலர்க
எந்தபிரானுக்கபிஷேகக்.
 றீங்தொழிந்தார்மண
சிவசரவணமூர்த்தி
 திருவவதார

மோபைகளுமேடையும்
 ளாட்டப்பிறந்தவேளூர்
கோரோசனைமேற்
 வாட்டம்
ஞானசம்பந்தனொனத்
 மாகவந்தசீர்காழி

புலையாட்சகன்றிருவிலை நாயகியையேத்திப்
பூரித்தார்வெகு வாக
ஒருபொம்புறமுமதி ளோங்கியமர்பூரத்
துவந்தவிஸ்வநாதா திசைமிகத்தொழுது
ஒருமுகமருவிகசுதகோல் நாமபிலைவதந்தா
யிவுலகிற்புகழ்வேந்தன் பெயரை
உமையொருபாகத்தி னுயர்பரமன்றரும
னொருபசுவிங்கன் ராகமாயவேடஞ்
சமைத்துப்பின்மனுநீதிச் சோழன்றனக்குக்காட்சி
தந்தவாரூர்ச்சென்றான் டக

வசனம்.

பின்னும்நந்தனார்தாமசெய்யுந்தருமமேதென்றால்இவர்புலையனு னபடியால்சிவன்றலங்களுக்குப்போயவீதியைச்சுற்றி சந்நிதியிலவந் துதடிவிழுந்ததுபோலஉடல்பணியப்பணிந்துபுழுதியில்புரண்டுமயிர் சிலிர்ப்பக்கண்ணீருதிரவாய்குளறிஉளைதடுமாறிஒருதரமழுதுஒருமர ந்தொழுதுஎக்கலித்துக்கெக்கலித்துஒருதரஞ்சிரித்து ஒருதரம்வெருத் துசுகமயர்ந்துஅகமிகநொந்து அனல்கண்டமெழுகதுபோ லுள்ளமுருகி ஆனந்தவெள்ளம்பெருகிகள்ளவகருதிச்சிவனேயென்று வாய்வலிக்க ப்பேரிகைவலிக்கக்கொட்டிகால்வலிக்கக்கூத்தாடி நிற்பவொருமுகூர் த்தஞ்சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையால்வாயசை யாமல் அலையடித்தோயந்தகடல்போல நிறைந்துதன்னைமறந்திருப் பார்நன்னினைவுவந்துபரவசந்தெளிந்துஈசனைப்பணிந்துகொண்டுவந் துபணிவிடைசெலுத்தக்கோவிலார்கேட்கக்கும்பிட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரோமத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்குநல்ல விருக்குகட்டுமவிச்சை வாரி

பேரிருக்குதுபோதுஞ்சிவம் பெருமையைக்கொண்டாடிதினஞ்
சிற்றைகின்றதில்லைப்பதியில்சேருதற்குபாயந்தேட வாரி

சிரியவனுன்சாதியொன்றுமறியாதவனுனேனைமை
சிவபெருமானுக்கடியேன் செய்யும்பணிவிடையிது வாரி

சிந்து

செய்யும்பணிவிடைகள்-ஈசன்-சிந்தைமகிழ்ந்துகுளிர்ந்திடவே
மத்தளபேரிகைக்கும் - இசை - வார்கொடுத்தும் புறந்தோல் கொடு

த்துமறவாலேதினமும் நல்லவாசம்பொருந்தும் கோரோசனையும் தேவால யங்கள்தோறுந்தந்து சித்தமுருகிபத்திவெள்ளம் பொங்கோடிக்கங்குக் கரை என்றுபேதமறியவொண்ணாது கண்டீர் சாதியில்நீசனவர்.

வசனம்

இப்படி பக்திசெய்யாநின்ற நந்தனாருடையவரலாறேதென்றால்

கீர்த்தனம்-துக்கடா-ஆதிதாளம்

ஆதனூரிலொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரபபறையன்
ஓதுவாதுமொன்றுந்தெரியாதவன் பரிசுத்தமானபத்தன்
கோதிலாதவங்கள்சாதியர்க்குச் சிவகணங்களைமிகச்சொல்லி
காதலோடுதிருப்புன்கூரீசனைக் கண்டுவருவோமென்றார்

வசனம்.

நந்தனார் சிவதரிசனஞ்செய்யவேண்டியதற்காக தங்கள்
சாதியானைக்கூப்பிடுகிறார்

கீர்த்தனம்-இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி

சிவலோகநாதனைக்கண்டு சேவித்திடுவோம்வாரீர்,

அநுபல்லவி

பவமயக்கங்களைப்போக்கி அவர்
பரமபதத்தைக்கொடுப்பாரந்த சிவ

சரணங்கள்

அற்பசுகத்தைநினைத்தோம் அரன் திருவடிமறந்தோம்
கற்பிதமானபிரபஞ்சமிது கானல்சலம்போலேயெண்ணி சிவ

ஆசைக்கடலில்விழுந்தோ மினியறிவுக்கறிவையிழந்தோம்
பாசமகலவழிதேடாமல் பரதவிக்கும்பாவியானோம் சிவ

மானிடசென்மங்கொடுத்தோர் தன்னைவருந்தக்காககனித்தார்
தேனும்பாலும்போலேசென்றுதேடியின்றுக்கொண்டு சிவ

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்.

திருப்புன்கூர்ச்சிவலோகன் சேவடிகண்மிகநினைந்து
விருப்பினொடுந்தம்பணிகள் வேண்டுவன்செய்வதற்கே
அருத்தியினொருப்பட்டங் காதனூர்தனினின்றும்
வருத்தமுறுங்காதலினால் வந்தவ்வூர்மருங்கணைந்தார்

வசனம்.

நந்தனாரிப்படிச் சிவலோகநாதனைச் சேவிப்போமென்று செனு னாய்ச் சொல்லி நிச்சயஞ்செய்த் நந்தனாருக்கும் பறையர்களுக் குண்டா னவாக்குவாதம்

அவர்கள்-தனைஞ்செய்யுஞ்சடங்கிதுவல்லவோ பறைபர்கள்செய்தால் பழ
வமேயென்றார்

நந்தன்-தேருந்திருநாளுமிருக்குதுபோவோம் வாரும்வாருமென்று வரு
ந்தியுமழைத்தார்

அவர்கள்-பொறுமமிது புண்ணியமல்ல எரிபோவோமென்று பதிவ
ாயுமழைதகார் சேரியைக்கிசு சிலதுபேர்வந்தா

பதினொருபேர்அன்புடன்வந்தார் நந்தன்மாடுபோல் ஞானமாக்கம்
பொழிந்துதவமுனிபோலே தானங்கேநின்றார்

அவர்கள்-சிவலோகநாதனைச் சேவிப்போமென்றார் நந்தன்வெறுங்கை
யோடேபோகலாகாதென்று

வாதுடன்தோலும்வரிசையாய்க்கொண்டார் அவர்கள்சேரியிலுள்ள சிறி
துபெலனார்

நந்தன்-வந்தபுலையருக்குப் பந்திபொருகவே செத்திமில்நிறுட்டார் அவர்
சதியந்தனென்று மெத்தவுங்கும்பிட்டார்

கீர்த்தனம்-இ-ம்-வராளி-சாப்புதாளம்

இவர்-சிங்காரமான பள்ளுபாடினார்
அவர்-அங்கங்குளிர்ந்துகொண்டாடினார்
இவர்-கோரோசனப்பையையெடுத்தார்
அவர்-தாராளமாய்வாரிக்கொடுத்தார்
இவர்-சிவாங்கிதஞ்சொல்லிச்செபித்தார்
அவர்-தவறிதேயென்றுச்சரித்தார்
இவர் ஆசைப்பெருங்கடல் தாண்டினார்
அவர்-ஓசைப்படாமலேவேண்டினார்
இவர்-அளவில்லானந்தமடைந்தார்
அவர்-அளவில்லாககாட்சி பெற்றிருந்தார்
இவர்-திருப்புன்கூரீசனைப்பாடினார்
அவர்-விருப்பமோடிவனைக்கொண்டாடினார்

வசனம்

இப்படி எல்லோருங்கூடிச் சிவனை அடிக்கடிவணங்கி அரகராவெ
ன்றுரைத்திடுஞ் சத்தம்பராபரனே பறிவார் இப்படிநந்தனார் பதினொருபே
ர்பறைபரோடு திருப்புன்கூர்வந்துசேர்ந்தார்

கலம்வந்துவிதிவலம்வந்துகண்கள்
சலமவந்துகோரும் பலம்வந்துதெங்கள்

குலஞ்சுத்தமாச்சு மலமவ்வளவும்பாசம
நலங்கொண்டோமென்று நிலங்கொண்டுநின்றார்

வசனம்

அந்தஸ்தலத்திலே நந்தி மிகவும்பெரிதானபடியினாலே லிங்கதரிசனஞ்செய்ய நந்திமறைந்திருப்பதால் நந்தனார் துயரமடைந்து சொல்லுகிறா

தரு இ-ட-சங்கராபரணம்-ஏகதாளம்

கண்ணிகள்.

அரகரதிரிபுராந்தசிவகாவெங்கள்
அம்பிகையொரு பாகா-எங்கும்
நிரந்தரமாயென்றுன்னைப்போல விருந்து
நினைப்பவனாககருள போகா
வெள்விடைமேல்வரும் விமல நமசிவாய
விளங்கும்வேத முடிவே நால்வர்க்குத்
தென்றநசிவஞானபோதமளிக்க வந்த
சிறந்தமெய்த்தவ வடிவே
வாலும்மழுவும்மரகதவாகுவலயமும்
மல்குங்குல பாணி எனி
யேனுங்காணத்கரிசனைதாவுமையுட
னெழுந்தருளவிரிங்கு தோணி
மன்னுஞ்சந்நிதிமுனம் மருவுமிடபதேவா
மறைத்திருக்கின்றகாரணமேனோ முன்னம்
என்னவினைசெய்தேனோகனவெற்ற பாவந்தானோ
இதயத்தில்மகிழ்ச்சி பூணேனே

சவாயி

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகியநந்தி மறைத்திடுகிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைதானிங்கு
மலையாகியிப்படி மறைத்ததோவென்றார்

வசனம்

என்றுசொல்லிய நந்தனார் பின்னுஞ்சொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

வழிமறைத் திருக்குதே மலைபோலே யொரு
மாடுபடுத்திருக்குதே

பாவிப்பறையனிந்த வூரில்வந்துமிவன் பாவந்தீரேனோ-உந்தன்
பாதத்தில்சேரேனோ வரேனோ சிவலோகநாதா வழி

கோடியில்நின்றுதெரிசித்தாலும்போதும கோயில் வரமாட்டேனே
ஐயேஓரடிவிலகினால்போதுமங்கேநின்று உற்றுப்பார்க்கச்சந்தே விலகாமல் வழி

வசனம்

இப்படி நந்தனார் தரிசனங்காணமுடியாமல் அலட்டும்போது சுவாமி நந்தனார்மீதிரங்கி நந்தியைவிலக்கச்சொன்னார்.

பெரியபுராணச்செய்யுள்

சீரேறுமிசைபாடித்திருந்ததொண்டர்திருவாயி
னேரேதொழவிடவேண்டுமெனநினைந்தார்க்குநேர்வார்
காரேறுமெய்ப்புன்கூர் கண்ணுதலார்திருமுன்பு
போரேற்றைவிலங்கவருட் புரிந்தருளிப்பணித்தார்

கீர்த்தனை-இ-ம்-அக்கடா-ரூபகதாளம்

ஒருநாளும்வாரதபத்தன் திருநாளைப்போவாரெனுஞ்சித்தன்
உலகெதும் பிரசித்தங்கண்டு ஓதுங்காமலிருந்ததுகுற்றம்

கீர்த்தனம்-இ-ம்-அங்குசதோணி-ரூபகதாளம்

பல்லவி

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம்-நீ சற்

அநுபல்லவி

நற்றவம்புரியும் நம்மிட திருநாளைப்போவார் வந்திருக்கிறார் சற்

சரணங்கள்

சாதிமுறைமைபேசுறான் தன்னையிகழ்ந்துயேசுறான்
கோதிலாதருணமுடையோன்கோபங்கொண்டால்தாளமாட்டோம்- சற்

வேதகுலத்தைப்போற்றுறான் விரும்பிவிரும்பியேற்றுறான்
பூதலத்திலிவனைப்போலே புண்ணியபுருஷனொருவனில்லை சற்

பத்தியில்கனாகண்டவன் பார்த்துபார்த்துவுண்டவன்
சித்தக்குறையில்லமதுசெல்வமுமறுங்குறையுந்தயவுசெய்து சற்

வசனம்

இப்படி சுவாமிசொல்ல நந்திவிலகினார்.

அக்கடா

நந்திதானவிலகிநின்றார் தன்சாமிமனதைக்கண்டார்
இவன்நல்லபத்தனென்றார் அடங்காதவெட்கங்கொண்டார்

கீர்த்தனம்-இ-ம் சாவேரி-ரூபகதாளம்,

பல்லவி.

மற்றதெல்லாம்பொறுப்பேன்
மூத்திரானுங்கொடுப்பேன் மற்ற

பத்தனுகளுக்குற்றஞ்செய்தா
லதைப்பொறுக்கமாட்டேன் மற்ற

திடுக்கென்றவனைத்துடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன் மற்ற

பசிக்குதென்றுவருகைகையிலொருவன்
பொசிக்கப்பொறுக்கமாட்டேனே மற்ற

வசனம்

இப்படியேசுவாமிசொல்லும்போது நந்திமனதாகலங்கிநாவிலகி நின்றார் நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாதஆனந்தமடைந்து குதித்தார் கெக்கலித்தார் கொண்டாடினடித்தார் துதித்தார் திருவடியுபாசோபதிதார் எங்கும்சிவமாகப்பாவித்தார்

கடுக்கா

குதித்தார்எக்கலித்தார் உள்ளங்களித்தார்
பலபடித்தார் கண்ணீர்வடித்தார் பற்களைக்கடித்தார்
ஒருநாற்துடித்தார் இருதரம்நடித்தார்
இப்படிதரிசனஞ்செய்தாா நந்தனார்தரிசனஞ்செய்தாரோ

தக்கடா ஆதிதாளம்

சட்ட மாகச்சந்நிதானங்கண்டுதுடை தட்டினாகைகொட்டினார்
அஷ்டமூர்த்தியெவருக்குமென்று கூத்தாடினார்பண்பாடினார்
கஷ்டமானசமூசாரசாகரந் தாண்டினார்மோபவேண்டினார்
இஷ்டதெய்வசிவலோகநாதனை எண்ணியநாருளாநண்ணினார்
பட்டிவாதசந்தோஷகொண்டுதான் பட்டபாடுகளைப்பேசினார்
சென்மகெட்டதென்று தன்னையேசினார்
இஷ்டமானதெண்சொனங்களோடும்வா கட்டிமூத்தமிட்டுலாவினார்
சிங்கக்குட்டிபோலவே தாவினார்

கீர்த்தனம்-இ-ப-கலியாணி-அடதாளம்

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரோ-நந்தனார்- தெரிசனஞ்செய்தாரோ

அநுபல்லவி,

தெரிசனஞ்செய்தார் தேன்மழைசொரிந்து
உவகையுடன் அவர்வாழிவாழியென்று தெரி

சரணங்கள்.

குதித்துக்குதித்துக்கையைக்கும்பிட்டுப்போட்டுக்
அதித்துதுதித்துத்தன்றுன்பங்கள்தீர தெரி
போற்றிபோற்றியென்றுபொன்னடிவணங்கிப்
பார்த்துப்பார்த்துப்பரமானந்தங்கொண்டு தெரி
அச்சமறந்தலவாறிவிலுணர்ந்து
இச்சைமறந்தவயேகாந்தமாய் தெரி

வசனம்

தெரிசனஞ்செய்த பின்புகொண்டுவந்த பணிவிடைசெலுத்தி அவ்வீதியில் மட்டையூறுங் குட்டையைக்குளமாய் வெட்டவேணுமென்று விசாரமுற்றார் சுவாமி இதையறிந்து நாளைப்போவாராலே குளம்வெட்டத்தாளப்போகாதென்று தம்பிள்ளையை ஆனைகப்போகச் சொன்னார்

தொக்கடா

மானைப்பிறகிபோக்கும்பிள்ளையார்வந்தார்

நாளைப்போவார் நீயாரப்பா வென்றார்
பிள்ளையார் நானுன்காரியப்பாவக்கே னென்றார்
நாளைப்போவார் குட்டையைக்குளமாயவெட்டுவே னென்றார்
பிள்ளையார் வெட்டிநான்புண்ணிய மென்றார்
நாளைப்போவார் அதெப்படியொட்டு மென்றார்
பிள்ளையார் குளமல்லவெட்டும்வெட்டு மென்றார்
நாளைப்போவார் அற்பமாய்ப்பதக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார் அப்பமேபோதும்போதுமென் றுகாத்தார்
நாளைப்போவார் களித்துதிருக்கிகறப்பமா யிருந்தார்
பிள்ளையார் குளத்தைவெட்டுதற் கிசைந்தார்

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி

தடாகமொன்றுண்டாக்கினார் கணநாயகர்
தடாகமொன்றுண்டாக்கினார்

அநுபல்லவி

சடாமகுடதரன் சாம்பவி யுமன்வர
சகலமுனிவாமனத தாமரையு மலர
கடாட்சமாகக்குகன் கணபதியுடன் மன்ன
காதலாலெவருக்குமன்பப்போதமருளிந மென்ன தடாக

சரணங்கள்

நந்தமுலாவியதாமரைபூத்து கதிக்க மிருகதிடுஞ்சேறு
கெண்டைவாளுநலைககணமக்குகுதிக்க

அக்கிரமிருந்த மறையவர்கள் முழுதிழுஞ் சூழச்
சோமசூரியர்கள்சுகமுடன்வந்து காழ
பிக்ஷையுடனேபலவேள்வி தானர் செய்ய
விளங்குஞ்சங்கீனமுயக்களங்கமில்லாமற் றுய்யதாக
ஓதிவோனதியானதுதான் பிக நாணஜூம்பலமர்ந்து
ஒதிமமுங்குருகின்றூலமும் எதிர் காண
சோதிருவுந்தேவ தருநிழலுங் கொடுக்கச்
சுடிக்கடமையைமான்கள் சூழ்ந்துவந்தங்கே அடுக்க
பாதாமலர்க்குழலாமகிழ்ந்து அங்கே சீராட
வல்வினைகளார்விட்டோட வல்லவர்களால் கொண்டாடதாக
வாசனைதங்கியபல்லிகைமுல்லைபின்சாலைசந்தனச் சாலை
வாழைபலாக்கமுகும் மணமாமலாச் சோலை
ஆசையாகமயிலழகுற் நடிக்க
அருமறைப்பூசுரர்கள் யாவரும் படிக்க
தேசலாவுந்திவ்யதீர்த்தமாகுமொன் றந்தத்
திசைதேவர்களும்புகுந்த இசைந்தணர்தரு சொந்தமாக
காளேப்பெ வாசிஷ்டைகளைக்கு பார்த்தார்
குளமொ யிருக்கவு மகிழ்ந்தார்
பின்னோயிருக்கக்கண்களிற் காணார்

வசனம்

இதெல்லாஞ்சிவன்செயலென்று சந்தோஷங்கொண்டு முன்போலவே கோயில்வலம்வந்து தன்னுடன்வந்த பதினொருபேர்களுடன் ஆதனூர்வந்துசேர்ந்தார்

பெரியபுராணசெய்யுள்-விருத்தம்

இத்தன்மைபிசார்மகிழ்பதிபலவுஞ்சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத்தொண்டுசெய்து விரவுவார்பின்னெழுந்த
சித்தமொடுதிருத்தில்லைத் திருமன்றுள்சென்றிறைஞ்ச
உய்த்தபெருங்காதலுணர் வொழியாதுமுந்துதிப்ப

சிந்து

போனீச்-சாருந்தொழின்முறையாரும்புகல்- திருப்புன்கூர்சென்றானைக்-கண்டு-சேவித்திசைபாமப்பாவித்துபின்-தில்லைச்சிதம்பரநாதக்-கண்டு-சேவிக்கவேண்டுமென்றுவழுடன்-நனைப்பாயே னொடாக

வசனம்

நந்தனார் திருப்புன்கூர்ச்சிவலோகநாதனைத் தரிசனஞ்செய்து ஆதனூர் வந்தநாள்முதல் லாமதுவிட்டார் தில்லையம்பலம்

திருச்சிற்றம்பலமென்று சொல்லத்தலைப்பட்டார் சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டாார் வணங்கிக்கும்பிட்டுச் சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி

சிதம்பரம்போவேன்-தேறித்தெளிவேன்

அநுபல்லவி

சிதம்பரம்போவேன் தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப்பார்புகழ்தில்லைச் சிதம்பரம்

சரணங்கள்

ஒருநாளுஞ்சொன்னு லுலகங்களுய்ப
பிருவினைப் யனில்லை யென்னாளுர்தில்லைச் சிதம்பரம்

பாதிராத்திரியில் பன்மறையோதி
வேதியர்போற்றி விளங்கியதில்லைச் சிதம்பரம்

திறமொன்றறியாத் தீங்குகள்செய்யும்
பறையனாய்ப்பிறந்த பாவங்கள்துலையச் சிதம்பரம்

வசனம்

நாளைப்போவார் தனக்குத் தெரிசனங் கிடைக்கவேண்டியதற்காகப் பிள்ளையானவேண்டுதல்

விருத்தம்

காலையுடன்பூமிபடச்சாய்ந்திடுவான் செங்கமலக்காலைத்தூக்கி
கோலமிட நமிர்ந் திருமனதுள்நாயகனேகுற்றந்தீரப்
பாலிக்கும்படியெனக்குன்னருள்புரிவாயென்றுநறபழங்கள்வைத்து
மேலைக்கோபுரவாசல் பிற்பகதனைச்சிந்தையுள்ளே வேண்டுவாரே

வசனம்

நந்தனார் சேரியிலுள்ளபுலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய் தரிசனம் பண்ணவேணுமென்று ஆசையுற்று பதறிமார்க்களைச் சொல்லலுற்றார்

கீர்த்தனம்-இ-ம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைப்போகாமலிருப்	பேனே-இந்த
நாற்றநரமபுபின்னஞ்சுமப்	பேனே-நான்
நாளைப்போகாமலிருப்	பேனே-இந்த
நாறுமுடலைக்கண்டெளிப்	பேனே-நான்
நாளைப்போகாமலிருப்	பேனே-இந்த
நாளைவிணுக்கழிப்	பேனே-நான்

காணப்போகாமலிருப் பேனோ அந்த
சமனார்க்கஞ்சியோடியொளிப் பேனோ நான்
காணப்போகாமலிருப் பேனோ சிவ
ஞானத்தைப்பாராமலிருப் பேனோ நான்
காணப்போகாமலிருப் பேனோ இந்த
காட்டிலிகழ்ந்தென்மம்படைப் பேனோ நான்
காணப்போகாமலிருப் பேனோ தில்லை
நாதனைக்காணமல்பொசிப் பேனோ நான்

ஆனந்தக்களிப்பு.

காணமலிருக்கலாகாது பாழுங்
கட்டைகடைத்தேறவேண்டியிருந்தால் காண
முத்தியளித்திடும் பாதம் தில்லை
மூவாயிரம்பேர்கள்பூசிக்கும் பாதம
சத்திக்கிணையான பாதம் வேத
சாஸ்திரங்கள்நாலுந்தேடிய பாதம் காண
காலனைச்சீறிய பாதம் ஜன
காதிகளுக்குள்ளேசெலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம் எங்கள்
மாணிக்கவாசகர்பிடிகை பாதம் காண
ஆசையைப்போக்கிய பாதம்பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம தில்லை
மாகாளிதாழவேதூக்கிய பாதம் காண
பாலகிருஷ்ணன் தொழும் பாதம்காட்டில்
பாம்புபுலிக்குக்கூத்தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம்
கோவிந்தராஜர்தெரிசிக்கும் பாதம் காண

வசனம்.

நந்தனர் சிவனைக்காணமல்காலம்வீணுகப் போகலாகாதென்று கூப்பிடுவார்,

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள் எல்லோரும்

ச

நல்லோர்பணிந்திடும்தில்லையம்பல
நாதன்பாதம்பணிந்துகொள்வோம் எல்லோரும்

கண்ணிகள்,

வாருங்கள் பரமானந்தமிருக்குது பாருங்கள்

சடலமெடுத்தபின்னேதுமேகண்டிலீர்
விடமெடுத்துண்டமேனியன்றோர்வர
வடம்பிடித்திடவாருங்கள்தில்லையில்
இடம்பிடித்துநாமெல்லோரும்வாழலாம் வாருங்

சொல்லடாதில்லைச்சிற்றம்பலமென்று
மெல்லடாவாயைசந்நிதிநேரவே
நில்லடாயிந்தமாயப்பிறவியைக்
கொல்லடாசிவலோகங்குடிபுக வாருங்

சள்ளடாநமதில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தனார் சொல்லுறுதியெனறு
கொள்ளடாதில்லையம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்றுபாடிக்கூத்தாடியே வாருங்

வசனம்.

இப்படிவாருங்களென்றழைக்க புலையர்வாராமலிருக்கநந்தனார்நல்லவர்வார்த்தையைசொல்லிப் பறையனை சிவநாமத்தைச் சொல்லச் சொன்னார்,

இருச்சொல்லலங்கார வாக்குவாதம்.

நந்தனார்தில்லையம்பலமென்றுசொல்லச்சொன்னார்
புலையர்கள்ளப்பேச்சென்றுசொல்லச்சொன்னார்
நந்தனார்சங்கராவென்றுசொல்லச்சொன்னார்
புலையர்இங்கேவாவென்றுநில்லென்றார்
நந்தனார்சற்றேயாகிலும்சிவனைத்தியானம்பண்ணென்றார்
புலையர்கத்தையோடுபாலைபானம்பண்ணென்றார்
நந்தனார்திருச்சிற்றம்பலமென்றுபிலக்கச்சொன்னார்
புலையர்வெறுச்சகம்பளமென்றுபிலக்கச்சொன்னார்
நந்தனார்சேரியில்நல்லகாரியமிதென்றார்
புலையர்ஏரியில்நல்லமாரியிதென்றார்
நந்தனார்விட்டநாள்நினையாமலெட்டுநாள்மறவாமல்

நிஷ்டைபண்ணாதசென்மம் கஷ்டமென்றார்
புலையர் விட்டவிரைமுளையாமல் நட்டபயிர்பலியாமல்
கெட்டுதானால் கிராமம்கஷ்டமென்றார்.
நந்தனார் உங்கள்புலைத்தன்மைபோகுமென்றார்
புலையர் எங்களைக்கெடுத்தாயேபாவியென்றார்
நந்தனார் தேவாதிதேவனைதெரிசிப்பீரென்றார்
புலையர் பாவாடராயனைப்பாவிப்பீரென்றார்
நந்தனார் அனைத்தாருமீசனுக்கன்புசெய்யென்றார்
புலையர் இனத்தாரைநொந்தவர்க்கின்பமேதென்றார்
நந்தனார் தினமுஞ்சிவனைப்போற்றிக்களிப்போமென்றார்
புலையர் பதரைத்தூற்றிநெல்லளப்போமென்றார்
நந்தனார் பெண்ணாசைமண்ணாசைவிடுதலேயென்றும்
புலையர் எந்நாளுமுன்னாலேகெடுதலையுண்டாம்
நந்தனார் அப்பரோடுஇஷ்டமுடனானிருப்பேன்தடையேது
புலையர் சப்பலோட்டிப்பட்டகடன்கொட்டைநூற்றால்தீராது
நந்தனார் பூசத்திருநாளில்போய்வருவோமென்றார்
புலையர் பேசத்தெரியாதுபேயாநீபோவென்றார்
நந்தனார் அழுதுமுறையிட்டாலம்பலத்தேகேட்குமென்றார்
புலையர் உழுதுபயிரிட்டாலுள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார் சித்தமெல்லாமம்பலத்தேசென்றதென்றார்
புலையர் புத்தியெல்லாம்வேறுபட்டுப்போச்சுதென்றார்
நந்தனார் குற்றாலத்தீசனைக்கூறுவீரென்றார்
புலையர் கைத்தாளம்போட்டுக்கதறுவீரென்றார்
நந்தனார் தாண்டவத்தெய்வமேதருந்தெய்வமென்றார்
புலையர் தூண்டிவீரப்பனேதொழுந்தெய்வமென்றார்
நந்தனார் இஷ்டப்படிநடக்குமீசனைத்துதியென்றார்
புலையர் கஷ்டப்படமாட்டோம்கசக்காதேபோவென்றார்
நந்தனார் கொண்டாடிதெய்வத்தைகொள்ளுவீரென்றார்
புலையர் பெண்டாட்டிதெய்வமேபெருந்தெய்வமென்றார்
நந்தனார் நலத்தைக்கொடுக்கவந்தநற்குருவென்றார்
புலையர் குலத்தைக்கெடுக்கவந்தகோடாலிக்காம்பென்றார்
நந்தனார் பலவழக்கமானதுவெண்பறையாவென்றார்
புலையர் குலவழக்கமறியாதகுருடாவென்றார்
நந்தனார் நாக்கறப்பேன்சிவனைநவிலுவீரென்றார்
புலையர் மூக்கறுப்பான்கதைமொழிந்தீரோயென்றார்

வசனம்.

நந்தனார் பெரியோருடைய அனுஷ்டானத்தைப் புலையர்களுக்குச் சொல்லுகிறார்.

வேறு.

நந்தனார் சிவனேதெய்வம் சிதம்பரமேகயிலாயம்
தவமேபெருமைதான்சம்பிரதாயம்
புலையர் சேரியேசொர்க்க ஏரியேகைலாயம்
மாரியேதெய்வம் மதசம்பிரதாயம்
நந்தனார் படிப்பதுஞானம்பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம்
புலையர் பிடிப்பதுநண்டு பொசிப்பதுஇறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம்
நந்தனார் பாறைக்கடப்பா பரவெளிதாண்டி
கோழையறுப்பார் குலசம்பிரதாயம்
புலையர் ஆற்றில்குளிப்போம் அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்பிரதாயம்
நந்தனார் ஆசையைப்போக்கி ஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வு மதசம்பிரதாயம்
புலையர் பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்பிரதாயம்
நந்தனார் மையத்திலாடிமனக்கயிறுபூட்டி
வையத்திலிருப்பார் மதசம்பிரதாயம்
புலையர் கையிலேசலியம் காலிலேசேறு
பையிலேபாக்குபறசம்பிரதாயம்

வசனம்.

சிவபத்திபண்ணினால் அணிமாதிகள் அடையலாமென்று நந்தனார் சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்- நீலாம்புரி-ஜம்பைதாளம்.

அஷ்டமாசித்திகளைப்பெறலாந்தில்லையி
லானந்தத்தாண்டவன்கோயிலைக்கண்டு
இஷ்டமுடன்வீதிவலம்வந்துஈசன்
இணையடிதொழுதாற்கு இனிப்பிறப்பில்லை
வாருங்கள்வாருங்கள் சொன்னேனீங்கள்
வாயாடாதோடிவருவீரெனமுன்னே

கருமணிபிச்சோலைபோதுமுந்தன்
கள்ளவேஷமெங்களுக்குள்ளேயிடையாது
பருகுவது கூழ்க்கஞ்சிபோதும்வாய்
பதறிவார்த்தைகள்பேசிப்பசப்பாதேபோடா

வசனம்,

நீசொன்னபடிகேட்பதில்லையெங்கள்நிச்சயமறியாமல் பேசாதே நீசொன்னபடியேகேட்பதில்லை.

ஏசல்.

புலையர் பாப்பாரதெய்வமது பலிக்காதுபறையரைக்
காப்பாற்றமாட்டாது கைவிடுவீரென்றார்
நந்தனார் பாப்பாரத்தெருவென்று பார்த்துபரிதிபோல்
காப்பாற்றுமல்லவோ கண்ணுதலையென்றார்
புலையர் அடுக்காதவார்த்தையை அல்லும்பகலோதியே
பிடிக்கிறீர்பிடிவாதம் போதுமேயென்றார்
நந்தனார் கடுக்காயைத்தின்பரோ கன்னலதுபோலவே
கொடுக்காததானாலும் கொள்வீரென்றார்
புலையர் பித்தனென்றுசொல்வார் பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ தள்ளுவீரென்றார்
நந்தனார் பித்தனாயிருந்தாலும் பிறவியறுத்தனைவர்க்கும்
முத்திகொடுக்கும்நல்ல மூர்த்தியவரென்றார்
புலையர் இத்தனைநாளுமிங்கே யில்லாதவார்த்தையைக்
கத்துகிறீரிதுவென்ன காரியமோவென்றார்
நந்தனார் இத்தனைநாள்சென்று சனடித்தாமரையைப்
பத்திசெய்யின்மனந்தேறும் பாக்கியமீதென்றார்

அகவல்.

பாக்கியமீதென்றுபரமசிவபக்தி
மார்க்கங்களெல்லாம்வரிசையாய்த்திரட்டி
எடுத்துரைசெய்வார்சனமாஞ்சாதி
பிடித்தறியாமல்புலம்புவாரன்றே

விருத்தம்.

லக்கணக்காரர்வந்தார் வாய்ப்படப்பேசவேண்டாம்
சக்கரைப்போலேபேசிச் சாதித்ததுக்கண்டாயன்றே

பக்குவகாலம்வந்தால் பரமனார்திருநாமந்தான்
சக்கரைப்போலேதோன்றுஞ் சாதிப்பார்முத்திதானே

வசனம்,

புலையர்களனேகரானபடியால் பலவிதபலர்சொல்லுகிறார்-

ஏசல்-கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

புலையர் ஆண்டிப்பரதேசிபாகராவென்றவர்
வேண்டுதெய்வமறுவிளங்காது வென்றார்

நந்தனார் மூன்றுலகுக்கிறை முன்னின்றுகைகூப்பி
ஆண்டவனேயென்று அர்ச்சிக்கு மென்றார்

வேறொருபுலையர் நாத்தைப்பிடுங்கியே நடவுநட்டாலிந்த
சோற்றுக்கவலைவிடுஞ்சுகமிது வென்றார்

நந்தனார் கூத்துவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதில்லை மன்னுயி ரென்றார்

வேறொருபுலையர் மானாருமக்களும் வாழ்கின்றவிடத்திலே
யாருகிலுமுங்களுக்கழகையோ வென்றார்

வேறொருபுலையர் மூக்குநுனியைப்பார்த்துமுணகியேஎந்நேரம்
காக்கைபோலவேசும்மாக் கதறுகிறீ ரென்றார்

நந்தனார் வாக்கிலேசிவநாமம் வாராதபாவிகள்
நாக்கிலேஊசியைநாட்டுவே னென்றார்

வேறொருபுலையர் மடைவாயின்பறவைபோல்மதியாமலிருக்கிறீர்
துடைகாலிநீயென்று சொல்லுவோ மென்றார்

நந்தனார் விடையறுமீசனை வெட்டவெளியிலுன்னி
அடையாளங்காணாதே ஆடுக ளென்றார்

வேறொருபுலையர் மறைபோதத்தெரியாத மடையராய்ப்பூமியில்
குறையாதபுலைத்தன்மைகொண்டோமே யென்றார்

நந்தனார் பறையனாய்ப்பிறந்தாலும் பரகதிதேடலாம்
உறுதிமாத்திரம்வேண்டும் உமக்குண்டோ வென்றார்

வேறொருபுலையர் தலைசுற்றியாடுதுதங்கச்சிகொழுந்தியார்
அலகையேநானென்றறிகிலே னென்றார்

நந்தனார் கலம்புரியுந்தில்லை நாதாவென்றுநிற்றைத்
திலகம்போலேயிட்டும்தெண்டனிடு மென்றார்

வேறொருபுலையர் உலகத்திலொவ்வாத உருவேற்றிச்சேரியைக்
கலகமிட்டீர்பலன்கண்டீரோ வென்றார்
நந்தனார் பலகாலுஞ்சொன்னால் பலியாதுபாழ்வினை
விலக்காமலிருக்குதுவேடிக்கை யென்றார்
வேறொருபுலையர் திருப்புன்கூரீசனைச்சேவிக்கலாமென்று
விருப்பமுடனழைத்தவித்தைகா ணென்றார்
நந்தனார் கரும்புதின்னக்கூலிகையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுகாராயில்லையே யென்றார்
வேறொருபுலையர் புத்தியில்லாதவன்புலம்புறான்சிவனென்று
கத்தினாலுமென்னகாரியமோ வென்றார்
நந்தனார் நித்தமுமொருதரம்நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலொன்றுந்தாழ்வில்லை யென்றார்
வேறொருபுலையர் சேரியிலிருந்தாலும்செல்வங்குறைந்திடும்
ஊரைவிட்டாலும்நீரோதுங்குவீ ரென்றார்
நந்தனார் வாருங்களெல்லாரும்மன்னனைப்போலவே
சேருவோரில்லைச்சிதம்பர மென்றார்
வேறொருபுலையர் பாலாறுபெருகவேபண்ணையைப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக்கலையுரீ ரென்றார்
நந்தனார் பாலகிருஷ்ணன் தொழும்பாதத்தைநான்கண்டு
நாலாம்பதவியையாடுவே னென்றார்

வசனம்.

அவர்களில் ஒருபுலையர் உரைத்தது: எப்போதுஞ் சிவனைக்கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டுபண்ணை விளையாதென்று சொல்ல நந்தனார்கேட்டுச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

அரகராவென்றொருகுழிநட்டாலைங்கலமே விளையும்
பாவந்தங்காமற் றுலையும்
சிவசிவாவென்றொருதரஞ்சொன்னால்சென்மசாபல்லிய மாச்சு
பண்ணியகருமமதுவே யாச்சு
தில்லையம்பலத்தெரிசனங்கண்டால் தேவரும்வந்தாரோ
அந்தமூவரும்பொருந் தாரோ
அடிமைக்காரத்தொழில்செய்வதுதுன்பமரநாளும் போச்சே
சென்மம்போனாலும் போச்சே

வசனம்.

நந்தனார் புலையர்களைப்பார்த்து அனேகஞ்சொல்லி நாளைப்போ வேனென்று சொல்ல

சிந்து.

நாளைப்போவேனென்றாராம் அங்கேநாடும் பறையர்களோடிவ ந்து அண்ணேநீபோகாதே நமக்காண்டைபொல்லாதவன் வேண்டிக் கொள்ளான் பாப்பாரசாதியுண்டே,

வசனம்.

இப்படிச்சொல்ல புலையரைப்பார்த்து நந்தனார் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி,

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே யான்
ஆண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி,

மூன்றுலோகமும்படைத்தளித்திடு
மாண்டவர்கொத்தடிமைக்காரன் ஆண்

சரணங்கள்,

ஆசைக்கயிற்றிலாடிவரும்பசு
பாசமறுத்தவர்க்கடிமைக்காரன் ஆண்

தில்லைவெளிகலந்தெல்லைகண்டேறி
தேறித்தெளிபவர்க்கடிமைக்கடிமைக்காரன் ஆண்

சீதப்பிறையணிந்தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க்கடிமைக்காரன் ஆண்

வசனம்.

தன்னையடிமையாகக்கொண்டவேதியர்சொற்கேளாதவரல்ல அ ட்டடியிருந்தும் பத்திபண்ணவேணுமென்று பக்திநெறியைச்சொல் லிக்காட்டினார்.

விருத்தம்,

தவப்பெருமுனிவர்மெய்க்குஞ்சரித்திரம்கொண்டநந்தன்
பவமயக்கறுக்கவேண்டிப்பகர்ந்திடுஞ்சிவவாக்யத்தை
அவகுணங்கொண்டபேயரறிந்திடப்போமோவெல்லாஞ்
சிவன்செபலாகுமம்மாற்செய்வதொன்றில்லையென்றார்

திருநாளைப்போவார்அனேகவிதஞ்சொல்லப் புலையர்கேளாமலி ருந்ததினால்சிவன்செயலென்று நாளைப்போவார் சும்மாயிருந்தார்அந் தச்சேரியில்புலையர்கூட்டங்கூடி மூத்தோரால் நந்தனாருக்குப் பத்தி சொல்லுவோமென்றெண்ணி அந்தச்சேரியிலே வெகுநாளாயிருக்கின்ற ஒருபுலையன்வயதுமிகுந்து உடல்தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோலு கள்சுருங்கிநரம்புதெரிந்து முதுகுசரிந்து முழுதும்வளைந்து அங்கம் சொறிபடர்ந்துதினவுமிகுந்துஅதனைச்சொறிந்துசெந்நீர்வடிந்துஅவ் வுடல்நடுங்கி இவ்விதமிருக்கும் பெரியகிழவனானா யனுக்கோலூன்றி கூனிகுறுகிகோணலாய்நடந்துவந்துஅவன் நந்தனாரைப்பார்த்துகட் டியணைந்துதலைநிமிர்ந்து கண்ணீர்சொரிந்து மார்பில்வழிந்து மனங் கனிந்துகாதல்மிகுந்துஒன்றும் தெரியாதவனொன்றுநினைத்து பரிந்து ஞாயமறிந்து சொல்லுவான்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

ஞாயந்தானோநீர்சொல்லும் ஓய் நந்தனாரே
நம்மசாதிக்கடுக்குமோ ஞாயந்

சரணங்கள்.

சேரியிலில்லா வழக்கம் நீர்
செய்துக்கொண்டுவந்த பழக்கம் இந்த
ஊரிலெங்குமது முழக்கம் வெகு
உறுதியாச்சுது ஒழுக்கம் இதுஞா
சிதம்பரமென்கிற பேச்சு நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சு அது
மதம்பிடித்ததுபோ லாச்சு இந்த
மண்டலப்பறையருக் கேச்சு இது ஞா
பறையருக்கேதுஇதப் பூசம் அதைப்
பார்க்கவேயுனக்கு விஸ்வாசம் சிறு
பயல்களுக்கேயுப தேசம் நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம் இது ஞா

வசனம்.

சேரியில்பெரியகிழவனானபடியால்சாதிவழக்கங்களெல்லாம் அ றிந்தவனானதலால் நந்தனாருக்கு இன்னமுஞ் சொல்லுகிறான்.

சிந்து.

பாப்பாரசாதியுண்டே என்னபாடுபடு முழுக்காடுமெங்கே நமக்கு ந்திருநாளோ அந்தஞாயமுண்டோயென்னமாயமிதுவென்றேதனைட்

செய்தார் சிவன் வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே யறியாது போலிருந்த

பெரியகிழவன்சொல்லிய-விருத்தம்.

கழனியைத்தெய்வமெனச்சுற்றிவந்து தலைவணங்கிகரங்குவித்து
உழுதுபரம்படித்துவிரைதெளித்து முளைகொள்ளநீரோடவிட்டு
பழுதரவேநட்டதனைக்களைபிடுங்கிமடையினில்நீர்பாயவிட்டுச் (னே
செழித்திடவேபொங்கலிட்டுக்காத்தவராயனைவேண்டுஞ்செய்கைதா

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சுவாமிதெரிசனநமக்குண்டோபுலைச்
சாதியன்றேவந்தரீதியறியாமல்

அநுபல்லவி.

பூமிதரிசனம்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொரு சுவாமி

சரணங்கள்.

நாத்துநரம்புகளைச்சுமப்பதும் உழுவதும்
நஞ்சைவயலைச்சுற்றி வருவதும்வளம்பெற
பார்த்திகள்கட்டிவிரை தெளிப்பதும்பறிப்பதும்
பாயுமடையைத்திறந்திடுவது மன்றியில் சுவாமி
சேரியிடையில்குடியிருப்பதும் பதருள்
சிதறைந்தூற்றிநெல்லளப்பதும் பார்ப்பதும்
ஊரைவளைந்துதமுக்கடிப்பதும் மதக்குட
முண்டுகளித்துநாம்உறங்குவ தன்றியில் சுவாமி
ஆண்டைமார்களிடம்பணிவிடை செய்வது
மருகில்நின்றுவாய்விடுவதும் நடுவதுந்
தாண்டிநடந்துநெடுங்கோல்பிடிப்பது மளப்பது
தனித்துச்சுடலைதினங்காப்பது மன்றியில் சுவாமி

விருத்தம்.

சாதியின்முறைமைகாட்டித் தடையறயிப்போதுமென்
வேதமாமுனிவராலும் வினவியுங்கண்டாரில்லை
பேதயாம்புலவருக்குப் பேரின்பநிஷ்டையேதென்
றூதலாலென்செய்வோ மென்றம்பலத்தஞ்சுவாரே,

வசனம்.

பெரியகிழவனைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இம்-தண்டகம்-ஆதிதாளம்.

சிதம்பரதரிசனங்காணவிடிலிந்தச்சென்மசாபல்ய மாமே
சென்னமரணசமுசாரம் பெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்கச்சிவனைக்காணாமல் காலங்கழிக்க லாமோ
காலபாசமதருகில்வாராமல்கண்டுபயந்து போமோ
இப்படியேயெப்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
இருதயமதிர்ந்திடச்செய்திடுங்கன்மங்களிகழ்ந்துபிரிந்துபோமோ
பின்னுமுன்னுமறியாத மூடர்கள்புத்திகேட்க லாமோ
புலையர்வாடியிருக்கினுமெய்திடும் புண்ணியங்கள் போமோ
பரமசிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபாவி பார்த்தேன்
பாவஞ்செய்தவர்க்குப்பலியாது அதில்பாடுபட்டுப் பார்த்தேன்

வசனம.

சேரிபுலையர்கள்கூட்டங்கூடி அனுப்பிவைத்தபெரியகிழவன்நந்தனாருக்குச்சொல்லக்கேட்டு ஆச்சரியப்பட்டுநந்தனார் கிழவனைப்பார்த்துச் சொல்லுவார்,

கீர்த்தனம்-இம்-தண்டகம்-ஆதிதாளம்.

மீசைநரைத்துபோச்சே	கிழவா	ஆசைநரைக்கலாச்சோ
பாசம்வருகலாச்சே	கிழவா	பாவம்விலகிப்போச்சே
கூனிகுறுகிப்போச்சே	கிழவா	கோபம்விலகிப்போச்சே
அங்கந்தளர்ந்துபோச்சே	கிழவா	அங்காரமும்போச்சே
சேரியைமறந்தாயே	கிழவா	சிதம்பரநினைந்தாயோ
மானுடசென்மமடா	கிழவா	மாண்டால்வருமோடா
அம்பலத்தரசனடா	கிழவா	ஆருந்தெய்வமடா
திருவடிபணியாயோ	கிழவா	தேடித்தெளியாயோ

வசனம்.

நந்தனார்இவ்விதஞ்சொல்லிசிவகாமவல்லிபாகனைநினைந்துநீரள்ளிபெரியகிழவன்முகத்திலேதடவிவாயிலேபோட்டுக்கட்டியணைத்துக்காதிலேசிவமந்திரமுபதேசித்தார் உபதேசமானவுடனே பெரியகிழவன்சித்தந்தெளிந்துசிவமெய்நிறைந்துஉற்றுணர்ந்துஒருவனாயிருந்து அத்தனடியாரருளிதுவென்றுபத்திமிகுந்து பரவசங்கொண்டுபேசத்தெரியாமல்பேசுவார்நான்இன்றைக்குத்தான் பெரியகிழவனானேன்நந்தாஎனதுபந்தந்தீர்க்கவந்தாய்முத்திதந்தாயென்று சுற்றிவலமவந்துஅடிபணிந்துவிடைபெற்றுக்கண்டேன்களித்தேன் ஆனந்தங்கொண்டேன்குறைதீர்த்தேன் அமுர்தருண்டேன் பசிதீர்த்தேன் பிறவிவென்றேன்வீடுநின்றேனென்று பேசிக்கொண்டுபெரியகிழவன் வருகிறான்,

பெரியகிழவனார் நந்தனாராலுபதேசம்பெற்றுவருகின்றார்.

இதுகளைத்தெய்வமென்று வணங்கிக்கொண்டாட எனக்கோழி ஆடுகளுடன் மதுக்குடம்வைத்துப் பள்ளயம்போட்டு பச்சையடித்துவருந்தச் சன்னதமவரும் சொன்னேன் சேரிக்கு நல்லகாலம்பிறக்கும் சிதம்பரப்பித்துநந்தனுக்குத் தெளிந்துவிடுமென்றும் பெருகவாழ்வீரென்றும்பெரியகிழவன்சொன்னானே அப்படியே கிழவன்சொல்லைநம்பிக்கைகொண்டுபுலையர்களெல்லாம்பந்தலிட்டுபள்ளையம்போட்டுகொம்புதம்பட்டமுழக்கி முப்பூசையிட்டு வேண்டுவார்,

வருந்திக்கொண்டாடும் அகவல்,

புலையர் எல்லைப்பிடாரியே எதிராகவந்துயெங்
கொல்லைபுன்காவலாய்க்கொள்ளடி — யென்றார்
நந்தனார் சொல்லினுமடங்காது சோதிபரமானந்தத்
தில்லைநாயகனைத்தேவ — ரறியாரோ
புலையர் முண்டாசுகட்டிவரும நொண்டிவீரப்பனைக்
கொண்டாடிபூசைகொள்வீ — ரென்றார்
நந்தனார் அண்டங்கள்பதினாலுக் கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாச்சுமில்லையாது — வென்றார்
புலையர் கச்சையரிவாள்வைத்த கறுப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டியென்தெய்வ — மென்றார்
நந்தனார் பச்சிலைப் பிச்சிகீயபாதத்தில்சாற்றினால்
இச்சையானதுமீயுமென்றெய்வ — மென்றார்
புலையர் மேசமுதிகோலமும் நீணமுன்றுசவனும்
தியகள்ளுமுட்டைவைத்துத் தெரிசித்து — நின்றார்
நந்தனார் வாயாலேசிவமென்று வருந்தினலெப்போதும்
தாயனைப்போலவே தழுவிவரு — மென்றார்
புலையர் பேய்பிடித்திருக்கும் பெயனாம்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச் செய்திடுவீ — ரென்றார்
நந்தனார் பத்திவெள்ளம்பெருகிப்பாய்ந்தாலுஞ்சேரியில்
தத்தையுறிஞ்சுஞ்சாதிநாடாது — வென்றார்

வசனம,

இவ்வகையாகப் பூசைபோட்டுத் தெய்வங்களைக் கொண்டாடும் புலையர்களைப்பார்த்து நந்தனார் சொல்லுவார்,

விருத்தம்.

இத்தனைநாட்பரமசிவன்திருமகிமையிரவுபகலெடுத்துச்சொன்னேன், பத்தியிலேபெந்தனுக்கேயநன்புரிந்த வையன்பதம்பணிவீரென்றேன், இத்தனையுமிழிந்திடவே மனவெறுப்பாயெந்தனையுமவமானித்தீர்புத்தி,

கீர்த்தனம-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பத்திசெய்குவீரோ நடேசனைபத்திசெய்குவீரோ

அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்ற உத்தமனைவிட — பத்தி
நித்தியதேவர்களுமில்லையென்று

சரணங்கள்,

சாமமதாவணயிருக்குளசுரவேதஞ்
சாற்றுமுபநிஷத்தும் தற்பரன் அரனென்று
ஏமாறுமற்சொல்லியின் புறல்லையின்று
எவர்களுமறியலே யிப்புவிதனிலினறு — பத்தி

ஆகமபிருபத்தெட்டாதபுராணமும்
அயன்கீதைமுதலான அனந்தஸ்மிருதிகளும்
பாகமாகியபிரமவம் பரமனொருவனென்று
பண்புடனுணர்த்திடும் பான்மையதால்நின்று — பத்தி

கௌதமர்முதலானவிருடிகளனைவரும்
கரியமால்தொழும்பங்கஜியென்றனுதினமும்
புவனத்தில்போற்றியே யேற்றினதாலவா
புகழுமபுண்ணியபதம்பொருந்திறதென்பதால் — பத்தி

அரியயனிந்திரன்முதலானதேவரும்
அரனடிதன்னையே அன்பாய்ப்பூசித்தால்
பரிவுடனவர்செல்வம் பழுதுவாராமலே
பாவித்தார்சிவனென்று பத்தர்சொல்வதினாலே — பத்தி

வியாசமுனிவரும் அதரடியார்களும்
விஷ்ணுபரமென்றுவிளம்பினதால்முன்னம்
காயாசிக்கங்கைகதையிற்கைபிருந்தும்
கல்லாய்த்தானேயவர்சமைந்திருந்தாலேயும் — பத்தி

தில்லையம்பலத்தில் திருநடமாடிடும்
தேவாதிதேவனை நினம்பணிந்தேத்தியே
அல்லல்சம்சாரக்கடலினில்முழுகாமல்
ஆனந்தக்கூத்துகளாடிக்கொண்டுநீங்கள் — பத்தி

விருத்தம்,

இத்தனைசாட்பரமசிவன்திருமகிமையிரவுபகலெடுத்துச்சொன்னேன்பத்திபுரியெந்தனுக்கேயருள்புரிந்தவையன் பணிவீரென்றேன் அத்தனையுமிழந்திடவே மனவெறுப்பாபெந்தனையுமவதவபறுதிரபுத்திசொல்வேனென்றவர்கள்முழந்தாளிற்றடிகொண்டு புனைந்திட்டாரோநந்தனார் மகாபலசாலியானபடியால் புலையர்களைச்சிட்சினும் சிவநாமத்தைச்சொல்லுவார்.

தண்டகம்,

தத்திபுலிப்போலேதாண்டிக் குதிப்பார்
முத்தமிடுவதைப்போல்முகத்தைக் கடிப்பார்
வார்கொண்டுசெட்டிவளைத்தும் பிடிப்பார்
மணிக்கல்லெடுத்துத்துடைக்குள் ளெறிப்பார்
பல்லாரசுரண்டியேபாம்படித் திருப்பார்
கல்லாலெதிர்ந்துமவாகாயம் படுத்துவார்
குப்புறத்தள்ளியேவைப்பினி றொன்றார்
சிவபரமென்றுநீர்சேவிப்பீ ரொன்றார்

வசனம்,

இப்படிசிட்சித்தபின்பு புலையர்களெல்லோரும் நந்தனாரடிக்குப்பயந்து பத்திசெய்யத்தொடங்கினார்,

கடுக்கா;

அரகரசிவசிவஅம்பல வாணா
தில்லைபமபலதேசிக நாதர்
புரமூன்றெரித்தபொன்னம்பல வாணா
கரியுரிபோர்த்தங்கருணை கரனே
அநுதினமன்றிலுளாடிய பாதா
பிழைபொறுத்தருளும்புண்ணிய மூர்த்தி

வசனம்,

மூடப்புலையர்களுக்கு புத்திதருவாயென்று அவர்களுமிப்படிச் சொல்லித்தொழுவார்,

கீர்த்தனம்-இ-ய-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்,

பல்லவி,

பத்திகள்செய்தாரே பரமசிவ பத்திகள்செய்தாரே

சரணங்கள்.

பத்திகள்செய்தா நற்றவம்புரியுமனந்த
சித்தமகிழ்ந்திடவத்தனைபேர்களும் பத்திகள்
எடுப்பான்சிவனைதபடிப்பான்தடியொன்று
பிடிப்பான்காலுக்கு அடிப்பானென்றே பத்திகள்
கல்லாலவனிங்கேசெல்லாலவனதி
வில்லாதவன்வெகுபொல்லாதவனென்றே பத்திகள்

வசனம்,

அந்தச்சேரியிலே புலையர்கள் பத்திசெய்தால் சேரிசிவலோகம் போலேவிளங்கியது சிலநாளுக்குப்பின்பு புலையர்களெல்லாருங்கூடி நந்தனாரைப் பணிந்து நல்ல வார்த்தைச்சொல்லி நாங்களெல்லோரு

ம்நாளொன்றுக்கு மூன்றுவிசை சிவனேயென்று சொல்லுகிறோம்ம
ற்றவேளையில் எங்கள் பண்ணைத்தொழிலை செய்வோமென்று மக்க
நந்தனார் நல்லது அப்படியேதப்பாமல் செய்யுங்களென்று நந்தனார்
சொல்லச்சேரிபெரியகிழவனுடன்திருப்பன் கூறுகதுப்போய்வந்தபள்
ளிபரிபுலையர்கள் நந்தனைச்சுற்றி அடிபணிந்து சொல்லுவார்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கொள்ளையெனும்பிறவிவினைமூலாவிசாரம்
குடிமாறிப்போவதற்கோவகைக்கேட்டு
கள்ளமனக்குரங்கதனால்விடையமாச்சு
கட்டியிருந்தாலிருந்தவிருத்திபோச்சு
உள்ளங்கைக்குள்ளிருக்குதங்கனியைப்போல
உருவில்லாதான்மாவோரறுத்துவாழ்வீர்
எள்ளளவும்பிசகில்லையென்றுஞானம்
ஏற்றுவார்மும்மலத்தைத்தூற்றுவாரே,

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்,

பல்லவி,

பார்த்துப்பிழையுங்கள் நீங்கள் பார்த்துப்பிழையுங்கள்

அநுபல்லவி,

பார்த்துப்பிழையுமிந்தசொற்றுத்துருத்தியை
எத்திக்கொழவேண்டாம் காற்றுப்போகுமுன்னே (பா)

சரணங்கள்,

ஆத்திமதிகுடுங்கூத்தனிடமாய்
சூத்திரத்தையிந்தசேத்திரத்துள்ளநாடி (பா)
வீற்றிருப்பீர்காலங்காத்திருப்பான்சிவ
சாத்திரத்தைஞானநேத்திரத்தாலுற்றுப் (பா)
மூலக்கனல்தாண்டிமேலக்கனைவந்து
பாலைக்குடியிந்தநாலுக்குள்வாராமல்
பாலகிருஷ்ணன்தொழுங்கோலக்கண்களை
மேலுக்குமேல்நாடிசாலர்கலியற

கீர்த்தனம்-இ-ம்-யமுனாகல்யாணி-அல்லது-சாங்காரூபகதாளம்.

பல்லவி,

தில்லைச்சிதம்பதம்பர மென்று ஒரு
தரஞ்சொன்னால்பரகதி யுண்டுண்டு

அநுபல்லவி

நல்லசருகுமுடி கண்டுசபா
நாதன்திருத்தாளைச்சிந்தையிற் கொண்டு தில்லை

சரணங்கள்.

வேரில்லாயலொருவிருட்சமொன் றிருக்கு
விளையும்விளைகளெல்லாமது செய்யுந்திருக்கு
பேரில்லாமல்ஞானத்திகொண்டு தருக்கு
பேரின்பயானைலாப்பிசகாமல் செருக்கு இல்லை
தேசம்புகழுந்தில்லைக்கோயில் வளைந்து
இருஞ்சைவபஞ்சாட்சரம் புரிந்து
ஆசையுடனேயர்த்தசாமத்தி லிருந்து
அங்கம்புளகிதமாயடிக்கடி பணிந்து தில்லை
மாயன்கோடாலகிருஷ்ணன்தினந் தேடி
வருந்துஞ்செந்தாமரைமலரடி நாடித்
தாயைப்பிரிந்தவிளங்கன்றுபோல கூடித்
தனித்திருந்துதாளம்போட்டுக்கொண்டாடி தில்லை

கீர்த்தனம்-இ-ம்-கௌளிப்பந்து-ஆதிதாளம்.

பல்லவி.

நமக்கினியபயமேது தில்லை நடராசரிருக்கும்போது

அநுபல்லவி.

மார்க்கண்டேயருக்காமறலியையுதைத்திட்
மான்மழுவேந்தும்மாதேவனிருக்க நமக்கி

சரணங்கள்.

இம்மைமறுமைமுதலியாவுக்கும்பரமன்
சின்மயாகாரரூபச்சிவபெருமானிருக்க நமக்கி
அரியயனமாரும் ஆலங்கண்டஞ்சமும்
பரிவுடன்வரக்காத்தபரமசிவனிருக்க நமக்கி
திரிவிக்கிரமனாய்வரும்திண்மாயன்மமதையை
விரிவுங்காளனாகிவிளக்கும்பரனிருக்க நமக்கி
ஆதிசேடனுமானுமலசேர்னிலக்குமியும்
மாதலாய்த்தவஞ்செயக்களித்தபரமனிருக்க நமக்கி
இரணியனால்வெறிகொண்டநரசிம்மனை
தரணியில்ரட்சித்தசங்கரனாகிருக்க நமக்கி

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

சங்கரனைத்துதித்தாடு இனிசனனமில்லையென்றுபாடு

அநுபல்லவி.

பொங்கரவணிந்திடுபொன்னம்பல வனை
புத்தியில்நினைவாகப்போற்றுவாய் சிவனை

சரணங்கள்.

யாரினிற்பெண்கள்பேற் கருத்து போய்ப்
பற்றவொட்டாமலே திருத்து
பேரின்பஞானத்தை வருத்து சுகப்
பெருவெளிநெஞ்சு விருத்து சங்கரனே
நீர்மேற்குமிழியிக் காயம் என்றும்
நிலையில்லாவாழ்விது மாயம்
பேரானமாலயன் தேயன்பெறப்
பேசுவதே யுபாயம் சங்கரனே
மனிதசனனத்தில் தேடுநல்ல
மாதவத்தோர்களைக் கூடு
தனிவெளியரமொரு வீடுதன்னைத்
தத்துவத்தால்கண்டு நாடு சங்கரனே

வசனம்,

இப்படிச்சொல்லிய நந்தனாரைநோக்கி அவர்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-சவாயிகண்டகம்-சாப்புதாளம்.

அவர்கள் புண்ணியவிந்தப்பிறவிப்பிணிக்குமருந்
துண்ணுமலிருப்பது உண்மையோ நந்தா
நந்தனார் கண்ணாலேபார்த்திடில்காட்டில்மறைந்திடும்
மண்ணானபூதங்கள்மாயவோ மைந்தா
அவர்கள் இருப்பதுபொய்யென்றிராததுமெய்யென்றும்
இருந்திப்பேசியவகையென்னடா நந்தா
நந்தனார் உருத்தெரியுதுநாமரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டால்காணலா மைந்தா
அவர்கள் விஸ்தாரமாமமிர்தபிண்டமானமத்தை
யத்திக்கொண்டிருந்ததுபகாந்திடும் நந்தா
நந்தனார் வித்துள்விருட்சமடங்கியவாறுபோல்
சத்துக்குள்ளண்டசராசர மைந்தா
அவர்கள் புத்திக்குளெட்டாதபோதத்தைநாமுண்டு
முத்திபெறும்வழிமொழியுமோ நந்தா
நந்தனார் அத்தனிருக்குமிடமன்னமபாதிகள்
பத்துதலில்லாப்பரவெளி மைந்தா
அவர்கள் தத்துவங்கள்தொண்ணூற்றறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண்ணுமவகையேது நந்தா
நந்தனார் சித்திரைபெழுந்தபின்நினைவுடனேகூடி
உத்தாரம்பேசியேதுண்மையே மைந்தா
அவர்கள் பித்தனைவேறுநபேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள்தெளியுமோ நந்தா

அந்தணர் பத்திவலைவீசிப்பார்த்திடும்வேளையில்
தத்திகுதித்திடுந்தாண்டவ மைந்தா
அவர்கள் சிலமுள்ளநல்லசேதிசொன்னாயுத்தன்
காலுக்குக்கும்பிடக்கண்டோமே நந்தா
அந்தணர் பாலுக்குச்சர்க்கரைபலித்ததுபோலுங்க
ளாலேபலன்றேவீக்காடாது மைந்தா
அவர்கள் தூலசரீரத்தைச்சுமந்துப்பிள்ளைப்பூச்சி
போலேயானேமுந்தன்புண்ணிய நந்தா
அந்தணர் பாலகிருஷ்ணன்தொழும்பரமசிவனரு
ளாலேபொங்கிவருபானந்த மைந்தா

எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காரமென்றுசொல்லைஜலப்போட்டு
உறுதியெனுமிருபுலக்கையிலேந்தி
வாங்காரமென்றகட்டுவாளையிட்டு
வடிக்கடியேனன்ணலியதைப்புடைத்தெடுத்து
சிங்காரசிவயோகநிஷ்டைகொண்டு
நிர்மலமதாயவருஞ்சுற்றிவந்து
பாங்கானநகனிருதாளைப்போற்றிப்
பணிந்திட்டார்திருநீற்றையணிந்திட்டாரே.

வசனம்,

அவர்கள் நந்தனாரைவிட்டு நீங்கித் தனித்திருக்க மனம்வாரா மல் சொல்லுவார்.

விருத்தம்.

இல்லைவிற்போகவேண்டாம் திரும்பிவந்தாலுமைச்
சொல்லாதபண்ணைப்பார்ப்மான் மனங்கொண்டபடியாலிந்த
எல்லையிலிருந்துதானே யீசனார்திருநாமத்தைச்
சொல்லியேசாலாமவீட்டிற் சேருவோம்வாரென்றார்

வசனம.

அனல்கண்ட மெழுகதுபோலுருகிப் பத்திவெள்ளம் பெருகிச் சொல்லியபுகழை கவராலிங்ஙனம்பண்ணி கண்ணீர்சலம் பெருகச் சொல்லுவார்.

கீர்த்தனம்-லாவணி-ஆதிதாளம்.

இல்லைவெளியிலேகலக்குமெர்ண்டாரவர் திரும்பிவருவாரோ
எல்லை ன்னை பேரளிப்பிறவாவென்றியம்புவதறியாரோ
பெண்பிள்ளைவெவுங்கூட்டமது பேய்ச்சுரைக்காய்த்தோட்டம்
கண்கொள்ளார்பெரியோரறிவிற்கனகசபையிறாட்டம்
நவாதியைல்தெரிசனங்காணத்தேடித்திரியாரோ
ஆதிரகியவிந்தமானுடங்கிடைத்தாலானந்தமடையாரோ

குஞ்சிதபாதத்தைக்கண்டாலொழிய குறையதுநீங்காதே
சஞ்சிதக்குமராதிகளுடாடியசடலமுந்தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம் பெறுவேன்தடைசெய்வதுமரியாரோ
இரவும்பகலுமொழியாக்கவலையிருப்பதுசுகமோடா
இன்பம்பெருகும்பரமானந்தவெள்ளமிழந்துநீபோடா

வசனம்.

சிதம்பரம்போவேன் நீங்களிங்கே இருங்களென்று நந்தனார் சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி,

சிந்தனைசெய்துக்கொண்டிருந்தாலுங்களுக்
கெந்தவிதமுங்குறையேறலாமல்லோ — சிந்தனை
அந்தண முனிவருமிந்திரனமரரும்
வந்துபணியுமரவிந்தபொற்பாதத்தை — சிந்தனை
மாமலைவளைத்தவன் காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன் தாமரைபாதத்தை — சிந்தனை
தம்புருவணிந்திடுந்தும்புருநாரத
ரும்பணியும்பொன்னம்பலவாணனை — சிந்தனை
வெம்பியதும்பிக்கருளியபாலகிருஷ்ணனென்
பணியுந்திருவம்பலநாதனை — சிந்தனை

கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-அல்லதுசாமாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைத்தலமென்று சொல்லத்தொடங்கிறு
இல்லைப்பிறவிபிணியும்பாவமும்

அனுபல்லவி.

சொல்லுக்குமிதுவேசிவலோகம்
எள்ளத்தனையறஞ்செய்யில்மோகத் — தில்லை

சரணங்கள்.

ஆகமவேதபுராணங்கள் — சாத்திர
மருந்தவம்புரிவார்க்கருளிய — பாத்திர
மாலயமாயிரத்தெட்டினி — னேத்திர
மானந்தத்தாண்டவமாடிய — சேத்திர தில்லை
கணத்திலாடுமணிமாதி — சித்தியுங்
காத்திலாரும்விண்ணோட் — வெற்றியும்

இணையில்லாதகுருசாஸ்திர பத்தியும்
இகத்திற்றுயனவருஞ்சிவபத முத்தியும் தில்லை
பரமரகசியமொன்று பார்க்கலாம்
பா கிருஷ்ணன்கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
கசடர்கட்குமுத்தியுமுண் டாக்கலாம் தில்லை

வசனம்.

நந்தனார்ஞானவுபதேசஞ் சொல்லக்கேட்குமுன்னே நந்தனாருடன் திருப்புன்கூறிற்போய்சிவதரிசனஞ்செய்துவந்தவர்களாகிய அறுவன்தொந்தி ஆனையேறிமுத்துமாடகருனிகாத்தான் பாச்சலூரான் ஆண்டிசேவகன்சொறியன்வெறியன்காணியான் எல்லைச்சுற்றியென்றபெயருடையவரிந்த ஆறிருபேர்களுமானந்தமடைந்து அவரவர்கள்நிஷ்டையிலிருக்கத்தொடங்கினார் மற்றப்புலையர்கள் கூட்டங்கூடி நந்தனார்நம்மைநாளொன்றுக்குமூன்றுதரஞ்சிவநாமத்தைச்சொல்லச்சொன்னகுற்றத்தைப்பாராட்டிநந்தனையடிமைகொண்ட அந்தணனிடத்திற் சொல்லுவார்,

விருத்தம்,

இரவுபகல்பரமசிவனிணையடியேதொழுதிருக்கு மின்பங்கூறிக் களைபுரளுங்கடலைபோற் சிவத்திலிடைக்கருத்துணரக்கண்டெல்லாரும்பாவிவரும்புலையர்களும்பண்புரவேநெறிகாட்டிப்பகரக்கேளிர் அரியதொருஅந்தணவனடிமைபுரியுந்தணர்பாலரிக்கைசெய்வார்.

தொண்டிச்சிந்து-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

ஐயேயொருசெதிகேளும்உங்கள் அடிமைக்காரப்பறையரடத்தையெல்லாம்வரவரக்கெட்டுப்போச்சுசேரியில் வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்குடியிருக்கமாட்டோம் எப்போதும் கூக்குரல் போடுவானுக்கமறந்தேஇருப்ப னொருவேளை தில்லைச்சிதம்பரமென்று சொல்லிமதம்பிடித்தே அழைப்பானொருவேளை எங்களையும்அண்ணே வரவரவென்றுசொல்லி கிண்ணாரங்கொட்டிகுதிப்பா னொருவேளை திக்குமுக்கல்கொண்டவன்போலேதையாகண்டவன்போல் களிப்பானொருவேளைமரம்போலேகையசக்கல்காலசைக்கல் மெய்யசைக்கலும் இருக்காதொருவேளை தாளம்போட் டெக்கலிகொட்டியே,குடிசைகுட்புகுந்துபேசானொருவேளைகண்டதெல்லாம்பிரட்டென்றுசொல்லுவான்முரட்டுதனம்மன்னொருசாமி போலேகிளம்பி வாய்விட்டலறுங்குரலுமிரட்டுமேஐயோசிவனேயென்பான்கீழேபுரண்டழுவான் யாரையுந்தொழுவானே தூண்டிமீனதுபோலே துள்ளித்துள்ளித் துடி

ய்பான் பழ்களைக்கடிப்பானே சிவனென்றுமூன்றுதரம் நாங்களுஞ்செ
ய்பவேணுமல்லாவிடில் வைப்பிறுதைப்பான் கோவிலிற் போவோமெ
ன்பான் எங்களையுங்கும்பிடச்சொல்லியில்லாவம்பு பண்ணுவான் சுற்றி
வரச்சொல்லியடிப்பான் சிவன்பேராச்சொல்லடா சந்நிதியில் நில்ல
டாவென்பான் சொல்லித்துலைக்கவேணும் இல்லாவிடில் சுக்குமாந்தடி
கொண்டோங்கிவிடுவான் கொம்பேறிமுக்கன்போலே முதுகினிற்குத்
துவான் புலிபோலேதத்துவானே இதுவென்னகாரணமோ எங்களுக்
கீனமாயிருக்குதுமானமல்லவோ கறுப்பண்ணசாமிதானோ இருளன்
காட்டேறியோ வீரையன்விட்டேறியோ பாவாடைராயனோ தானோ ரண
பத்திரகாளியோ வுன்மத்தவீரனோ பூசைகள்போட்டுப் பார்த்தோம்
ஒன்றிலும்போவதில்லை காரியமாவதில்லையே எங்கள்வள்ளுவனாக்கே
ட்டோம் அவனொடுத்துச்சொன்னரிதை விடுத்துச்சொன்னார் மயானு
உருத்திரனார்பிடித்துவாட்டுகிறார் இப்படியாட்டுதென்றார் தெளியா
தென்றுசொன்னார் ஐயே வெளியாதென்றுசொன்னார்.

கீர்த்தனம்-இ-ம்-கன்னடா-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

சேதிசொல்லவந்தோம் நந்தனார் சேதிசொல்லவந்தோம்

அநுபல்லவி.

சாதிமுறைமைதெரியாதவனுமக்கு
வந்தவனென்றெருமாதமாய்த்தெரிந்த சேதி

சரணங்கள்.

ஏரைப்பிடித்துசற்றே யுழுவான் மண
தேங்கித்தள்ளாடியே விழுவான் எங்கள்
சேரியைப்பார்த்தே யழுவான் சிவ
சிதம்பரமென்றே தொழுவானையே சேதி
னத்துமுடியைக்கையி லெடுப்பான் அதை
கடத்தெறியாமலே விழிப்பான் இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான் அடே
பாவியென்றெங்களை யடிப்பானையே சேதி
உதட்டையசைத்துமுணு முணுப்பான் அவன்
வானுறக்கத்தையும துறப்பான் நாங்கள்
அதட்டிப்பேசினா லடிப்பான் பொன்
னம்பலவாணனைப் படிப்பானையே சேதி

கீர்த்தனம்-இ-ம்-கமாசு-ஆதிதாளம்

பல்லவி.

அடக்கியாளுமையே இவனை அடக்கியாளுமையே

அநுபல்லவி.

அடக்கியாளுமிந்தத்துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துக்கண்டித்துபடபடத்து அடக்கி

சரணங்கள்,

பொன்னம்பலவாணனென்றிவன் பேசி
பொழுதுபோக்குவான் சாம்பலைப்பூசி
சனனந்தங்கொண்டவன்போலவே வாசி
சண்டைபிடிக்கவருவானிவன் தோடி அடக்கி
பலித்துரைபோறுமந்திரம் போட்டான்
பறையானயினந்தங்களைக் கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்தானிவனொரு கோட்டான்
கோபக்காரனெங்கள்வழிபட மாட்டான் அடக்கி
குளத்தைவெட்டச்சொல்லிக்கூலியைக் கொடுத்தான்
கட்டிக்கொண்டுபோய்ப்பயல்களைக் கெடுத்தான்
களத்தைச்சிங்கலெபங்களைவிடுத்தான்
காடுமண்டிவருஞ்சுடலையிற் படுத்தான் அடக்கி

வசனம்.

சேரிசொல்லவந்த புலையர்களைப்பார்த்து வேதியர்சொல்லுவார்.

விருத்தம்.

காலமேவந்தாலிங்கேகள்ளக்கும்பிடுகள்போட்டுப்
பாலனைபபோலேபேசிப்பசப்பினான்போடாவென்றேன்
வேலைகுழலகிலிந்தவினனைப்போலேகாணேன்
சிலமாஞ்சிதம்பரத்தைச்சேரவேவிடைகொடேனே

வசனம்.

அந்தணர்சொன்ன மொழியைப் புலையர்கேட்டு மிகவுஞ் சந்தோஷங்கொண்டு சேரிவந்து சேர்த்தன் நந்தனெப்போதும் போலே அந்தணரிடத்தில் வருகிறார்.

துக்கடா-ஆதிதாளம்.

நந்தனாரும்வந்தார்வெகு
சொந்தமானதங்களையாளக்காண நந்த

அங்கமுழுதிலும்நீறுபூசியே அரகராசிவசிவவென்றுபேசியே
சங்கையாருந்தருக்கைகள்வீசியே சாமிசாமியென்றுதன்னையேசியே
தில்லைச்சிதம்பரபள்ளுபாடியே தெரிசனங்காணேனென்றுவாடியே
அல்லலறுஞ்சிவலோகந்தேடியேயடையவேணுமென்றிங்கோடியே

நந்தனாரும்வந்தார்.

விருத்தம்,

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சந்தேகந்தெளியாதுதானுய்கிற்கும்
பேதைகுணம்பற்றற்றுப்பேரின்பம்வருடத்தும்பேணிக்காக்கும்
ஆதிபராபரவென்னுந்திருச்சிற்றம்பலத்தைக்கண்டுவீழுன்ன (ர்
வேதமொழிவிளங்கிவருந்திருவாயால்விடைகொடுத்துவிடீரென்று

கீர்த்தனம்-இ-ம்-உ-சேவி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம்கண்டபேர்க்கு
சென்மமானபிணியைக் கருக்குதாம்
உயருஞ்சிகரக்கும்பம் தெரியுதாம்கண்டபேர்க்கு
உள்ளங்குளிரக்கருணை பரியுதாம்
பண்ணவாயன்மாலுந் தேடுமாம்தில்லைக்காட்டில்
பாம்புபுலிக்குநிர்த்த மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம் ஆனையுமது
ஆநந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய சாமியாம் தருமராசன்
புரத்தில்பழுதுவந்து கேலியாம்
உருவில்லாதகுருவொன் றிருக்குதாம்மூலக்கனலை
ஊதியெழுப்பிக்காணப் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்நான்மறைக்கு
முணர்வில்லாதகாட்சி தருகுதாம்
போய்வருகஉத்தாரந் தாருமேபொன்னடிதான்
போற்றவேகண்ணாலே பாருமே தில்லை

வசனம்,

சிதம்பரம்போவேனென்று அந்தணர்கேட்கும்படிநந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஏகதாளம்.

தாதரிகிடதகசந்தரிசன சாகாததிமிதகிடதகணத்தரிதின்ததஇம்தகச
ந்தரிகுந்தரி தந்தகணம்தனனந்தனனந்தனந்தானகித்தனததனின்
னுகிடதகதோந் தத்தின்னுகிடதகதோந் தத்தின்னுகிடதகதோம்.

பல்லவி.

ஆடியபாதங்காணுமோ பிறந்தானந்தம்பூணுமோ

அநுபல்லவி.

நாடுந்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனார்குருவாரத்திலே மன்றுள் ஆடிய

சரணங்கள்.

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
டத்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனே யருணைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலுக்கி ஆடிய
கொட்டமளிக்கும் புனல்றொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே கெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத்தென்முகம்நோக்கி ஆடிய
சேணுஞ்சடைப்புனல் பூமியில்சொட்ட
சேவித்தநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட கோளமுமுட்ட
கோபாலகிருஷ்ணனுமத்தளங்கொட்ட ஆடிய

வசனம.

ஆனபடியினாலேநான்சிதம்பரம்போகஉத்தரவுதரவேணுமென்று அந்தணரைத்திருநாளைப்போவார்கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிக்தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

உத்தாரந்தாருமையே எனக்
கொருவருமில்லைபரகெதியடைய உத்
வித்தைகள்கற்றதுமில்லையாதொரு
பத்திமிற்சென்றுபரகெதியடைய உத்
குற்றங்களெத்தனைகொடியேன்
அத்தனையும்பொறுத்தாதரவாக உத்
பெண்டுபிள்ளையென்றுபேயனைப்போற்றவே
கண்டுகளித்துகாலங்கழித்தேன் உத்
தில்லைச்சிதம்பரத்தைதெரிசித்துவந்துங்க
ளெல்லையைக்காத்துக்கொண்டிருக்கிறேனையே உத்

வசனம்,

நந்தனார் சிதம்பரம்போக உத்தரவு கேட்டதனால் வேதியரடிமையைப் பார்த்துச் சொல்லுகிறார்,

விருத்தம்,

படிபுகழ்தில்லைநாதன்பத்தியேயுருவாய்வந்து
கடிநகராதனூரில் களித்திடும்நந்தனென்று

சிடுசிடுமூஞ்சிகாட்டிச் சில்விடம்போலெநெஞ்சந்
துடிதுடித்திடவேஞாயந் தோடியும்பேசுவானே

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

சேரிமுற்றுஞ்சிவபத்திபண்ணும்படி
விட்டையாமதுவிட்டையாம்
சேதிசொல்லவேணுமென்றிங்கேநீ
வந்தையோஅகமகிழ்ந்தையோ
காலைமாலையில்வந்துதெரிசனங்
காட்டுறாய்கிலைநாட்டுறாய்
கதறினாலுமூர்க்குருவிகருடன்போ
லாகுமோவதிவேகுமோ
அடிமைவேலைசெய்யுமுனக்கிந்தக்கொண்
டாட்டமோசெனக்கூட்டமோ
அடக்கியாளமாட்டேனோசிங்கக்குட்டி
யல்லவோவதைசொல்லவோ
காளிபூசையவர்போடும்போதுநீ
கண்டித்தையாந்தெண்டித்தையாம்
கபடமெல்லாம்வெளிப்படுவதாகவழி
சுட்டுகிறேனிதை நாட்டுகிறேன்

வசனம்,

நந்தனார் சிதம்பரம்போறேனென்று சொல்லுவதால் அந்தணர் கண்டிக்கிறார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி,

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா — பறையா

அநுபல்லவி.

அறியாத்தனமினிசொன்னாலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் — பறையா

சரணங்கள்,

சிதம்பரமென்பதை — விடுகொல்லைச்
சேறடியிலேவந்து — படுகாற்றைப்
பதத்திலேபிடுங்கி — நடுகறுப்
பண்ணனுக்கேபலி — கொடு அடா பறையா
எப்போதுமொருதடி — பிடிகையி
லெடுத்துக்கொண்டேதமுங் — கடி எங்கள்

கற்பனையாம்பள்ளு படிகால்
நோகாமலேகாடியைக் குடிஅடா பறையா
கள்ளந்திருதற்குப் பாரு உன்
கால்படும்பண்ணையில்வீழ்ந் திரு இது
சொன்னதுமில்லையேஉன் குரு நீ
சுகமுடன்வாழ்ந்துக்கொண் டிரு அடா பறையா

விருத்தம்.

ஓதியபடீராவென்றும் உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கருப்பாவென்றும் பாவாடைராயாவென்றுந்
துதிபெறுஞ்சூளாவென்றுந் தொட்டியச்சின்னானென்றும்
மதுவொடுபிரிதம்வைத்து வருந்தியேவணங்குவாயே

வசனம்,

அந்தணர் நந்தனாரைக் கண்டித்து மறுபடியும் நல்வார்த்தை சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாஒருசேதிசொல்லுகிறேன்கே
விந்தை பங்குதோன்றியநாள்முதல்
சொந்தமுறிமெழுதிக்கொடுத்துநீ
வந்த பறையனல்லவோமறந்தாய் நந்தா
பாரு இந்தவயல்வரப்பைவெட்டிப்
பேரு அந்தக்கழனியைவெட்டிப்பண்ணை
சேருபொறுப்புள்ளவனுனையன்றி
யாரு இதுவல்லவோகாரியம் நந்தா
வாடா உன்கூலியைமுழுதுந்தர
வோடாபண்ணைப்பறச்சிகளுடனே
கூடபழனங்கடோறும்நடப்
போடா இதுவல்லவோபுண்ணியம் நந்தா
பாடுஉன்கலப்புதெய்வத்தைக்கொண்
டாடுகள்ளுநல்லுடன்பூசைகள்
போடுநெல்விளையும்படிக்குவழி
தேடுபுத்திசொன்னேனிதுதான் நந்தா

வசனம்.

வேதியர் நந்தனாரைச் சிதம்பரம் போகாதேயென்று கண்டித்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-க-ம்-ராகநாமக்கிரியை ஆதிதாளம்,

பல்லவி.

சிதம்பரம்போகாதே சொன்னேன் சிதம்பரம்போகாதே

அநுபல்லவி.

சிதம்பரம்போனாலிகம்பெறலாமென்று
சேதிசொல்லுறாயுன்சாதிக்கடுக்குமோ சிதம்பரம்

சரணங்கள்.

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடா முழுநாளுமிங்கே
தள்ளிவிட்டுவுன்னைத்தரும்படிசெய்வேன் சிதம்
சாத்தைப்பிடுங்கிக்கழனி நடவேணும் அந்த
நஞ்சைவயலைச்சுற்றி உழவேணும்
பார்த்துப்பரமபடித்து பறந்துவாராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீசிதம்
அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ நீ
அடிமைக்காரப்பய செல்லவோ
எடுத்துக்காட்டுவேனிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினால் தாளையிலாப்போவ் சிதம்

வசனம்,

அந்தணர் கண்டித்துச் சொன்னதால் நந்தனார் துயரமடைந்து சேரியில்வந்து சிவனை நினைத்து பக்திபுரிந்து கொண்டாடுகிறார்.

கீர்த்தனம்-உ-ம்-தண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால்-முத்திபெறலாமே

அநுபல்லவி,

எத்திசையுமெவ்வுயிர்க்குமவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன்மலரடிதினந்தோறும் பத்தி

சரணங்கள்.

கட்டழகிசேரனிடங்காதலது போலே
கடுகிவருங்கன்றினிலைகபிலையது போலே
கட்டவாடைத்துணியுமில்லாப்பேதையொருக் காலே
காவலனார்பதம்வருகில்களிம்பதனைப் போலே
கண்டுமுறைமைகலக்கண்டதியார்மருமயக்கம்
கற்பனையாமிப்பிரபஞ்சஞ்சொப்பனம்போலொப்புமிரும் பத்

தயிர்குடிக்கில்பால்குடிக்கத்தழுவுதல்திருஷ் டார்த்தம்
சடலம்பொறுக்காமல்துவர்தருகிலி மோகந்தம்
ஆயிருந்துவழுத்திந்தமாயையுப சாந்தம்
ஆகுமொன்றுசாதனங்கள்வழங்குது வேதாந்தம்
காயஞ்சனிக்காதிருக்கக்கண்டுகொள்ளவேண்டுமென்றால்
காசுபணமபாசமதுமாசவே ரோகமுகின் பத்தி
பச்சைமரத்தாணிபோலேபரிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன்பணியும்பொன்னம்பலவனைக்கொண்டாடி
இச்சைவொழிந்தைம்புலன்களைந்துகளும் வாடி
ஏகரசமானபரிபூரணத்தைத் தேடி
அச்சமறந்திருவிழிலானந்தநீர்களாபுரள
அரனேதிரிபுரனேகங்காதரனேபராபரனேயென்று பத்தி

வசனம்.

சேரியில்சிவபத்தி பண்ணிக்கொண்டிருக்கிறபன்னிருபேர்களுடன்நந்தனுமிருந்துபக்திபண்ணும்நாளையில் ஒருநாள்நந்தனார்பன்னிருவருடைய பக்திதிடப்பட்டதோ இல்லையோவென்று அறியப்பரிட்சைபார்த்தார்.

இருசொல்லலங்காரம்,

நந்தனார்-சிவதலத்தின்சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள்-அவித்தைகளைந்தாண்டிநிற்றலேகாட்சி யென்றார்
நந்தனார்-சிற்சபையின்மகிமையென்னசெப்புவீ ரென்றார்
அவர்கள்-அச்சுதறுங்காணுதவானந்த மென்றார்
நந்தனார்-ஆசையினாலென்னபலனுகு மென்றார்
அவர்கள்-நாக்கதிலேசிவநாமகவிது மென்றார்
நந்தனார்-கற்றதனாலென்னபலன்கண்டோ மென்றார்
அவர்கள்-கொற்றடிமைக்காரன்பலன்கொண்டா ரென்றார்
நந்தனார்-அம்பலத்தைத்திறைபோடத் தொடங்கினாரோ
அவர்கள்-சம்புவித்தைமாயைக்கு ளடங்கினாரோ
நந்தனார்-மனத்திருத்திக்கொண்டாக்குவாராதொன்றில்லை யென்றார்
அவர்கள்-களவருத்தமுண்டாக்குங்காராதுமொல்லை யென்றார்
நந்தனார்-சாதியிலேயெளியவன்தானறிவேனோ வென்றார்
அவர்கள்-ஆதியிலேபேதமில்லை அறிவீரோ யென்றார்
நந்தனார்-ஞானமில்லாதவர்முத்திநாடா ரென்றார்
அவர்கள்-ஊனமில்லாச்சிவபக்திதேடா ரென்றார்
நந்தனார்-மதியில்லாதவர்களுக்கெல்லாம்விதியே தென்றார்
அவர்கள்-துதியில்லாதவர்க்கெல்லாங்கதியே தென்றார்

நந்தனார்-பவக்கடலைக்குளப்படிபோல்பகுப்பா ரென்றார்
அவர்கள்-சுகக்கடலிலிளைப்பாறிசுகிப்பா யென்றார்
நந்தனார்-பாப்பானுத்தாரங்கொடுப்பானோ வென்றார்
அவர்கள்-காப்பாய்ழுங்கடவுளுக்குகைப்பார மென்றார்
நந்தனார்-படித்தாற்போல்காட்டிவிட்டேன்பமைாச்சுதென்றுசொன்
அவர்கள்-அடித்தப்பால்போட்டுவிட்டோராராலேயாகு மென்றார்
நந்தனார்-அங்கேயேன் நீங்கள்வல்லேயோ வென்றார்
அவர்கள்-இங்கையேனேதுஇல்லேயோ வென்றார்
நந்தனார்-எங்குமிறைந்தபூரணங்க ளென்றார்
அவர்கள்-இங்குமிருந்துஇயற்றுங்க ளென்றார்

வசனம.

இப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் தனக்குத்தானே பரவசமாய் ஆனந்தக்கண்ணீர் பெருகப்பாடுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

பாடுவாய்மனமே சிவனைக்கொண்டாடுவாய் தினமே
இந்திரன்முதலிய இமையவர்க்குபகார
நந்தியின்னம்தேறும் நம்பன்பதம்போற்றி பாடுவாய்
ஆலந்தனையுண்டமரனைக்காத்திரு
நீலகண்டன்கழல்பெற நெறியுடன்போற்று பாடுவாய்
சீலமாதவாசித்தத்தினின்றுடுஞ்
சூலபாணியனைனுஞ்சுயம்புதாள்போற்றி பாடுவாய்
மோகமாந்துன்பத்திலுல்மூழ்கிக்கெடாமல்
ஆகமமுறையிடும் அந்திவண்ணனைப்போற்றி பாடுவாய்
பஞ்சாட்சரந்தன்னைப்பக்தியாயுருவேற்றி
மெய்ஞ்ஞானம்பெற்றுய்யுமேலோனைநீபோற்று பாடுவாய்

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி

சிதம்பரமேநினைமனமே முத்திபதம்பெறலாகுமனமே

அநுபல்லவி.

சதம்சதமெனும்பொருள்பதம்பதம்மய மருள்
சமரசநடம்புரிசாமிசிதம்பரவிமலன்திருவுருநீகொள்ளாச் சித

சரணங்கள்,

ஒழியாக்கவலைகொண்டுவிழலாய் ஆனாய்
உண்மையில்லாலிட்டிடுநிழலாய்

தழுவாதிருந்ததில்லைத்தலமெனுமேல் வீட்டை
சாந்ததாலல்லோநல்லசாபல்யமாம் பாட்டை
பந்தமும்பெற பந்தமுமேயற
எந்தவினைத்திர முந்தூரம்முந்சிதம
தேகமெடுத்தவருண்மையறியாய்-மோசத்
தெரியவைபாவலைசிக்கிமுழியாய்
சாகுமட்டுஞ்சம்சாரமே விட்டு
சலியாமலேயுழைத்துச்சண்டாளமான துட்டு
சம்பாத்தியமது வம்பாருமிதி
நம்பாதித்தறி தெம்பாய்பதி சிதம்
உனக்குள்ளேயுணர்வாய்நிமோனம்உண்மை
ஓர்வழிகாட்டிடுமே ஞானம்
தனக்குச்சிதம்பரஞ்சேர்ந்ததாலே தன்மயம்
சத்திரமாங்கூட்டும்சாம்பிராச்சிய சின்மயம்
சரிவாசிவதரு வசமயமாய்வரு
முருவெளியெனுமொரு பொருளதுவாந்திரு சிதம்

துக்கடா.

அரகரஅரபகாதேவா
சிவகாமிநாதா தில்லைபில்வாசா

நந்தனார்சிலநாளானபின்புஅடிமைகொண்டஅந்தணரிடத்தில் வந்துசிதம்பரம்போக உத்தாரம் மிகவும் வருந்திக்கேட்கிறார்.

இது அறுசீரடி விருத்தம்,

வேதியரோபெரியவரோநல்லவரோநான்கடையன் விண்ணோர்மெய்ச்சும், சாதியரோபலகலையுங்கற்றுணர்ந்து புரையில்லாதவமேசெய்யும், போதியரோபத்தியில்லாநான்புலையனேதறியேன் புண்ணியமூர்த்தி, யாதிகுருசிதம்பரத்தைக்காணவென்றே யாசைகொண்டேனனுப்புவீரே.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி

தில்லைச்சிதம்பரத்தையொருதரமாகிலுந்
தெரிசித்துவாவென்றுத்தாரந்தாருமையே

அநுபல்லவி

தில்லைச்சிதம்பரத்தைக்கண்டால்பிறவிபிணி
இல்லையென்றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் தில்லை
அல்லலறுக்குந்திருவம்பலநாயகனை
அல்லும்பகலுமாடுமானந்தம்பெருகிய தில்லை
யாதிமுதல்வாயென்னையடிமைகொண்டல்லவோ
வேதகுலமேபக்தன்மீதில்தயவுசெய்து தில்லை

கீர்த்தனம்-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி

தெரிசிக்கவேணுஞ் சிதம்பரத்தைத் தெரிசிக்கவேணும்

அநுபல்லவி

தெரிசித்தவுடனுடல் கிலேசபிணிகளறும்
பரிசுத்தமாகுமுன் மறுசுத்தமாகவே

சரணங்கள்

பக்தர்பணியுந்திருக்கூத்தன் சந்நிதிதொழும்
தேத்திப்பிறவிய தாற்றியெப்போது ம — தெரிசிக்க
வேதனேயடியவர் போதனேமுனிவர்கள்
நாதனேகரங்குவித் தாதரவாக — தெரிசிக்க
ஈசனேபுலியூரில்-வாசனேகனகச
பேசனேயென்று நடராசனேப்போற்றி — தெரிசிக்க
காமனேயெரித்தவர் வாமத்தினின்றசிவ
நாமத்தைசொல்லியர்த்த சாமத்தில்வந்து — தெரிசிக்க
ஞாலம்புகழுமவன் மாலையணியும்பே
பாலகிருஷ்ணன்தொழுஞ் சீலபொற்பாதனை — தெரிசிக்க

வசனம்.

நந்தனார் தரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுகிறார்

எண்சீரடியாசிரியவிருத்தம்

புத்திசொல்லக்கேளாத மூடாவுந்தன்
　பிரட்டெல்லாநானறிவேன்போடாபோடா
பத்தியென்றுஞ்சித்தியென்றும் பறையர்க்கேது
　பாப்பாரதெய்வமது பலிக்காது
குற்றமுண்டுன்சாதியிலே வழக்கமில்லாக்
　கொள்கைபறைச்சேரியிலேகூடாதப்பா
பித்தமதுகொண்டவன்போ லிங்கேவந்து
　பேசாதேபோபோவென் றேசுவானே

கீர்த்தனம்-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி

சிதம்பரதெரிசனமாகியதைச்சிந்திக்கலாமாபறையா

அ

அநுபல்லவி

சிதம்பரதெரிசனஞ் சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம் நீசொல்வதுமாயம்
சொல்லாமேலே இங்கேயில்லாதே
சேரிக்குப்போடா நாளைக்குவாடா சிதம்பர

சரணங்கள்

சனகமகாமுனி யோகிகள்தேடிய
கனகசபேசனைக்கண்டறிவாயோ
பேசாதேகைவீசாதே
வீரனைநொறுடாவரியையுழுடா சிதம்பர

தவமுடையோர்கள் தரிசிக்குமந்திரஞ்
சிவபதமென்றுசேவிக்கலாமா
ஆகாதுவினைபோகாது
விரைதெளியன்றோ அறுதலிமகனே சிதம்பர

வசனம்-

உழுதுசேறுபண்ணி பரம்படித்து விரைதெளித்து நாற்றுபறித்து நடவுநட்டு மடைதிறந்து மடைகோலி களைபிடுங்கி காத்திருந்துபகத்தில றுத்து கட்டியறுத்து நிரம்பிய பட்டடையைக்காப்பதுமில்லை இராக்காலங்களில் பந்தம்பிடித்து தடியெடுத்துகொம்புதப்பட்டை முழக்கிகோலாகலமாகி நாலுபறையரோடிங்கூடி வரப்பைவிட்டு ஊரைசுற்றிவந்துகாக்கும்படி கிராமத்தாரிட்ட காவல்காப்பதுமில்லை உனக்குவேண்டியவூழியகம முதலாகிய தேசகருமமும் மறந்துஎப்போதும் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலம் சிதம்பரமென்று பிடித்துப்பிடித்துத் தாயைவிட்ட குழந்தைபோல வாயைவிட்டலறி-பேய்பிடித்தவனைபோல் மதிமயங்கி உடல்கலங்கி எல்லோரும்பழிக்கக்கீழே புரண்டழுது தத்துப்பித்தென்று தள்ளாடியகாரணமென்ன என்று அந்தணர்நந்தனைக்கேட்கிறார்.

கீர்த்தனம் இராகம் சூரியகாந்தம் ஆதிதாளம்

பல்லவி

நந்தா வுனக்கிந்தபிரமைவந்தகாரணம்நானறிந்திடச்சொல்லும்

அநுபல்லவி

அந்தரங்கமுள்ள சொந்தபறையனை
யன்றியிருப்பதுபோய்சண்டைபிடிக்கவந்தாய் நந்தா

சரணங்கள்

சா திருநடமை துறந்தாய் தில்லைச்
சபாபதியை நினைந்தாய்
சூதுர்க்காரப் பறையருடன் கூடிச்
சும்மா யிருப்பதுன் எம்மாத்திரம் தான் நந்தா

குலத்திலில்லாத வழக்கம் நீயதைக்
கொண்டாடும் ஒழுக்கம்
வெளுத்த திருவென்ன எனக்கெச்சரிப்பது
மேளியலணிவரோ வயக்காந்தன்னில் நந்தா

இரட்டிப்புரட்டுமறியாய் பொல்லாத
இங்குவார்த்தை யுரையாய்
முரட்டுத்தனத்தை என் முன்னே காட்டி
விரட்டிப்பேசுறாய் தெரியக்கமோ அடா நந்தா

வசனம்

வேதியர் நந்தனாரைப்பார்த்துச் சிதம்பரம் வந்தகாரணமென்னவென்றுகேட்டபின் நந்தனார் வேதியருக்குச்சொல்லுவார்

அறுசீரடியாசிரியவிருத்தம்

மனங்கொண்ட விடமெல்லாம் போகாமலாவலைவிட்டு மறித்து வாங்கி
அனல்கண்ட மெழுகுபோலெனதுள்ளங்களாக வுருக்கிச சாய்க்குப்பு
னலகண்டமேவணியனைப் புண்ணியனைப் புராந்தகனைப் போற்றிசெய்யக்க
னல்கொண்ட தில்லைநகர் போய்வருவேன் கருணைவாழி காட்டுவீரே.

வசனம்

நந்தனார் வேதியரைப்பார்த்து உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுதல்
கீர்த்தனம்-இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி

கட்டநடவு விளையும் பட்டவெளியைத் தொட்டபோதிலும் நட்ட
கொட்டமதியை விட்டுவிடு கேளடா பஞ்சையாளடா நட்ட
கிட்ட நெருங்கும் பஞ்சையுன் சால்பட்டு திருவல் பகையை சொன்னாய் நட்ட

விருத்தம்

கதிரொருமுழமேநீளும் கட்டுமுக்கலமே நாளும்
துதிபெறுந்தாவுன்கை தொட்டதே தங்கமாகும்
பதிதனிற் பெருமைசொல்லும் பறையனே இருந்து தில்லைச்
சிதம்பரப்பித்தேன் கொண்டாய் செய்தொழிலேதென்றாரே

வசனம்

நந்தனுருக்குச் சிதம்பரப்பித்துத் தெளியாமையால்வேதியரென்ன செய்யப்போறேனென்று துயரமுற்று நந்தனரைப்பார்த்துப்புலம்புவார்

கீர்த்தனம்-இராகம்-தனுகரி-ஆதிதாளம்

பல்லவி

பித்தனாய்ப்போனதென்னநந்தா பித்தனா

எத்தனையோபுத்திசொல்லுகிறதுப்படித்தும் பித்தனா

சரணங்கள்

சித்தமிப்படி செய்ததாரோ
பற்றுதலில்லாமலே பண்ணியபேராரோ
பத்தியென்றுபே ரிட்டதாரோ
நித்தமுமிப்படியே நிலையிட்டதாரோ-பித்தனா
எத்திசையும்புகழ பெற்றிருந்தும்
வித்தைகளனேகம் விளம்பத்தெரிந்தும்
பத்தியோடுசொல்ல மறந்தும்
சுத்தனென்றுபேரிட்டு காணுனக்கிருந்தும்-பித்தனா

வசனம்

மனதிற்றுயரமுற்றவேதியரைநந்தனர்மிகவும்வணங்கிச்சொல்லுவார்

அறுசீரடியாசிரியவிருத்தம்

பித்தமதுதெளிந்துவிடமருந்துண்டுதில்லைவனம்பேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண்சந்நிதியில்நேராகத்தலைவணங்கித்
தித்தியென்றுநடனமிடுந்திருக்கோலங்கள்குளிரத்தெரிசித்தானும்
பித்தமதுதெளிந்துவிடும்வேதாந்தமழைசொரியும்பெரியகோவே

கீர்த்தனம்-இராகம்-செங்கலா-ரூபகதாளம்

பல்லவி,

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குதுபேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி

மற்றமருந்துகளின்றுலுமுள்ளுக்குவல்லேவல்லேவல்லேஐயேஅடு

பாம்புபுலியுமெய்ப்பாடுபட்டுத்தேடிப்பார்த்துப்பயரிட்டதுஅந்தப்
புரரளந்ததிருமாயனும்வேதனும்பார்த்துக்களித்ததுண்டு

பார்ப்பதியென்றொருசீராட்டியதில்பாதியைநின்றதுண்டு இன்னம்பா
தியிருக்குப்பறையர்ரீயும்போய்ப் பாரென்றுத்தாரந்தாரும்தாரும்பித்தர்
பத்துத்திசையும்பரவிப்படர்ந்தாலும்பார்த்துப்பிடியாரே
நதநிருக்குநிகருந் தாளங்கள்போடுந் தன்னை - சிலம்புகொஞ்சுக்
திநகிகருத்தேனோசெங்கரும்போநல்லபித்தமுனை யாரக்கேளன்
சிந்தந்தைகட்டி யிழுக்குது அங்கே செவ்வாய்போதுங்கண்டால்தீருமை
யே பித்தர்
ஊரைச்சொன்னாலும்பிப்பாலுக்கோலைட்டமுக்கும்
பேரைக்கொல் நடிப்புலம்புகிறார் பேர்களுக்குப்பிறப்பு
சாருமரையுந்திருமருநதுசாதிவயப்பாராதுஇன்னங்
தீராநநோய்கள்படைத்தவெனக்குத்திருநீருந்தீருமையே பித்த

கீர்த்தனை-இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

சிதம்பரம்போகாமல் இருப்பேனோ
செம்மைதந்தைநவினுச்சிக் கெடுப்பேனோ-சிதம்பர
பக்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கேசிதம்பர
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசுரும்பாசமும் பிதற்றலுமிங்கேசிதம்பர

வசனம்

இப்படிநந்தனார்சொல்ல வேதியர் மூர்ச்சையடைந்து விழுந்துதெளி
ந்து எழுந்துசொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்

நாற்பதுசேர் விழுமி கட வுநட்டாமல்லில்லை
யார்ப்பதுமில்லைசைவப் பழமறுநின்றாய்பண்ணை
காரபதுமில்லையுன்னைக் கைவிடமனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றொலைந்துபோடா

வசனம்

என்றுவேதியன்சொல்லிய உத்தாரப்படி சேரியில் நந்தனார்வந்துப
ன்னிரண்டுபேர்களை பார்த்துச்சொல்லுவார்

திபதை இராகம்-மாஞ்சை-ஆதிதாளம்

கண்ணிகள்

ஆசைநேசாருந் தோழரேகேளுங்கள்
பேசச்செய்வங்களுண்டோ நசனல்லால்நமக்கு ஆசை
ஆயன்மாயன் அன்றடிமுடிகாணாத

நோ னழலுருவாய்நின்றநின்மலனல்லால் ஆசை
மண்ணாய்விண்ணாய் மற்றுளபொருள்களாகி
என்னுமென்னுளெண்ணெய்போலிருக்குமீசனல்லால் ஆசை
அருவாயுருவா யண்டபகிரண்டமெங்கும்
பரமாயுநின்றதத்துப்பராபரத்தையல்லால் ஆசை

வசனம்

என்றுநந்தனார்சொல்லிப் பின்னும் ஆனந்தகூத்தாடுவார்

தரு-இராகம்-தந்நியாசி-திரிபுடைதாளம்

பல்லவி

ஆனந்தக்கூத்தாடினார் ஆனந்தநந்தன்
ஆனந்தக்கூத்தாடினார்

அநுபல்லவி

வானுந்தேவர்முனிவர் ஜயஜயவென்று
வாழ்ந்தம்பிரானடிகள் வாய்ப்பதெப்போவென்று ஆன

சரணங்கள்

மாயவலைக்குட் பட்டு-அதிலெப்போதும்
மானத்துயரப் பட்டு
மாயுமுன்னேவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்றுன் நாடுவரென்றேசாத்தி ஆன
கவலைபடாதே நெஞ்சமேகாலன்கைப்பாசம்
கண்முன்வாராதே அஞ்சுமே
முயலிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்று
தம்பதத்தைக்காட்டினேன் தனைக்காணுவேனவென்று ஆன
காயமிதவும் சதமா அன்றியுறபவம்
காலம்பலதாவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரிததலுண்டென்றுன்
தூயபதத்தாலந்த துகளற்றிருப்பேனென்றும்-ஆனந்

வசனம்

இவ்விதமாகப் பன்னிரண்டுபேர்களையும் வேலைசெய்யவொட்டாமல் தம்சமீபத்தில் நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதை வேதியன் கேள்வியுற்று நந்தனைச் சீறிக்கடுங்கோபஞ்செய்ய நந்தனார்வேதியருக்கு இதவுசொல்லுகிறார்

தரு-ஸ்ரீராகம்-ஆதிதாளம்

பல்லவி

ஏனக்கெங்கிலீது இத்தனைபேதகம்
என்னுவனே தோதகம்

அநுபல்லவி

காதகராமனைக்கசடர் சொன்ன சொல்லை
சாதனைசெய்துசாத்திரபிழையோன் றில்லையாக

சரணங்கள்.

நான்உனக்குப் பண்டுசோதனைஞ்செய்து
நலமாய்த்தந்த ஆண்டு
தோன்றவேலிசொல்லுஞ்சொற்படிச் செய்கிறேன்
பான்மையாமசித்தப்பத்தியாய் உயர்பெறுமவனுக்
சாகளவு நன்மைசெய்தோரைஒருக்
காலும்மறவாத் தன்மை
தாசனுக்கெப்போதுமுண்டுதாமே கண்டு
யோசிக்கப்போகுறீர் இனியேல்நான்செய்தொண்டுவதுக
ஏழைநான் தானேகூதும்வாரும்
ஏதொன்றறி யேனே
மேருயடனேயொருமேதிகானேக ளைக்கே
ஊழியனுக்கும்உழுகயிருக்கொடுப்பீ ரிங்கேவதுக

நந்தனார்வருழுதல்

எழுசீரடியாசிரியவிருத்தம்

வணக்கமாய்ச்சொல்லும் வார்த்தையையுணர்ந்து
வஞ்சனையிலாத வேதியன்றன்
கணக்கில்லாத்தனது பண்ணையாளவசத்தில்
கைப்பிடியாகவேவந்து
பிணக்கிலானிவன்சொற்படியெலாஞ்செய்வான்
பின்விடான்அழைத்துபோவென்ன
இணக்கமாய்க்கொண்டுபோயினர்நந்தர்
ஏர்தொழில்மிகப்புரிந்தனனே

தரு-இராகம்-சஹானரூபகசாப்புதாளம்

பல்லவி

பத்தியாக ஆண்டைசொற்படிசெய்தாநந்தன்பலருடன்மிசப் பத்தி

அநுபல்லவி

கர்த்தனேர்சித்தங்களித்துங் கதித்தவன்
கமலபாதத்தை நாடிமெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி பத்தி

சரணங்கள்

திருள்ள ஆதனூர்நஞ்சை	புஞ்சைகளை
நித்தமுமோர்கொண்டு	பழுது அறச்
சுத்தமதாகவே	உழுது
காலைப்	பொழுது பத்தி
கருப்புவெளுப்புச்சிவப்பு	நிறமுள்ளக்
காளைகளைகட்டிப்	பூட்டி-பொற்
காறுவொன்றதிலே	மாட்டி
ஏ	ரோட்டி பத்தி
கந்தன்கறுப்பன்கடம்ப	னிடும்பன்
கரியவனவன் தம்பி	பெரியச்சின்னக்
காத்தானவன்மகன்	சொரியன்
குள்ள	நரியன் பத்தி
சீரகச்சம்பாசிறுகருடன்	சம்பா
சிறந்தமணக்கத்தை	நடடுகம்பு
சேர்த்துவையு	மிட்டு
பயி	ரிட்டு பத்தி

வசனம்

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துக்கொண்டிருந்த நந்தனார் இனிமேல் சிதம்பரம்போவேன் போகாவிடில்பிராணனைவிடுவேன் அன்றியும் சேரியில்வரமாட்டேனென்றுசொல்லிக்கொண்டு வேதியர் அப்பால்சென்றுதலைவணங்கிக் கரங்குவித்து மனத்துடித்துக்கண்டித்துச்சிதம்பரபோகஉத்தாரங்கேட்கிறார்

அறுசீரடியாசிரியவிருத்தம்

பொய்ச்சடலம் புழுக்கூடெனப்பதுவாசற் றேம்பையைப் போற்றிசெய்யும் துச்சனிவனென்றெண்ணித்தள்ளாமனன் னெறியைச்சொல்லவேணும் பச்சைமிகுந்தொகுயழகி சிவகாமிமாதுபங்கன்பாதங்காண இசைமிகுந் திருக்குதையேஅம்பலத்தைகண்டுகளித்திறைஞ்சுவேனே

தரு-இராகம சாவேரி ரூபகதாளம்

பல்லவி

பொன்னம்பலவாணனடிதொழுவா ரொருவரன்றிப்
புறவிககடலிடையில்கிடந்தழுவார்

அநுபல்லவி

இன்னம்பலதெய்வங்களுமிருக்குமெனகளிவர்
போலவேயில்லையேமையிடத்திலிருந்தருள்செய்திடும் பொன்

சரணங்கள்,

வேதமொருநான்குமறியாகபழம்பொருளாகினும்
வேண்டுபதஞ்சிலககாகவேதில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசைபமணிகுலுங்கப்பிறையிலங்க
பணியமாடவேசலையாடவேபரமானந்தக்கூத்தாடிய பொ
பலகாசனில்சுகள துபோலெங்கினும்பரிபூரண
முருவற்றதுயருவற்றதுகுறையற்றிடுஞ்செல்வங்
கலியம்பரமார்மதவற்றவர்வினைபதநினுலுருவற்றிட
கலைகற்றயாவலைபக்கவரிதயத்தினில்நடமாடிய பொ
இரவுபகல்கருமங்களிழுக்கும்பொரிசாரணங்களதை
இருந்துவசப்படுத்தும்வகையெனக்குத்தெரியாது
பரவிவருமராசாதிறசாணடுங்கிமனதொடுங்கிவழி
பார்க்குமிடயார்க்குமரிதாககும்பாலகிருஷ்ணன்தொழு பொ

வசனம்

இவ்வகையாய்ச்சொல்லும் நந்தனாரைப்பார்த்து வேதியர்சொல்லு கிறார்.

சுலோகம்.

மெள்ளம்பேசுமெழுகிறாயதினமூடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடலாவதெனையலனேகாட்டும்பசாசலல்லவோ
துள்ளித்துள்ளித்துடிககிறாய்சிவபதனுசெல்லாதுசாதியிலே
எள்ளுக்கொல்லையில்மாடுவந்துதொடராதேகும்படிசெல்லடா

வசனம்

இப்படிசொல்லிய வேதியருடனே நந்தனார்தனக்குத்தெரிந்த வித்தைகளை அத்தருணத்தில்சொல்லிககாட்டுகிறார்

முன்நந்தனார்பின்வேதியர் இருவருமாகச்சொல்லிக்கொள்ளும்

எட்டிக்குப்போட்டியான இருச்சொல்லலங்காரம்.

நந்தனார்-தில்லையைப்பார்க்கவல்லேயோ வென்றார்
வேதியர்-கொல்லையில்மூளகாயில்லேயோ வென்றார்

நந்தனார்-கள்ளம்போனாலுள்ளதுகாணு மென்றார்
வேதியர்-வெள்ளம்போனாலுள்ளதுவினையு மென்றார்
நந்தனார்-திருச்சிற்றம்பலங்கண்டால்தேகங்களிக்கு மென்றார்
வேதியர்-பொரிச்சகறிகொண்டால்தேகம்பெருக்கு மென்றார்
நந்தனார்-அரகரவென்றால்பாவம்போ மென்றார்
வேதியர்-பறையனைக்கண்டால்பாவமா மென்றார்
நந்தனார்-வெட்டவெளியிலேமனமூட்டிப்பாரு வென்றார்
வேதியர்-பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு மென்றார்
நந்தனார்-எனக்குஉரியஞானமார்கை பதி யென்றார்
வேதியர்-உனக்குநாதியபறையர்சேரியேகதி யென்றார்
நந்தனார்-கந்தாவேயென்றுள்ளம்பெற்று ரென்றார்
வேதியர்-கற்றுமையக்கிளிபில்பற்று தென்றார்
நந்தனார்-மறையோருக்கெப்போதும்வாயிலேதர்க்க மென்றார்
வேதியர்-பறையருக்கெப்போதுமசேரியேசொர்க்க மென்றார்
நந்தனார்-கொள்ளித்தேள்போலென்னைக்கொட்டாதே யென்றார்
வேதியர்-அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே யென்றார்
நந்தனார்-கடுமையாய்வந்துகவலைப்படுத் துவதேன்
வேதியர்-அடிமையாய்வந்துஅலைப்படுத் துவதேன்
நந்தனார்-இல்லையோடுன்னைச்சேரேனோ வென்றார்
வேதியர்-எல்லையோடுமுன்னைப்பாரேனோ யென்றார்
நந்தனார்-திருவாதிரைவருகுதுபோ வேனோ யென்றார்
வேதியர்-மறவாதிருபறையாபோகாதே யென்றார்
நந்தனார்-தெரியாதவெள்ளப்போவேனே யென்றார்
வேதியர்-மரியாதையல்லபோகாதே யென்றார்
நந்தனார்-ஆனையைவிட்டுவழிகாட்டும்பெரியோரே யென்றார்
வேதியர்பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார்-ஆடிப்பாடிப்படிப்பே னென்றார்
வேதியர்-தேடித்தேடிப்பிடிப்பே னென்றார்
நந்தனார்-இல்லையிலேசலந்தால்காடுவே னென்றார்
வேதியர்-கொல்லையிலேவிலந்தாகப்போடுவே னென்றார்
நந்தனார்-சிந்தைநொந்துதவிப்பேனோ வென்றார்
வேதியர்-வந்துவந்துஅலப்பாதே யென்றார்
நந்தனார்-நெஞ்சினல்நெஞ்சமுருகாதே தென்றார்
வேதியர்-அஞ்சினல்பஞ்சம்வருகாதோ வென்றார்
நந்தனார்-சிதம்பரம்போகஉத்தாரந்தாரு மென்றார்

வேதியர்-இதம்பெறலாமோகத்தாலேபோது பொன்றா
நந்தனார்-சீக்கிரமாய்ப்போறே னென்றார்
வேதியர்-போக்கரியாய்ப்போவா யென்றார்
நந்தனார்-அன்னீதஞ்செய்யே னென்றார்
வேதியர்-சொன்னதுதவறே னென்றார்
நந்தனார்-எங்கள் ாதிக்குவென்னவழி யெ ் றார்
வேதியர்-உங்கள்சாதிக்கு இந்தவழி யென்றார்
நந்தனார்-உற்றதுஓது மென்றார்
வேதியர்-பெற்றதுபோது மென்றார்
நந்தனா-பறையனாய்ப்பிறந்ததென்தலையெழுத்திது வென்றார்
வேதியர்-மறையாய்ப்பிறந்துங்கள்வருத்தயது மென்றார்
நந்தனார்-வாய்க்காதவெனக்குவழிசொல்லு வீரே
வேதியர்-காயக்காதமரத்திற்கலலெறி யயரே
நந்தனார்-எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர்-அ போ ிப்படிச்செய்ததென் னென்றார்
நந்தனார்-உலகமனை ் றுங்கவுளாய்பிறைந தேன்
வேதியர்-பலகலைகற்றும்பறையனாய்ப்பிற தேன்
நந்தனார்-பழுதானசென்மம்படைத்தேனே தென்றார்
வேதியர்-அழுதாலுங்கன்மமடுக்ாதோ வென்றார்
நந்தனார்-காப்பதுன்பாரங்க .டுவிடு மென்றார்
வேதியர்-நாற்பதுவேலியைநட்ட விடு மென்றார்
நந்தனார்-அப்பன்கருணையிப்பலியோ வென்றார்
வேதியர்-தப்பினேனதுவுவொப்பிலே னென்றார்

வசனம்

அப்போதுநந்தனார்மெத்தவும்ஐயரைவணங்கிஉத்தாரங்கே ் றார்

விருத்தம்.

அல்லலெல்லுங்குழலாள்மோகமண்டாது வொருக்காத்றெண்டர்
பல்லூழிகாலஞ்செய்தபழவினைத்தொடககறுத்தச்
சொல்சினிமடங்கொணுதச்சுகக்கடலாட்டி வைக்குந்
தில்லைநாயகனைக்கண்டுதெரிசனஞ்செய்வேனென் றார்

கீர்த்தனம்-இ-ம்-கன்னி-பியாகு-ஆதிதாளம்

மார்கழிமாதத்திருவாதிரைநாள் வரப்போகுது ்யே

மனதைப்புண்ணாக்கப்பண்ணாமலொருதரம்போய்வாவென்று சொல்லையே
கட்டையிருக்கையில்சிதம்பரம்போய் காணவேணுமையே
கசடனுயிலுமாசைவிளையுதுன் காலுக்குக்கும்பிடையே
காலனகழைத்தநாள்முதலாயுமக் கடிமைக்காரனையே
காலபாசத்தில்காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணேனையே
எட்டுமிரண்டுமறியாதபேதை யெளியேனையே
இன்னந்தந்த வயிற்றிடையனுக்கும விடங்காட்டிடுமையே
மெள்ளவெளுக்கதிடுக்கண்ணீர்குடிக்கிறேம் வெறியேனையே
மேதினியினிலிழிந்தகடையேன் வழிவிடவேணுமையே
தானந்தவங்களொன்றுமறியா தடியேனையே
தள்ளவிடவேண்டமொருகோடி தருமமுண்டையே
அல்லும்பகலுமகளாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனேநல்லகதிபெறுவாயென் றனுப்பவேணுமையே

விருத்தம்.

சிலையணிந்திடும்வேளைரிக்கிடச்செய்திடுந்திருமேனியைக்
கலந்தணைந்திடவேணுங்காதலைக்கண்டிலராகியமதனைத்
தலைசுமந்திடுஞ்சேடனுந்தன்மைகொளும்நந்தனுரை
விலக்குவாங்கியபெருமையாலீன்வேணதெல்லாம்பேசுவான்

வசனம்

இப்படிச்சிதம்பரம்போக உத்தாரங்கேட்க நந்தனுடைய சிவபத்திபரிதாபத்தை ஆதிசேடனாலுஞ் சொல்லவொண்ணாத மகிமைகொண்டமகானுபாவனை தனக்கடிமைக்காரனென்றுவேணபடிபேசுவார்

கீர்த்தனம் இ-ர் முகாரி ஆதிதாளம்

மாடுதின்னும்புலையாவுனக்கு மார்கழித்திருநாளோ
தேடியெடுத்தாயாரிடத்தேபோய்நீண்டாமதேபோடா
ஆடுதின்னும்புலையாவுனக்கு ஆனித்தெரிசனமோ
நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோநாடாதேபோடா
நம்பிக்குக்கலியாணமழைநரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசைதிருநாளுண்டோப்பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோஆண்டவன்பொன்னடிதொழுதாயோ
கூசல்போடாதேபோடக்கூழைக்கும்பிடலாகாதோ

கல்லைசிலாடுவையோ அங்கேகாணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிககடிவந்துறையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோஉனக்குபானந்தத்திருக்கூத்தோ]
வஞ்சகவார்த்தைநானுனக்குத்தெரியும் வாராதேபோடா

வசனம்

அடாநந்தா சபாசுகன்றாயிருக்கின்றது நீசிதம்பரம்போக வேண்டு மென்றுகேட்பதை ஆலோசித்தால் மிகுந்தஆச்சரியமாயிருக்கின்றதென் றுவேதியர்பின்னுஞ்சொல்லுகிறார்

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

இதுதானோதில்லைப்பதி-என்று-எக்களித்தா ராடிக்கெக்களித்தார் ஐயாவுன்சந்நிதியைக்-காண-ஆசைகொண்டுவந்தேன் நேசமுடன் தெருவில்பொடித்தூளை அள்ளித் தேகமுழுதினுந் தாகமுடன்தரித்தார் திருநீறாய் நாலுசாத்திரவேதங்கள் பார்த்துணரும் பெரியோரிருக்குமிடம்.

வ ச ன ம்.

நந்தனார் அந்தத்தில்லைத்தலம் இப்படி யிருக்குதென்று சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-செந்தகடுக்கா ஆதிதாளம்.

தண்டகம்.

ஆகமங்கள்வேதியர்கள்சிவ னடியார்கள்கூட்டம் நம
தேகமாகியப்போதுவிளைகின்ற யோகிமுனிகளுட்டம் பூ
லோககைலாசமென்றுமிதைப் போற்றுவார்களாட்டம்அதி
வேகயாகவெங்கேயாகிலும் வெளியேபோகவேணுமையே
இங்கிருக்கலாகாதையே இங்கிருக்கலாகாதையே
பூவிப்பறையனிங்கேவரலாமோ சுவாமிதரிசனந்தரலாமோ

பாதகமலங்களைத் தொடப்போமோ
பாவமென்னைப்பிரிந்து தொலைபோமோ
இங்கேஆகாதாகா தையே
வேள்விசெய்யும்புகைமேலுலக மெழும்பிப்போகுதையே
புண்ணியவான்கள்புரியுந்தவம்
அரகரசிவவென்று ஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடனரனைப்பிரதட்சணம்வருமிடம் ஆகாதாகாதையே
மணியாடுது-வெகுசனங்கூடுது-வீதிவலமாகுது திருப்பதம்பாடுது
உள்ளேநடமாடுது-பணிவிடைபோகுது-பரவசமாகுது
மெத்தப்பயமாகுது-இங்கே ஆகாதாகாதையே
தீண்டாதே-இங்கே-வேண்டாதேசும்மா இரையாதேஇங்கேதரியாதே
என்னைப்பாராதே-படி-யேறாதே-உள்ளே-போகாதேவர லாகாதே
யென்பார்-ஆகாதாகா தையே

சிந்து

பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பதுஞாயமல்ல
நான்றுபறைச்சாதி-தில்லை-நாதன்தெரிசனமாதரவாய்
பண்ணப்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பதுசீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கி-எங்கிநின்றார்துயர்நீங்கிநின்றார்
ஓயாப்பெருங்கவலைகொண்டு-உள்ளங்குழைந்திட வெள்ளமெனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுதாரவர்மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செல்கின்றபோதந்தத்திருவெல்லைபணிந்தெழுந்து
பல்குஞ்செந்தீவளர்த்தபயில்வேள்வியெழுபுகையு
மல்குபெருங்கிடையோதுங்கிடைங்கணெருங்கினவுங்கண்
டல்குந்தங்குலநினைந்தேயஞ்சியிடைந்தவர்நின்றார்

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துக்குப்போனபொழுது அதின் எல்லையைக்கண்டுநமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் செவ்ந்த அக்கினியைவளர்த்து ஆகுதிசெய்கின்ற யாகத்தால் உண்டாகியபுகையும் மிகுந்த பிராமணப்பிள்ளைகளின் நான்குவேதங்களை ஓதும்படியாக அடிக்கடி நெருங்கியிருக்கும் மடல்களையுங்கண்டு குறைவாகித் தம்முடைய குலத்தைநினைந்து உள்ளேபோவதற்குப் பயந்துபோகாமல் நின்றுவிட்டார்,

இதுவுமது-விருத்தம்.

நின்றவரங்கெய்தரியபெருமையினைநினைப்பார்முன்
சென்றவையுங்கடந்தார்சூழெயிற்றிருவாயிலைப்புக்கார்
குன்றனையமாளிகைகடொறுங்குலவும்வேதிகைக
ளொன்றியமூவாயிரமங்குளவென்டாராகுதிகள்

வசனம்,

எல்லையில்நின்றுக்கொண்டிருந்த திருநாளைப்போவார்நான்உள்ளேயடையக்கூடாதஅக்கோயிலின்பெருமையைநினைப்பாராகி முதலின்அந்தஎல்லையைக்கடந்துஊரைச்சுற்றியிருக்கும் மதிலின்திருவாசலையடைந்தார் அங்கேதிண்ணைகள்பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும் ஓமங்கள் செயயப்படுகின்றவென்று சொல்லிக்கொள்ளுவார் சுவாமியைபூசிக்கிற தில்லைமூவாயிரவர்களுடைய வீடுகள் மாளிகைகள் மூவாயிரமென்றூர்வேதவிதிப்படியாகுதிசெய்யும்பிராமணர்களுடையவீதியிலே நாம்போகக்கூடாதபடியால் அதைநினைந்துதன்குலத்தையிகழ்ந்துஇருக்கலாகாதென்று அவ்விடம்விட்டொருகுளத்தருகில்வந்துசுவாமியைப்பாரதசென்மமென்படைத்தேனென்று தாழப்புரண்டழுவார்,

கீர்த்தனம்-இ-ம்-சரசாங்கி-ருபகதாளம்.

பல்லவி

இந்தச்சடலம்வந்தவாறேதென்றறிகிலேன்-யானேதென்றறிகிலேன்

அநுபல்லவி.

சந்ததமும்தில்லை யம்பலத்தானை
சிந்தித்துமாயச் சிறுக்கறுக்காமல் இந்தச்

சரணங்கள்,

அங்கமலங்களைப் போக்கியேசிவ
கங்கையிலாடிக்களங்கமறாமல் இந்தச்

ஆடும்நடனங்கண்டானந்தமாகிப்
பாடிப்படித்துப்பணிந்துகொள்ளாமல் இந்தச்

அஞ்சக்கரத்தையெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவிமயக்கறுக்காமல் இந்தச்

பாலகிருஷ்ணன்தொழும்பாதத்தைக்கும்பிட்டு
சீலமுள்ளமுத்திசித்திபெறாமல் இந்தச்

கீர்த்தனம்-இ-ம்-தர்பியாசி-ஆதிதாளம்

பல்லவி

கனகசபாபதிதரிசனம்ஒருநாள் கண்டால்கலிதீரும்

அநுபல்லவி.

ஜனகமகாமுனிகைதொழுநித்தியதினகரகோடிதேஜோன்மயமாகிய

சரணங்கள்.

மனதிலொடுங்கிய கல்மிஷம்போக்கும்
மாயபபிறப்பறுத்து மறுவடியாக்கும்
ஜனனமரணசமு சாரத்தைநீக்கும்
திருவடிநிழலிலே கூட்டியேகாக்கும் கனக
சுருதிமுடிவுகளில் சொல்லிக்கொண்டாடும்
துய்யவெளியையொளி யாகவேகூடும
தருமரேறியுந்தவ ருதுளநாடும்
ததிங்கணத்தோமென்று தாண்டவமாடும் கனக
பற்பலயோசனை செய்வதுந்தொல்லை
பரகதியடையவு பாடமுமில்லை
அற்புதமாகவே தானொருசொல்லை
அணியுங்கோபாலகிருஷ்ணன் பணியுந்தில்லை கனக

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-சாப்புதாளம்.

பல்லவி,

கட்டைகடைத்தேறவேணுமே கனகசபாபதிநடனங்
கண்டுகளிக்கவந்தஇந்தநந்தனார் கட்டை
கட்டைகடைத்தேறவொட்டுமோசென்மம்
கெட்டதல்லவோ இஷ்டமறியேன் கட்டை
முத்தியிலளிக்கும்பத்தியிலென்ன
சிற்றம்பலவன்சித்தமறியேன் கட்டை

வசனம்,

தேகம் படைத்தால் சிவ பத்தி பண்ணவேணுமென்று நந்தனு சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம் தண்டகம்-ரூபகதாளம்,

தேகம்வந்தவாறுசொல்லவோ சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்பதற்கல்லவோ
இந்தவிஷயசுகத்தை நாடுமோ பாவிமனக்குரங்
கிருப்பிடங்காணாமை லோடுமோ
தில்லைத்தலத்தைக் கண்டுமாச்சுதே உள்ளேசென்றுநடன
தெரிசனம்பண்ணாமல் போச்சுதே

பறையனென்றசென்மம் போகுமோபாழ் வினையாலின்னம்
பாரில்வந்துபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தே னுய்யுமோஒன்றையுமானறியே
னம்பலத்தெய்வமென்னசெய்யுமோ
பார்த்ததெல்லாமழிந்துதோனுமோ கோபாலகிருஷ்ணன்
பணியும்பரமசிவன் கருணை வேணுமே

வ ச ன ம்.

சிதம்பரதெரிசனங் கண்டபேர்க்கு சென்மம் இல்லையென்பார்.

கீர்த்தனம்-இ-ம்-ரூபகதாளம்.

பல்லவி.

தெரிசனங்கண்டபேர்க்கு சென்மம் இல்லையென்பார்

அநுபல்லவி,

தெரிசனங்கண்டவர்க்குமறுசென்ம மில்லை
வரிசையுடனம்பலவன்வாழ்கின்ற தில்லை தெரி

சரணங்கள்.

இரவுபகலிடைவிடாதேகாச பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கும் நத்தி
பரவிவருமரனருளாலணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம்பலத்தைவலஞ் சுத்தி தெரி
சொற்பமென்றிவ்வுலகம்தோன்றிவரும் வேதம்
சொன்னததுநின்றபடியாகும் போதம்
அற்புதமிதங்கமொடுதாளவகை கீதம்
அனவரதத்திருநடனமாடிவரும் பாதம் தெரி
அல்லும்பகலோயாது அடியார்கள் கோஷ்டி
அரகராவெனறமிர்தபானமதை கூட்டி
தில்லைவாழந்தணர்கள்கைபிடித்துக் காட்டி
சிக்கெனவேதிரைதிறந்துபரவெளியைக் காட்டி தெரி
நஞ்சுண்டகண்டனுக்குக்கொன்றைமலர் சாற்றி
நல்லதிருச்சாந்தணி அம்பிகையைப் போற்றி
குஞ்சிதபதந்தமதுமனதிலூற வேற்றிக்
கோபால்கிருஷ்ணன்தொழும்நடராஜ மூர்த்தி தெரி

வசனம்,

தனக்கு தெரிசனங்கொடுக்க அம்பலவாணர் எப்போது வரு
வாரோவென்று விசாரப்படுவார்.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

எப்போவருவாரோ-எந்தன்கலிதீர-எப்போவருவாரோ
எப்போவருவாரோ எந்தன்கலிதீரச்
செப்பியதில்லைச்சிதம்பரதேவர் எப்போ
நர்பநவம்வந்துநாதனைத்தேடும்
கற்பனைகள்முற்றக்காட்சிதந்தாள் எப்போ
அற்பசுகவாழ்விலானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன்பொன்னம்பலவாணன் எப்போ
பாலகிருஷ்ணன்போற்றிப்பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேன்வெளிப்படக்காணேன் எப்போ

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்,

வருவாரோ அருள்புரிவாரோ எந்தன்
மனதுசலிக்குதுநானென்னசெய்வேன்
அரகரசங்கரனம்பலவாணன்
ஆதரிக்காதிருப்பாரோ ஒருக்கால் வருவா

வசனம்.

நான் சின்னஜாதியானதால் வருவாரோ வாராரோவென்றுஞ் சஞ்சலப்படுவார்,

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

பாராமலிருப்பாரோ ஒருக்கால் வருவாரோவறியேன்
பாராமலிருப்பாரோ பதஞ்சலிமுனிக்குப்
பாதங்கொடுத்தாசனென்று வாராம
கனவினில்வந்துகழனிமுழுதும்நட்டு
மனதுமகிழ்ந்துயென்னைவாவென்றுசொன்னவர் வாராம
களங்கமறவே அவர்காலுக்குக்கும்பிட்டு
குளத்தங்கரையில்நின்றுகூப்பிடும்வேளையில் வாராம
அல்லலறுத்துப்பரமானந்தமேதரும்
தில்லைத்தலத்தைக்கண்டுதெரிசனம்பண்ணியும் வாராம

வசனம்,

இதுவரையில்வராதபடியினாலஇனிமேல்தில்லைத்தலத்தைவிடா மல்சுற்றிவந்துதேகத்தைத்தள்ளுவோமென்று நிச்சயம்பண்ணுவார்,

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

இன்னம்வரக்காண்கிலேன் என்செய்குவேனவர் இன்னம்
இன்னம்வரக்காணலேன் தில்லைபொன்னம்பலவாணன் பண்ணையும்
நட்டெ.ன்னையுமிங்கேவாவென்றுசொன்னவர்மறந்தாரோ இன்னம்
சொல்லும்பொருளுமிந்தச்சோதியேமகிழ்ந்துவாழும்
தில்லையைவிடாமற்சுற்றித்தேகத்தைமாற்றிக்கொள்வதுநல்லதுஇன்
பாலகிருஷ்ணன்போற்றும்பாதச்சிலம்புகுலுங்கக்கோலமுடனடனங்
கண்டேன்குறைகள்தீர்ந்ததென்றுசொல்லவுந்தான் இன்னம்

வசனம்,

இப்படிசொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்துபுரண்டழுதார்

சிந்து.

கீழேபுரண்டழுவார் ஒன்றும் கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலைகுனிந்தார் எந்தன்வேதனையைக்கண்டு ஆதரிக்கும்
தெய்வங்கிடையாதோ-பாவி-சித்தந்தெளியவிரக்கிதந்து
வாவென்றழையாதோ விண்ணில் வானவர்கள்போற்று மோனமிலாக்
கனகசபைநடனங்கண்டு காயங்களித்திடநாமடியேன்
வருந்தித்துதியேனோ எந்தன் வாணாளுநகுதுவினையே
அடடாஇதென்னஜென்மம்

வசனம்.

இப்படிபுரண்டழுதுதான்படுகிறதுன்பத்தைக்கண்டு ஆதரிக்கும்படியானதெய்வம்எங்குங்கிடையாதோவென்றும் இருந்தால்வந்து என்னையாதரிக்காதாவென்றும்என்மனதுகுளிர ஒருவார்த்தைசொல்லாதாவென்றும் மேலாகிய தேவர்கள்போற்றும்படியானவனே என்னுடையதோத்திரத்துக்கிரங்கிவரக்கூடாதாவென்றும் உனதுநடனசபைக்குஎன்னையழைத்துப்போய்க்காட்டிஎன்னுடைய இழிவானகுலத்தை மாற்றக்கூடாதோவென்றும் இப்படிப்பற்பலவாறாகப்பணிந்து துன்பசாகரத்திலாழ்ந்தார்.

விருத்தம்.

சாதிபேதமுங்குணக்குறியாவையுந்தள்ளி
ஆதியாதியென்றகற்றினேன்றிசைதனிலணைந்தும்
மாதவம்புரிதொண்டர்கள்பணிதிரண்மறைக்கத்
கோதிலாவுருக்கொண்டுமிப்பாவிக்குக்குறையோ

வசனம்.

இப்படி சாரதமென்று உன்னைநம்பிவந்து துன்பப்படலாமாசிவனே சிவனேயென்று பெருங்குரலிட்டு தனக்குச் சென்மம்போதும் போதுமென்று சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதுமையா எடுத்தசென்மம் போதும்போதுமையா

அநுபல்லவி.

மாதவமாரனைவர்கள்புகழுந்தில்லை
வாழ்த்திலனுதினமும்வளரும்பலவாணா போது

சரணங்கள்,

கோத்துநெளியும்புழுவுக்தைநரம்புகளும்
நாத்தமலங்களுமூத்திரக்தம்பி போது
சந்ததமுமடியேன் யெந்திரம்போலே
வந்தெழுமலவாயிலும்நொந்துமிருந்தேன் போது
கொழுத்தவாணிகள்போலேமிருத்துவிரும்புமென்னை
வயிற்றிலிருந்துபடும்வருத்தமென்னசொல்வேன் போது
மாதர்கள்மீதினில்மயல்கொண்டோங்கிடும்
வேதனைகொண்டவெறும்பபலானேன் போது
அண்ணல்கோபாலகிருஷ்ணன்பணியுந்திரு
அம்பலமேவுமபொன்னம்பலவாணா போது

வசனம்.

செனமமேகஷ்டம் அதிலும் புலையனாகப்பிறப்பது மிகவும்கஷ்டம் என்று நந்தனார் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி;

இந்தஜென்மம்வேண்டாம் இனிஎந்தஜென்மம்வந்தாலும்வரட்டும்இ

தந்திருவினில்மந்திரங்கள்சொல்லி
வாதனைகள்செய்துசிந்தைமகிழ்ந்த இந்த

வேதமறிந்தவர்பாதபணிந்தவர்
போதமடைந்திடாததீகடைந்தேன்பாவி இந்த

பாவிப்பறையாநீ தூரவிலகென்று
ஆவிதவித்திடப்பாரிலுலாதிடும் இந்த

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்

பல்லவி

தில்லைவலஞ்சுற்றினார்-சிதம்பர-தில்லைவலஞ்சுற்றினார்

அநுபல்லவி

தில்லைவலஞ்சுற்றினார் சேருமறியாத
எல்லைவாசல்கடந்திருளறவேண்டி. தில்லை

சரணங்கள்.

சாதிதுறையைத்தானேசந்ததமுநினைந்து
வேதனைகொண்டுள்ளம்வெதும்பியேவாடி
பாதிப்பிறையணியும்பரமசிவனைக்கண்டு
போதமடைந்துபரிபூரணமாக தில்லை

மோகவலைக்குட்சிக்கிமுழுமூடனாகவே
போகமேநிலையென்றுபுத்திகெட்டேனே
பாகனைவேண்டிடல்பரவசமாகியே
ஏகாந்தநிற்றன்னைவிருந்திட்டுச்சுகிக்க தில்லை

ஓராறுதாண்டியேயுண்மணிகோட்டைகள்
சீராறுகாணுதசிதம்பரரகசியம்
ஈராறுநாள்கொண்டு இருக்கப்புலன்றனையும்
பேராறுபெருகியேபெருவெளிகாண தில்லை

வசனம்

இப்படித் தில்லைத்தலத்தை விடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சு
வாமிவருவாரென்றும் நினைதைப் பார்க்கச்சொல்லுகிறார்

கீர்த்தனம்-இ-ப-யமுநாகல்யாணி

பல்லவி.

வருவார்வருவார்மனமே-நீ-மயங்காதிருசொன்னேன் சொன்னேன்
வேணதுதருவார்கருணைபுரிவார் திருவம்பலவன்
பரகதியுந்தருவார் சாதி பறையனென்றும்பாரார் நீ-யதை
உறுதிகொள்ளவேணும் மெய்யன்பு டன்
அரகரவென்றொருதரஞ் சொன்னாலும்போதுமே வருவார்

வசனம்.

தன்னை இரட்சிக்குஞ்சமயம் இதுதானென்று சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-தனாசரி-ஆதிதாளம்

பல்லவி

இதுநல்லசமயமையா ரட்சிக்க இதுநல்லசமயமையா
இதுநல்லசமயமையா வென்னைரட்சித்தாளும்
சமமேசசபேசா இதுநல்ல
பாலகிருஷ்ணன்போற்றும் பாதங்களைக்காட்டி
சீலமுள்ளமூர்த்திசேருவதற்கே இதுநல்ல

வசனம்

இவ்வளவுசொல்லியும் இரங்காமற்போகவேண்டிய தென்னவென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி,

இரக்கம்வாராமற்போனதென்னகாரணம்சுவாமி
கருணைக்கடலென்றுயெந்தன் காதில்கேட்டுநம்பிவந்தேன் இர

சரணங்கள்

ஆலமருந்தியண்டருளையாதரித்தவுனதுகீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினம்பணிந்திடும்நடராஜமூர்த்தி இர
பழியெத்தனைநான்செய்தினும்பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிசற்றவர்பழிபெற்றவர் சனகசபாபதியிப்படி இர

விருத்தம்

அண்டமானதியானவையும்வேள்விகளைவையாதுய
குன்றிலாத்தவர்புண்ணியமாமலைகுவித்தும்

வின்றிடாமலேயிசைமாறனைக்களித்தவிவேகம்
மன்றுளாடியப தந்திலேயமாவருமே

வசனம்

மகாபுண்ணியசாலிகளுக்கு அந்தப்பூசத்திலேவருமேயன்றி தனக்கு வாராதென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-கனுசரி-ஆதிதாளம்

சாதியில்தாழ்ந்திருப்போனானுலுமப்பா கதியோ-வேத
சாஸ்திரமொன்றுமேதறிய தது விதியோ
நண்டுநகமொத்தனைவைத்ததிசெபதருகிய மோகம்-என்றுள்
நடனதேசனமகாலமையுமுலந்த மோகம்
எந்தமுறைமைகளென்னிட்டுறுவது ஞானம்-செக
ஈசனுக்கென்றுதெரியுந்த வுபாயம்
சிதம்பரம்போகவேணுமானாயா பாவம் இந்த
ஜென்மமெடுத்துவினைசெய்திகுப்பன் ஞானம்

வசனம்

இப்படிநான் ஈனஜாதியாயிருந்தபோதிலும் ஊரிலுடைய சரணாரவிந்தத்தில்வைத்தபுத்தியை மறுதலையாகச்சொன்னவென்று சொல்லுகிறார்

ராகம்-இ-ப-வணிகதுருபகதாளம்

பல்லவி

எப்படிகெட்டாலு முருகன்பொறுமை தரவேன்காணும் எப்படி

அற்புதமாகியதில்லையம்பலவாணனே நான்
சொறுபனத்திலுமையன்றிமெய்யப்பொருளாயறியுக கண்டேன் எப்படி

தப்பிதமெதத்தனைசெய்தாலும்
கைப்பிடித்து ஆண்டுகொள்ளுவ ர் எப்படி

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்

இவ்வண்ணமிரவுபகல்வணங்கிசெயகங்கேயரிய
அவ்வண்ணம்நினைந்துருகவருந்துதலையாலெய்தி
மவ்வண்ணம்கிருத்திடமாறா மன்றுநடங்குப பிதவே
தெவ்வண்ணமெனர்சேர்ந்தேசாபவெண்றிந்துயில்வார்

வசனம்

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வளர்வந்துகொண்டு உள்ளேபோ
கக்கூடாத தன்மையைநினைத்து வருத்தப்பட்ட உயர்வுபொருந்திய அ
டியவாவேசாறிகறியகிறமுள்ள கழுந்திணையுடைய சுவாமி கனகசபை
யில் ஆடுகின்றகூத்தை எப்படிதரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்
திரைசெய்வார் இப்படிநித்திரைசெய்து மறுபடியும எழுந்துசொல்லு
வார்.

கிர்த்தனம்-இ-ம்-சண்டபியாகு-ஆதிதாளம்

பல்லவி

விருநாச்சென்மமாசசே-வந்தும்-விருநாச்சென்மமாச்சே
சதாகாலமுமையான்சந்நிதானத்திலிருந்துமிதானம்பெறுமல் விரு
முத்தியளித்திடுமூர்த்தியைக்கண்டு
பத்தியைப்பண்ணிபதமடையாமல் விரு
பொற்கழலசையபபொதுவிலிருநது
நக்காரும்பதந்தன்னைப்பாராமல் விரு
தில்லைகககிபதிதெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவெவ்றிரங்கியழைத்தும் விரு

வசனம்

தனதுபதவிக்கு யோக்கியனல்லவென்று தள்ளுவாரோ கொள்ளு
வாரோ அப்படிதள்ளினாலும் தில்லையிலேதானே என்தேகத்தை விடுவ
தேயன்றி திரும்பிப்போகமாட்டேனென்று சொல்லிப்புலம்புகிறார்,

கிர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்

பல்லவி

தள்ளுவாரோ-எந்தனைக்கைக்-கொள்ளுவாரோ
தள்ளிவிட்டால்நான்போகேன் சுனிர்திருக்குஞ்சரையபல்ல
அள்ளிவிட்டென்னன்பை அம்பலவாணரொருக்கால் தள்
எனதெனதென்றபிமானமிச்சையறும்நிஷ்டைபண்ணி
மனமிறந்தவெளியில்மருவாதபாவியென்று தள்
நாறுமிந்தப்பொய்படலைகாளொண்றெண்ணக் காண்சுமந்து
நூறுபட்டதுன்பமெல்லாந்துலைந்துநீதன்றுஇங்கேவந்தும் தள்
பாலகிருஷ்ணன்தேடிவருந்பாதமலர்நான்காணேன்
வேல்விழியார்மோகங்கொண்டுசீர்த்தியற்றமூடனென்று தள்

சிந்து

"அடடா இதென்னசென்மம்-என்று அத்தனதுயெல்லைசுற்றிவந்தா"
இரவுபகலோயார்-இமை-ஈசன்கண்டுவிசுவாசமுடன்-பாலகிருஷ்ணன்
ணியும்-திருப்-பாதமுள்ளதில்லைநாதனவன்-கனவிலுருவாகி

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்

இன்னல்தரும்இருபிறவி இதுகடையென்றேதுயில்வா
ரன்னிலையேயமயலத்து ளாடுவாரறிந்திதில்
மன்னுதிருத்தொண்டரவர் வருத்தமெல்லாந்தீர்ப்பதற்கு
முன்னணைந்துகனவின்கண் முறுவலொடுமருள்செய்வார்

வசனம்

இப்படித் திருநாளைப்போவாரென்னும்நந்தனார் இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச்சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து அருந்ததினால் மயங்கிச்சோர்ந்து நித்திரையடைந்தார் அந்தநித்திரையிலே நடராஜமூர்த்திவந்து காட்சிதந்துசொல்லுவார் எனக்குமிகவும் பிரியமுள்ள நந்தனுமோ உமமிடத்தில்நமமுடையபத்தர்களாகிய வேதியர்களைவரச்சொல்லுவோம் அவர்கள்முன்னே அக்கினிபிரவேசமாகி யெழுந்து மறுபடித்து வேதியர்களுடனே சபாப்பிரவேசம்பண்ணுமென்றுரை பகர்ந்து ஐயன் அந்தரத்தியானமானார் நந்தனார் கனவில் காட்சியானதைக்கண்டுகளித்து விழித்துதெளிந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்துசுவாமிஸ்தோத்திரம்புரிந்து சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ப்-தண்டகம்-ஆதிதாளம்

பல்லவி

சந்நிதிவரலாமோ-சுவாமி-தெரிசனந்தரலாமோ சந்நிதி

இல்லறவாழ்வாம் பனிமூடி.
இருந்தேனன்றே மிகவாடி.
அல்லும்பகலுங் கொண்டாடி
அறியேன்கனக சபைநாடி சந்நிதி
விதிபிக்கைசற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டிருந்தே
சாதிபிறந்ததவனென் றறிந்தேன்
தனித்திருப்போமென்றிங்கே வந்தேன் சந்நிதி

காலால்வீசிக்கனல் மூட்டி
கலைமதிமண்டலமே லோட்டி
பாலாறுபெருகவேயெனைக் கூட்டி
பார்த்ததுமில்லைநான் தோட்டி சந்நிதி

வசனம்

நந்தனார் தான்கண்ட சொற்பனத்தைக் கொண்டாடுவார்
கீர்த்தனம்-இ-ம-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

சொற்பனங்கண்டுகொண்டேன் - அதிசயமாயச்
சொற்பனங்கண்டுகொண்டேன்

அநுபல்லவி

சொற்பனங்கண்டுகொண்டேன்-எல்லாந்-தற்பரனென்றறிந்தேன்
வேத-தற்பதவாக்கியமே-வுருவாகி-யற்புதநடனம்புரியஇன்று சொ

சரணங்கள்

அம்பிகைமணவாளன்-மான்மழு-வணிந்திடுஞ்செந்தோளன்-செம்
பொன்னம்பலத்தனி-தாளமத்தளம்-போட-மறைகள் பாடகொண்டாட
மண்டலத்திலோராசை-தீர்ந்து-மண்டபமணியோசை-நேர்ந்து
மனதுகளிந்துருக-கறலிகருக-வரந்தருக-வருக சொ
மங்கையர்போகமில்லாதானாயும் வருந்தியழைக்கும்பொல்லாதாகிய
மாயப்பிணியைவெல்ல-மருந்துசொல்ல-வழியிற்செல்லநல்ல
பண்ணவர்முரசடிக்க-பதஞ்சலி-வியாக்கிரமபாதந்துதிக்க - மாயன்கோ
பாலகிருஷ்ணன்களிக்க-உடுக்கையெடுக்க-உலகந்துமக்க-சிறக்க சொ

நந்தனார் தான்கண்ட கனவு நிசமோபொய்யோவென்று சந்தேகப் படுவார்

கீர்த்தனம்-இ-ம-சூரியகாந்தம்-சாப்புதாளம்

கனவோநினைவோகண்டதுவின்று
மனதிலுறுதிகொள்ளவழியொன்றுங்காணேன் கனவோ
சித்திசாதகனெல்லாருசித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்றுரைத்திட்பேசினதுண்டு கனவோ
ஆருமிகழ்ந்துதள்ளுநோரும்புலையனென்னை
வாரும்பரமபதஞ்சேருமென்றழைத்தது கனவோ
கிட்டநெருங்கிவந்துதட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டிகட்டளையிட்டது கனவோ

வசனம்

தான்கனவில்கண்டதுபோல சாமிவருவாரோவாராரோ வென்று சஞ்சலப்படுவார்

கீர்த்தனம்-இ-ம்-சாமாராகம்-ஆதிதாளம்.

பல்லவி

வருவாரோவரந்தருவாரோ-எந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ-எப்போ வருவா

திருவாரும்தென்புலியூர் திருச்சிற்றம்பலவாணன்
குருநாதனாகவந்துஎந்தன் குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளுக்கருமருந்திருக்கிறேன்
பயப்படாதேயென்றுசொல்ல வருவா

மறைநாலும்வழுத்தரியாமகிமைபெருநடராஜன்
நறையுறுஞ்சேவடியைநம்பினவனல்லவோ
அறுநிலைஞ்சிவசிதம்பரமென்ற
வடிவையேற்கருள்புரிந்திடயிங்கே வருவா

மணிமார்பனுஞ்செஞ்சடையும்பார்க்கவெகுபாலாகினேன்
பணியுங்கோபாலகிருஷ்ணனிடம்பரமதயாநிதியல்லவோ
பவக்கடலடிக்கடிபெருகுதிங்கெக்குமோ
மலைக்குதனையேற்ற வருவா

வசனம்

நந்தனார் இப்படி அனேகவிதமாய் வருவாரோவாராரோ வென்று பலவிதமாகக் கொண்டாடுகிறார்

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்

இப்பரிசிபோய்ச்சேர வெரியினிடைமூழ்கி
முப்புரிநூன்மார்பருடன்முன்னேவாவெனமொழிந்த
வப்பரிசேதில்லைவாழந்தணர்க்குமெரியமைக்க
மெய்ப்பொருளானருமருளியம்பலத்தேமேவினார்

வசனம்

நந்தனார் கனவிலேவந்துசொல்லிய நடராஜமூர்த்தி தில்லைமூவாயிரம்பேர்கள் கனவிலேசொல்லுவார் பக்தர்களே எனக்குமிகவும் பிரியமுள்ளவனாகிய திருநாளைப்போவானென்னும் அழகாகியநாமத்தைக்கொண்டு என்னைக்காணவேண்டுமென்று தன்னைக்காணிக்கைகொண்டு சாதியிற்றாழ்ந்தவனென்று மிகவுங்குழைந்துகொண்டுஇங்கேவரலாகாதென்று பயந்துகொண்டு தன்னைத்தவிர மற்றதெல்லாம் அனித்தியமென

ருபத்திபண்ணிக்கொண்டு முத்திபடையவேண்டுமென்று தில்லையைச்சுற்றிக்கொண்டு தெற்குக்குளத்தங்கரையில்நின்று ஆடிப்பாடி ஆனந்தங்கொண்டுஇருக்கிறார் அவனை என்னைப்போல்நினைத்து நீங்களெல்லோரும்போய் அழைத்துவாருங்க ளென்றுசொல்லி சுவாமிமறைந்தார் இப்படிகண்டகனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசல்வந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்.

தரு இ-ம் சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

அதிசயமொன்றுகேளப்பா தீட்சதரோ
யர்ந்தராத்திரிப்போதி லென்னே-என்றன்
அதிபரவசமாகத்துதிபரவுமம்பல
வாணன்கனவில்வந்தா ருன்னே
வாஸ்தமெனக்குமிந்தவண்ணமாகக்கனவில்
வந்துரைத்தாரறிந்தேன் நாடி-உத
யாஸ்தமயமாகுமுன்னாருட்படிக்கு
அழைப்பதுத்தமமென்று ரோடி
அப்போதங்குவந்தவப்பண்ணுதீட்சதர்
ஆம்ஆமிதுவும்நிச் சயந்தான்-எங்கோன்
செப்பியசொற்படிச்செந்தீவளர்த்திடச்
செய்யவேண்டுமவ சியந்தான்
அவசியமென்கிறீர்காரியந்தெரியாமல்
ஆருக்கடுக்குமோ புலையன்-சிறந்த
தவசிரேஷ்டர்சூழுந்தலத்தினில்வருவெத்
தலைபத்தோஅவன்வந்தா ல்லைவன்
புத்தியுள்ளவனேபரமனுக்குயிர்த்தோழன்
பருந்துசலிப்படியா காட்சி-இவன்
சித்தத்தைப்படிசெய்துசெனனக்கரைகடப்போம்
தெளிவீர்நீங்களிந்தச் சூட்சி
என்றுராகசிவசங்கரதீட்சதர்
இன்னமுந்தாமச மேதோ-நீச்சன்
ஒன்றுமூர்திருச்சந்நிதிக்குவருவ
தொருக்காலுக்கட்குந் தகாதோ
சொல்லுமென்றுரவராருக்கட்குச்
சித்தநிலுள்ளகுந் தேகம்-தெளிய

அல்லும்பகலுமோயாமேசாஸ்திர
மாராய்பவற்குமனோர சாகரம்
தரும்படிபேசிச்சந்தேகந்தெளிவது
தத்தென்றுவாந்த மொழியே-நம்
பெருங்கூட்டமாகவே கூடிச்சென்றாரவர்
பேதமறந்தொரு வழியே

வசனம்.

தில்லைமூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந்தெளிதல்.

விருத்தம்.

மறைக்கிழவரிலவிதஞ் சென்றார்களங்கே
மனுவிக்கியானிக ளாசீர்வாதஞ்செய்து
வந்தகாரியமேதோ உரைப்பீரென்ன
மற்றுளானவர்தங்கள் கனவித்தென்றி
குறைந்தமதிப்புலசாதி வந்துதித்தோன்
கோதிலாநந்தனென்போ னவனில்லன்பன்
கூறுமில்லூரெல்லை வரும்வருவான்நாளை
கொணர்ந்தவனைத்தீமூழ்கச்செய்தேஅப்பால்
முறைமொழிசந்நிதியில் நம்மூன்னாக
விடுங்களென் றுஅருளிச்செய்தவர்மறைந்தார்
உணர்ந்தோர்முன்னிது தெரியச்சொல்லவந்தோர்
மொழியுமாறுத்தரம் யாதென்றார்நீதி
அறிந்தவனரோரந்தப்படிக்கேசெய்வ
தழகாருமென்றனர் பின்மகிழ்ச்சியாலே
அந்ததில்லைமாநகரத் தெல்லைச்சுற்றி
யாடுவார்நந்தனனைத் தேடுவாரே.

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்.

தம்பெருமான்பணிகேட்ட தவமறையோரெல்லோரு
மம்பலவர்திருவாயின் முன்பட்சமுடனின்று
எம்பெருமானருள்செய்த பணிசெய்வோமென்றேத்தி
தம்புரிவுபெருகவருந் திருத்தொண்டர்பாற்சார்ந்தார்

வசனம்.

தமதுபிராணநாயகிய சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்ட தவம்பொருந்திய பிராமணர்களெல்லோரும் அம்பலவாணரது கோயிற்றிருவாசல் மு-
யிசு

ன்புகூடி பயத்தோடும் நம்முடைய ஆண்டவரருள்செய்த ஊழியத்தைச் செய்வோமென்று வணங்கி அன்புமேற்பட்டிருக்கும் திருநாளைப்போவாரைத் தில்லைமூவாயிரவர்கள் தேடவருகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

தொண்டனைக்காண்கிலமே தில்லையில்வந்த தொண்டனைக்காண்கிலமே

அண்டசராசர மெங்கும்படியளந்து
மன்றுளாடியமன்னவர்க்கடிமை தொ
சொல்லும்பொருளுமற்றுச் சோதிமயங்கொண்
டல்லும்பகலுமற் றம்பலவாணன் தொ
அஷ்டதிசையும்பரி பூரணமாகவே
மட்டில்லாதுவளர்ந் தோங்கியநாதன் தொ
வரசியடக்கி நமவிணைவழிகண்டால்
தேசிகவடிவுடன் தெரிசனந்தருவார் தொ
பாலகிருஷ்ணன்பணிந் தேத்றியபாதன்
கோலச்சிலம்பணியுங் குண்டலநாதன் தொ

கீர்த்தனம்-இ-ம-இந்துஸ்தான்-ரூபகதாளம்

பல்லவி.

திருநாளைப்போவார் தெரிசனங்காணத்
தில்லைமூவாயிர முனிகள்வருகிறார் திரு
பத்திவெள்ளமது கரைபுரண்டோடும்
பரமானந்தக்கடல் முழுக்காட்டும் திரு
அரகரசங்கர சிவனென்றுசொல்லும்
அநித்தியசடத்துக்க மாயத்தைவெல்லும் திரு
அடியவரோமெத்தப் பெரியவனென்று
அம்பலவாண ரருள்விடைகொண்டு திரு

இதுவுமது சிந்து

பதம்-இ-ம்-செளராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தார் பாரும்-நந்தனார்தம்மைத்
தில்லைமூவாயிரவர் யாரும்

காடுஞ்சதுர்வேதப்பிர காசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதநடன சபேசனை
ஆவலாகத்தொழுதேவரும் நேசனைத்-தேடி

சரணங்கள்

தண்டாமரைமலர்த் தடமும்மாதர்களாடிக்
கொண்டானடித்திடு மிடமும்அன்னமளிக்க
உண்டானந்தங்கூரு மடமும்சோரர்பரவுஞ்
சண்டாளர்வாழும்வா டிடமும்அன்றிச்சூத்திர
சாதிமுதலானபல வாடையும்பல்லாண்டு
ஓதியுலாவிவரு மேடைமறுவிக்கியான
நீதியணர்ந்தோர்கள் மாடமின்னமும்பல
மாதிரிகளாகுந்திண்ணை மேடைஉன்னதமாக
கொங்குமிகுத்தருவெங்குழணைத்திடுஞ் சோலைகருப்பஞ்சோலை
தங்குமுயர்ந்துகதித்திடும்வாழையின் சோலை-தாழையின்சோலை
தெங்குமிலுப்பையுமொன்றுபொருந்திய சோலை-காவினற்சோலை
துங்கமதானபலாக்கமுகோங்கிய சோலைமற்றுள்ளசோலை
எங்குஞ்சுற்றிபபார்த்துமறையோர்கள் தங்கள்தங்களங்கமேங்க
நதிபிதமும்
பொங்கரவணிதசிவசங்கரன் கிருபையிதென்றே யோங்க
கூக்குரலிட்டுச்
சங்கையறச்சென்னியிற் கரங்களைக்குவித்தெங்களைத் தாங்க
மனமுவந்து
இங்கேயெங்கள்பங்கினிலிருந்து பேழைவருத்தம் நீங்க
கிருபைசெய்தற்கு
உன்னதேகடனென்று உவந்துகொண் டாடி
உரியவேதமந்திராதிகள் பாடி
முன்னஞ்சொன்னநந்தனர்வர நாடி
மூளுங்கோடைக்காற்றெனவிரைந் தோடி
தேடித்தேடித்திரிந்தார்பாரும்-நந்தனர்தம்மை

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லை மூவாயிரவர்களுந்தேடி அலுத்து ஓரிடத்தி ல்யாவருங்கூடி சுவாமியைத்துதிசெய்கிறதென்று நிச்சயஞ்செய்து தோத்திரஞ்செய்கின்றார்.

தரு-இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி

உன்னுடமகிமையை யொருவரறிவார்களோ
உலகிலுள்ளோனையனே

சரணங்கள்

கனவிலேவந்தெங்களுக்குச்சொன்ன — அந்த
காரணமறிந்ததிகாலையிலே — யெழுந்த
இந்தத்தார்நாங்கள்யாரு மிசைந்தொருமித் — திந்த
எல்லாருமுழுதுந்தேடி யிளைத்தோமெங்களுக் — கந்த
இணையில்லாதநந்தனரு — மகப்பட
வில்லையென்னசெய்வோம் — ஸ்திரப்பட-உன்ன
அடையவர்திரிபுர மனலாகவே — முடித்த
வன்பாகமான்மழுவுங்கையிலே — பிடித்த
விடப்பாகனேகாளி வெட்கும்படி — நடித்த
மெய்ப்பாதுயர்தவித்தானையாவென்றே — படித்த
வாறுநீயறிந்தருள்செய் — ஐயனே
வனசங்கர்பதசரணத் — துய்யனே-உன்ன
அன்னைசிவகாமியுடனினம்வளர் — தில்லை
யம்பொன்னகர்வருவோர்க்கரசொருதூய — தில்லை
உன்னையன்றி யுலகத்துட்பொருளு — மில்லை
யுத்தமனேயெங்கட் குரியதுணையு — மில்லை
ஓதுநந்தனார்தமைவரச் — செய்யும்
ஊழ்வினைதவிர்த்தவர்க்கு அருட் — செய்யும்-உன்ன

வசனம்.

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லைமூவாயிரவர்களனைவரும் நந்தனாரைத்தேடி யழைத்துவருமார்க்கத்தில் ஒதுப்புறமாக நின்றுக்கொண்டிருந்த நந்தனார் வேதியராக்கண்டு தூரவிலகிநின்று தலைவணங்கிச் சொல்லுவார்.

விருத்தம்.

இட்டமுடனடிப்பணிந்துமனமொடுங்கித்தவம்புரியுந்தில்லைமன்று
ணட்டமிடுநடராஜன்கனவின்கண்சொன்னமொழிநம்பிக்கொண்டு
இட்டமுடன்திருநாளைப்போவாரிடம்வேதியர்களெகும்போது
இட்டிநெருங்காதையுமென்றேவிலகியோர்வார்த்தைகேளீரென்றார்

கீர்த்தனம்-இ-ம்-செங்கலா-ரூபகதாளம்

பல்லவி

கிட்டநெருங்கிவருகாதே சுவாமி-காதில்
கெட்டபேர்க்குப்பாவம்வரு மெனதுஜென்மம்பூமி-கிட்ட
சிட்டர்புகழுந்தில்லைதன்னில் செழித்துவாழும்வேதியர்காள்
இஷ்டமிதுவல்லவே யென்றுசொல்லவேணுமோபுலையன்-கிட்ட
உலகினில்கடைச்சாதியெந்தனுக் குவமையாருமில்லையே
பலவிததுஷ்கருமஞ்செய்து பாரில்வந்தபுலையன்-கிட்ட
வேலைசெய்துவுடம்புவளர்க்க வேணுமென்றநாயடியேன்
தோலுமெலும்புமிரும்புமுதுகில் சுமந்துஅலையும்புலையனே-கிட்ட
செத்தமாடிபூப்பதெனது சேவகம்பரம்படித்துயெல்லை
சுத்திவந்துதமுக்கடித்துச் சுடலைக்காக்கும்புலையனே-கிட்ட

வசனம்.

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவானைப்பார்த்து வேதி யர்கள் சொல்லுவார்கள்.

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி

சாதியிலுயர்ந்ததாலென்ன-இந்தப்பேரும்பெருமையில்லையே
சாதிப்பெருமைகொண்டதாலே சங்கரனாருகில்வந்து
ஆதரவுடன்வரங்களீய்ந்து அழைப்பாரோபார்ப்பாரோசேர்ப்பாரோ
அளிபெருகவேயீசன்கழலை யறிவிலுன்னியடிபணிந்து
தெளிந்திடாதபேனாமுத்தி தேடுமோநாடுமோகூடுமோ சாதியி

வசனம்.

இப்படிச்சொல்லியபின் தாங்கள்வந்தகாரியம்பேசுவார்.

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்

ஐயரேயம்பலவாருடரரவிப்பொழுதணைந்தோம்
வெய்யவழலமைத்துமக்குத்தரவேண்டியெனவிளம்ப
நையுமெனத்திருத்தொண்டர்நானுய்ந்தேனெனத்தொழுதார்
தெய்வமறைமுனிவர்களுந்தீயமைத்தோமெனமொழிந்தார்

வசனம்

ஐயரே நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்விதாகிய அ
க்கினியைமூட்டி உமக்கு அதில் முழுகும்படி கொடுக்கவந்தோமென்றுசெ

ல்ல இளகியமனதையுடைய திருநாளைப்போவார் அடியேன் கட்டை கடைத்தேறினேனென்று அவர்களைத் தொழுதார் தெய்வீகமாகிய வேதத்தையுணர்ந்த பிராமணர்களும் தீவளர்த்திறேமென்றுசொல்ல நந்தனார் கேட்டு சந்தோஷமடைந்து நானின்றைக்குத்தான் முத்தனானேனென்று வேதியர்களைப்பார்த்துச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன்-பவக்-கடல்கரையேறிவந்தேன் கண்
சோதிமறைமுடிவாஞ் சொல்லிரந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியவானுமைக் கண்
எல்லையைக்காணுமுன்னே யிருள்விலகுமுங்கள்
தொல்லைகட்டுமுன்னே துன்பங்கள்தீர்த்திடக் கண்
கள்ளங்கருகச்செய்யுங் கண்ணுதலேயுங்கள்
உள்ளங்குடியாய்க்கொண்டா ருங்கள்தெரிசனம் கண்

வசனம்

நந்தனார் நான் சின்னசாதியாயிருந்தபோதிலும் தெய்வமிரங்கிற்றென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-கனுசரி-ஆதிதாளம்

எனக்குமிரங்கிற்றோ-நான்மெத்த-ஈனசாதியல்லவோ
தனக்குள்தானயிருந் தகிலப்பிரபஞ்சமுந்
தன்னுளடக்கிய பொன்னம்பலவன்கிருபை எனக்கு
அல்லும பகலு மருந்தவஞ்செய்யினு
மறியாரொருவருமம்பலத்தெய்வம் எனக்கு
நான்குமறைமுடிவும் நானறியேனென்
றோதியவுண்மை உலகமறிய எனக்கு

வசனம்

நந்தனார் என்னதவஞ்செய்தேனோ இவ்வுலகின்கண் யாவருக்கும் கிடைக்காதபாக்கியம் கிடைத்ததென்றுசொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்

அம்பலவாணனைத் தென்புலியூரானை நம்பிப்பணிந்தேனே
அர்ச்சனைசெய்து கும்பிட்டிருந்தேனே
தில்லைப்பதியில்வந்து எல்லைகடந்தேனென்று
அல்லலறுத்தேனே-சஞ்சித-வினையெல்லாம்வறுத்தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித்தேனே-முக்குணங்களைத்-தாண்டிக்கதித்தேனே

சந்தனனைதென்றெந்தவேளையு ாயுஞ்
சிந்தைகழுவிற்றோ சேர்ந்தவனென்று தந்தைதழுவிற்றோ
தெள்ளுந்தமிழ்ப்பாடி யுள்ளமுருகியுள்ளில்
கள்ளங்கருகிற்றோ கருத்திலெட்டா வெள்ளம்பெருகிற்றோ
ஆசைவலையைப்போட்டு மோசப்படுத்துஞ்சில
பாசங்குலைத்தாரோ-அளவிடாத கிலேசந்தொலைத்தாரோ
பெண்ணரிமொழுக் கொண்ணுந்தெனச்சடைத்
தண்ணுந்தணைந்தாரோ-கருணைபொங்குங் கண்ணாலணைத்தாரோ
அடுத்துவந்தவனென்று பிடித்தபேய்களையோட்டி
தடுத்தாளக்கொண்டாரோ-பரம்பதங் கொடுத்தாளக்கண்டாரோ

திருநாளைப்போவார் புராணம்

விருத்தம்.

மறையவர்கண்மொழிந்ததற்பின் றென்றிசையினம்பிற்புறத்திற்
பிறையுரிஞ்சுந்திருவாயின் முன்னாகப்பிஞ்ஞகர்தன்
நிறையருளால்மறையவர்க ணெருப்பமைத்தகுழியெய்தி
யிறையவர்தாள்மனக்கொண்டே யெரிசூழவலங்கொண்டார்

வசனம்.

அப்படிப் பிராமணர்கள்சொல்லினபின்பு தென்றிசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைது தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்கும் திருக்கோபுரவாசலுக்கு முன்னே சுவாமியின் நிறைந்த திருவருளோடுகூடிய கட்டளையால் பகர்ந்திருக்கின்ற நெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில்தியானித்து அக்கினியைச்சுற்றி வலமாக வந்தார்.

இதுவுமது-விருத்தம்.

கைதொழுதுநடமாடுங் கழலுன்னியழல்புக்கார்
எய்தியவப்பொழுதின்க ணெரியின்கண்மாயப்
பொய்தகையுருவொழித்துப் புண்ணியமாமுனிவடிவாய்
மெய்திகழ்முந்நூல்விளங்க வேணிமுடிகொண்டார்.

வசனம்.

கையாற்கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களை மனதில் உறுதியாகநினைத்து அக்கினியில்புகுந்தார் அப்படிச்செய்தபோது அந்தநெருப்பில் இந்த உலகசம்பந்தமாகிய நிலையில்லாத உடலத்தை யொழித்துப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின்வடிவாய்த் தேகத்தில் பூநூல்விளங்கச் சடைமுடியோடும் எழுந்தார்.

கீரததனம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

யாகோற்பவமானார்-நந்தனார அருளால
யாகோற்பவமானார

அநுபல்லவி,

யோகமாதவரும் போகவாழ்வினரும்
வேமாகவிரை வாகவந்துதொழ (யாகோ)

சரணங்கள்.

சிவனருளைக்க வாசிப்ப-சிந்தநந்திலெண்ணி
சிறந்தேமிகசி லாகிபம
தவறுவனேக பாக்கியப-பொருந்தவேடம்
தன்னைக்கொண்டே யோகியம
தபனனுருவுயா கவனமேவிவரு
மெவருங்காநதருவ மெவருங்கண்டுதொழ-யாகோற்
கையைநசிரமேற பநிக..-சிவனெயென்று
கனகசபையைத் துதிதது
செயயகுண்டததிற குதித்து-கதிரவன்போல
செனிததுததேவாபுகழ நடிதது
சித்தியாகியபதம முற்றுமபாமபுபுவி
பதறியாகியபதம பததளைககண்டுதொழ-யாகோற்
காதிறகுண்டலம் மிலங்க-முப்புரிநூலுங
கதித்தமாரபிட மலங்க
ஓதுஞ்சடைகள் குலங்க-அவனைவிட்டு
ஒடுயேவினை சலங்க
ஏகமறறசதுர வேதமோதிவரும்
நீதிவேதியாகள போதமெனவந்துதொழ-யாகோற்

திருநாளைப்போவார் ... ரானைம்,

செந்தீமேலெழும்போதுசெமமலரமேலவந்தெழுந்த
அந்தணன்போறமுனிறைநராதரநமிநாதம
வந்தெழுந்ததிருவிசபபிலவாலைபமிறந்தேபாநதப
பைந்துணரயந்தாரதிணடலிலமாபாரிமளமெழிநார.

வசனம்.

சிவந்தமேநப்பிரகின்றமேரழுந்தபொழுதுசெந்தாமரைப்பூவைப்
தின்மேலுதயமாயெழுந்தருளிய பிரமனைப்போல பிரகாசிந்தாரயே

ருமைபொருந்திய ஆகாசத்தில் அந்தரதுந்துமியின் சேர்விடமானதுண்டாயிற்று தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பக விருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷயாகச்சொரிந்தார்கள்.

இதுவுமது-விருத்தம்.

திருவுடையதில்லைவாழுந்தணர்களுந்தொழுதார்
பாவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிப்பயின்றார்
அருமறைசூழ்திருமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர்.

வசனம்,

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள் பாவுதற்கரிய மற்றைச்சிவபத்தர்களுந்தொழுதுமனதில்களிப்படைந்தார்கள் வேதங்கள்முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்ற பாதத்தைவணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகியவொருவேதமுனிவர்வருகையில் ஆனந்ததாண்டவத்தை வருணித்துச் சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

பல்லவி.

தாதெய்தெய்தெய்யென்றுடுவார்-அவர்
தத்தித்தெய்தத்தித்தெய்யென்றுடுவார்
ஆதிபராபரமாகியசித்து
ஆனந்தக்கொண்டொருகாலையெடுத்துத் தாதெய்
அண்டசராசரமெங்கும்நடுங்க
ஆதிசேடனார்முடிகணெருங்க தாதெய்
சிலம்பொருந்தியமுனிவர்கொண்டாட
திங்களைச்சூடியசெஞ்சடையாட தாதெய்
பார்புகழுந்தில்லைசிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேற்றியபாதன் தாதெய்

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி,

குஞ்சிதபாதத்தைத்தாரும்-மன-சஞ்சலபாவத்தைத்தீரும்

அநுபல்லவி.

செஞ்சிலம்பசையக் கனகசபைதனில்
ஜெணுதத்தகஜெணுதந்திமி திமிதத்தேமென்றாடிய-குஞ்

சரணங்கள்,

நெஞ்சிற்கவலையை யாற்றும் இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும்-நாளும்
வஞ்சிசிவகாம வல்லிமகிழ்ந்திடும்
தஜ்ஜெம்தக-ஜெந்தரிஜெ-தங்கிடதோ மென்றாடிய-குஞ்

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

தில்லைவாழந்தணர்களுடன்சொல்லச்சென்றெய்திக்
கொல்லைமான்மழுபுரிந்தார்கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுட்புக்காருலகுய்யநடமாடும்
எல்லையினைத்தலைப்பட்டார்யாவர்களுங்கண்டிலரால்

வசனம.

சைவபுராணமாகிய பெரியபுராணத்தில் திருநாளைப்போவார்நாயனாரென்னுமியற்பெயர்சேக்கிழார்சுவாமிகள் சொல்லியிருப்பதால்இடையின்நந்தமாமுனியென்றுவழங்குகின்ற நாளைப்போவார்தில்லைமூவாயிரமுனிவர்களோடேகூடி பொன்னம்பலம்வந்தார் அதற்கப்பால்அவரைக் கண்டபேர்களில்லையென்று பெரியபுராணம்பாடியருளியசேக்கிழார்சுவாமிகள்சொன்னது அந்தத்திருநாளைப்போவாரென்னு முனிவரானவர் புரட்டாசிமாதம் உரோகணிநட்சத்திரத்தில்கனகசபையில்வந்துகற்பூரஜோதியைப்போல்தோன்றி சிவசாரூப்பியத்தையடைந்தாரென்று உபமன்னியமகாரிஷி புண்ணியபத்தர்விலாசத்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுவுமது-விருத்தம்

அந்தணர்களதிசயித்தாரருமுனிவர்துதிசெய்தார்
வந்தணைந்ததிருத்தொண்டர்தம்மைவினைபாசமறுத்து
சுந்தரத்தாமரைபுரையுந்துணையடிகடொழுதேத்த
வந்தமில்லாவானந்தப்பெருங்கூத்தரருள்புரிந்தார்

வசனம.

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள்அரியமுனிவர்கள் தோத்திரஞ்செய்தார்கள்முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளுகிறசபாநாதரது கட்டளையால்வந்தடைந்த திருநாளைப்போவார்க்குத்தீவினையாகியகளங்கத்தைநீங்கிய அழகாகியதாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருள்செய்தார்.

விருத்தம்.

மாசுடம்புவிடத்தீயின்மஞ்சனஞ்செய்தருளியெழுந்
தாசின்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார்
தேசுடையோர்வாழ்த்தத்திருநாளைப்போவாரும்
பாசுகலமுயன்றுதிருநடங்கண்டுபேசிழ்வுற்றார்.

வசனம்.

தமக்குமுன்னிருந்தஉடலமாகியமாசுதீரும்பொருட்டுஅக்கினியாகியதிருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்றபிராமணமுனிவராகிநடேசரு

டையதிருவடியையடைந்தவராகியதிருநாளைப்போவாருடையபதத்தைப்புகழ்ந்து தீவினையாகியகயறு அறும்படி தில்லைமூவாயிரவர்கள்போற்றிசெய்துக்கொண்டிருந்தார்கள்.

வாழிவிருத்தம்.

பங்கயமாதவர்வாழி பார்மகளுமையள்வாழி
செங்கண்மாலயனும்வாழி தேவர்கந்தருவர்வாழி
தங்குநான்மறைகள்வாழி தாரணியரசர்வாழி
பொங்குநூல்வல்லோர்வாழி போதமென்நாளும்வாழி

மங்களம்.

ஓரடி-தரு, இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி,

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம்-எங்கள்
தில்லைமூவாயிரர்க்குச் சுபமங்களம்

அனுபல்லவி.

இருடிகள்முனிவர்க ளீததிசயமென
விருகரமுடிமிசை மருவத்துதிசெய்கன
பரவும்ப்பாசப் பிரமங்கள்துதித்திடும்
பரமனுமேம் பலத்தினில்கதித்திடும்-திரு

சரணங்கள்.

திருவாசகமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்துச் சிறந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடந்தூதுக் குகந்துவிடுத்தவர்க்கும்
ஒளவரொப்பிலர்த்திரு நாவுக்கரசருக்கும்
உரியமறைக்கு மூயர்கலைகட்கும்
உரகபதிக்கும் உவணபதிக்கும்
ஒதுசந்ரசூரியர் முனிவர்களுக்கும்
தீதிலாதபா வலர்முதலனைவர்க்கும்-திரு

நந்தனார் திவ்வியசரித்திரக்கீர்த்தனை

முற்றிற்று.

உ

சிவமயம்



சிதம்பரக்கும்மி.

விநாயகர் துதி.

சீர்மேவுந்தில்லையம்பலத்தின்-அன்பு
சேர்க்குமித்தமிழ்ப்பாட
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார்காப்பாமே.

முக்குறுணிவிநாயகர் தோத்திரம்.

சர்க்கரைமோதகந்தேங்காயுங்-கொண்டு
சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையானைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி

சுப்பிரமணியர் துதி.

கோலமயிலின்மீதேறி-வந்து
குப்பமுனிக்கு அருள்செய்யும்
பாலசுப்பிரமணியன்பீஜாட்சரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி.
கங்காதேவிக்குக்கைகூப்பி-யாருங்
கையெடுத்துள்ளோபாணம்பண்ணி
தங்கமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துகும்மியடியுங்கடி.

கருதுஞ்சுருதிக்கெட்டாத-சிவ
காமசவுந்தரிவாசலிலே
விருதுபேசியேசிறுகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி ௫

நாலுபுறத்திலுங்கோபுரமா-மதி
நடுவிலெங்கனுமாளிகையாம்
காலோராயிரங்கொண்டொருமண்டபங்
கட்டியிருக்குதுபாருங்கடி ௬

தூயமறைமூகலாராய்ந்து-இங்கே
துலங்கியமூவாயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிகும்மியடியுங்கடி ௭

சாந்துப்பொட்டுதளதளென-நல்ல
சந்தனவாடைகுழகுமென
கூந்தலழகிகளெல்லோருங்காலைக்
குவித்துகும்மியடியுங்கடி ௮

அஸ்தகடகம்பளபளென்ன-சொல்லும்
அரைதோள்மாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுக்கொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி ௯

கைதனில்விபூதிப்பையுங்கொண்டு-அவர்
கண்டத்தில்ருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைசெய்கின்றதீட்சதர்
வாழக்கும்மியடியுங்கடி ௰

கோவிலுக்குநாலுபேர்களுண்டாம்-அவர்
குறித்தமுறையாய்ப்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
படுத்துவாரென்றேகும்மியடியுங்கடி ௧௧

ஆண்டுக்குள்ளாரபிஷேகமுண்டாம்-பின்னும்
அதிலேரண்டுத்திருநாளாம்
வேண்டிவந்தார்கலிதீருமென்று
விரைந்துகும்மியடியுங்கடி

பூமிபுகழ்ந்திடுந்தில்லைப்பதி-அது
பூலோகக்கயிலாசமென்று
தாமரைப்பூவினில்வாழ்கின்றலட்சுமித்
தாயார்சந்நிதிபாருங்கடி ௧௩

பெயர்.	பக்கம்.
நந்தன்சிதம்பரம்	கூ0
நந்தனனந்தபரி	அக
நந்தனுநம்வந்தார்	சஅ
நந்தாவொருசேதி	ருஉ
நந்தாவுனக்கிந்த	ருஅ
நந்தாவுனக்கிந்த	எஅ
நந்தாவுன்கனவி	அ௯
நமக்கினிநமப	கூஉ
நந்தாநீகுருவுப	அஎ
நாளென்னசெய்	௯எ
நாளைப்போகாம	உச
நீசனுய்ப்பிறந்தா	௱க
பத்திசெய்குவீரோ	அ
பத்திகள்செய்தா	ச0
பத்திபண்ணனிக்	ருக
பறையாநீசிதம்பர	ருக
பாடுவாய்மன	ருரு
பார்த்துப்பிழையு	சக
பித்தந்தெளியப்	கூ௰
பித்தனுய்ப்போன	,,
பண்ணுகியவிந்த	ச[illegible]
பெரியகிழவன்வ	௯கூ
பெரியோர்களம்	எ௯
பேசுதும்போது	௱உ
மற்றசெல்லாம்	உக
மாங்குயில்கூவிய	கூஉ
மாடுதின்னும்	கூஅ
மார்கழிமாதந்திரு	கூஎ
மார்கழிமாதத்தி	கூரு
மீசைநரைத்து	௯ரு
வருகலாமோவை	௱ச
வருவாரோஅரு	௱௰
வருவார்வருவார்	௱க
வருவாரோவரந்த	௱௰கூ
வழிமறைந்திருக்	கக௯
வாராமலிருப்பா	கக௰
வாரிருக்குதோ	க௯
வானோர்புகழ்தில்	கூஎ
விருதாச்சென்ம்	கககூ
வேதம்படித்தது	கூகூ
வேதியரனைமைப்	அ[illegible]

சங்கரா

பெயர்.	பக்கம்.
அரகரசிவசிவ	ச௰
ருசித்தார்	உச
வீரன்	௯எ

பெரியகடுக்கா

பெயர்.	பக்கம்.
திருநாளைப்போ	௯ச

தென்டகம்,

பெயர்.	பக்கம்.
தத்திப்புலிபோ	ச௰

கூசிளாகம்

பெயர்.	பக்கம்.
மென்னாப்பேசி	கரு
தேவாரங்கள்	க௯உ

தரு அகராதி

பெயர்.	பக்கம்.
அடடாவனந்தனை	கூக
அதிசயமொன்	கஉ௰
அய்யாசொல்லு	அரு
அரகரதிரிபுராந்தக	௱ச
ஆனந்தக்கூத்தா	கூஉ
இனிஉன்குற்றத்	எ௰
உன்னதமகிமை	உச
ஏதுக்கென்பிறு	கூஉ
கணநாதசரணம்	ச
கொண்டாடைடிக்	௱
சிந்தனைசெய்து	சரு
தடாகமொன்று	உஉ
திருப்புந்தனமாத்	எச
நந்தனுமேயன்ற	அக
பத்தியாகநான்	கூரு
பொன்னைப்பலவா	கூச
யாகோற்பவமா	கஉகூ

நொண்டிச்சிந்து

பெயர்.	பக்கம்.
ஐயேவொருசேதி	சகூ
பழனமருங்கணையு	கூ
அடடாயிதென்	[illegible]
அவர்க்காரு	கரு
இதுதானே	௱ரு
இவர்வெகு	கரு
களிவிருவாகி	[illegible]
திருப்புரான்டமு	ககக
தென்டாமணி	[illegible]
சிவன்வேடிக்	[illegible]உ
செய்யும்பலனி	கூ
நாளைப்போவே	[illegible]உ
பழனமருங்கணை	க௯
பார்ப்பாரஜாதி	[illegible]
பெரியோரிருக்கு	௱ச
பேனைச்சாருந்	உ[illegible]

கண்ணி அகராதி

பெயர்.	பக்கம்.
கனையெடாபால்	எச
செந்தாமரைமலர்	சரு
வாருங்கள்	உரு

பத அகராதி

பெயர்.	பக்கம்.
தேடித்தேடித்	கஉ௰

திபதை அகராதி

பெயர்.	பக்கம்.
ஆனைநேசருக்	கூக

தோடய அகராதி

பெயர்.	பக்கம்.
திருவளர்தருமாத	எ

மங்களம்

பெயர்.	பக்கம்.
திருநாளைப்போ	௱ச
ஆதிமந்தியாந்தனுக்	அ

சிதம்பரக்கும்மி

பெயர்.	பக்கம்.
சீர்மேவுந்தில்லை	க௯க

ஆனந்தக்களிப்பு

பெயர்.	பக்கம்.
காணுதகண்ணெ	கூஅ
காணமலிருக்கலா	உரு
நந்தாநீசிவபத்தன்	அஉ
இநச்சொல்அலங்	கூ
நந்தனர்சிவனே	அ
நந்தனர்சிவதல	ரு
நந்தனர்தில்லைய	உகூ
நந்தனர்தில்லை	கூ[illegible]

அகராதி.

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்	பெயர்.	பக்கம்.
அகவல்.		கலித்துறை.		நந்திரா	௨௰
புலையர்-எல்லைப்பி	௧௮	அண்டபரண	௧௧௪	மாளாப்பிறவி	௨௨
பாக்கியமீதென்	௨௧	மாவளர்தில்லை	௭௯	சவாயி.	
ஏசல்,		அக்கடா.		கலப்வந்து	௧௮
புலையர்-பாரப்பா	௨௧	அரஅர	௫௪	சிவலோக	௧௯
புலையர்-ஆண்டிம	௧௰	சட்டமாக	௨௧		

கீர்த்தனைகளின் அகராதி-முற்றுப்பெற்றது.

விருத்தங்களின்-அகராதி.

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
அடிமுடியொன்	௭௫	காலவுல்	௨௪	தில்லைவாழந்த	௧௯௫
அடியவர்கள்	௮௪	காலமோவநானி	௪௮	நாளைடபோவே	௬௯
அந்தணர்க	௧௯௫	கைதொழுது	௧௨௨	நாடபதுவேலி	௬௧
அய்யரோடாரும்	௭௮	கொளவிலையும்	௪௭	மின்றவரார்	௱௪
அல்லெனுங்குழ	௬௭	சகைரம	௮	பகர்ந்தளந்	௧௯
அவப்பொழுது	௮௭	சாதியின்முறை	௯௪	படிபுகழுதில்லை	௫௰
அறிவுமிருந்	௭௪	சாதிசமம	௪௯	பனையானவயு	௮௰
இத்தகமைசேசர்	௨௯	சாதிபேதநின்	௧௧௨	பிதசமது	௬௰
இதனைநாட்	௯௬	சாதநிரகட்டை	௮௬	புதரசொல்லி	௱௭
இப்பரிசாயிருக	௬௬	சிலைபணிந்திடும்	௯௮	பொய்ச்சடலம்	௯௪
இப்பரிசாயிருக்	௧௧	செந்தீமே	௧௨	மறக்கிழவ	௧௨௧
இப்பிறவிபோய	௧௧௬	சேரிபினை	௨௰	மறையவர்கள்	௧௨௪
இரவுபகல்	௬௪	செல்கின்றபெரர்	௱௧	மனக்கண்ட	௯௯
இவ்வணணமிர	௧௧௫	சேரிவந்தவர்	௨௪	மாசுடம்பு	௧௯௫
இன்னாக்கரு	௧௭	தமபெருமான்	௧௨௧	வக்கணைக்காரா	௨௯
உரிச்சிவிட்டு	௧௫	தவமபெறு	௯௨	வணக்கமாய்ச்	௪௯
ஐயரேயமபலவ	௧௨௫	சாரில்வந்த	௭௫	வாட்டுவாருடல்	௱௯
ஓதியடிவீரா	௫௨	திட்டமுடனை	௧௨௪	வானமேவிய	௪௮
ஓங்காரமென்று	௪௪	திருமனமயோ	[illegible]	வானிருந்த	௭௨
கவைக்குந்தியுர்	௭௬	திருப்புன்கூரச்	௬௫	வேதமோடமந்	௮௭
கதிரொருபுற	௫௬	திருவுடைமதில்	௧௯	வேதியசிப்படி	௪௪
கழனிவைதைதப்	௪௪	தில்லையில்போக	௪௧	வேதியரோ	௫௧
கறையடிகண்ட	௮௨	தில்லையைக்	௧௫		

திருநாளைப்போவாரென்னும்
நந்தனார்சரித்திரக் கீர்த்தனை.

முற்றிற்று.

பல்கலைக் கழக நூலகம்
4 APR 1988